விலை : 20.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 28 புதன்கிழமை (13.09.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 268

WESTERN UNION
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

# "ஐ.நாவின் அவசரத்துக்கு எம்மால் ஆட முடியாது"

## மேலும் கால அவகாசம் வேண்டும் – இலங்கை



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அவசரத்துக்காக எம்மால் எதனையும் செய்ய முடியாது எனத் தெரிவித்துள்ள உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலை அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, பொறுப்பு கூறல்களை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசுக்கு மேலும் கால அவகாசம் வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

(04-ம் பக்கம்...)

## 2 கிலோ கஞ்சாவுடன் இளைஞர் கைது

(மல்லாவி)

வவுனியா பொலிஸ் நிலையப் பிரிவில் வவுனியா நகரப் பகுதியில் உள்ள அரச பேருந்து நிலையத்தில் வைத்து 02 கிலோவும் 240 கிராமும் நிறையுடைய கேரளக் கஞ்சாவுடன் கரவெட்டி

24

## 12 இந். மீனவர்கள் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறிப் பிரவேசித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று ஊர்

24

## இரணைதீவில் மக்களின் காணிகள் அடையாளப்படுத்தல்

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைதீவு மக்களின் காணிகளை அடையாளப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் நேற்று தொடக்கம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பூநகரி பிர

24

## சிறுமி மீது வன்புணர்வு; எதிரிக்கு 15 வருட சிறை

### வவு. மேல் நீதிமன்று தீர்ப்பு

(குருமன்காடு)

12 வயது சிறுமி மீது பாலியல் வன்புணர்வு குற்றம் புரிந்த நபர் ஒருவருக்கு 15 வருட கடூழிய சிறைத்தண்டனை வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

பிரஸ்தாப சிறுமியை பாலியல் வன்புணர்வு புரிந்த குற்றத்திற்காக 53 வயதுடைய புதுக்குடியிருப்பு பகுதியை சேர்ந்த உறவினர் ஒருவருக்கே 15 வருட கடூழிய சிறைத்தண்டனையை விதித்து வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன்

24

## குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வேலணை பாலத்தில் மீன்பிடித்துக்கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் மாரடைப்பு ஏற்பட்டதன் காரணமாக நேற்றைய தினம் திடீரென உயிரிழந்துள்ளார்.

ஊர்காவற்றுறை தம்பாட்டியை சேர்ந்த ஏழு பிள்ளைகளின் தந்தையான முத்தையா கனகசபை (வயது 69) என்பவரே

04

## 20-ம் திருத்தச் சட்டத்திற்கு தமிழரசுக் கட்சி ஆதரவு; தமிழர்களுக்கு ஏமாற்றமே!

### ஈ.பி.ஆர்.எல்.எவ் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

20-வது திருத்தச்சட்டத்தில் உத்தியோகபூர்வமாக திருத்தங்கள் செய்யப்படாத நிலையில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதாக கூறிக் கொண்டு 20வது திருத்தச்சட்டத்தை ஆதரிக்க போவதாக தமிழரசுக் கட்சியினர் எடுத்திருக்கும் நிலைப்பாட்டை ஈ.பி.ஆர்.எல்.எவ் வன்மையாக கண்டித்து

23

## 2018 ஜனவரியில் உள்ளூ. தேர்தல்!

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல், இவ்வருடம் நடைபெறாவிட்டாலும், நிச்சயமாக அடுத்த வருடம் ஜனவரி மாதம் நடைபெறும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்

24

## வித்தியா வழக்கில் வழக்கு தொடுநர் தொகுப்புரை

### ✷ 1-ம், 7-ம் எதிரிகளுக்கு எதிராக சாட்சிகள் இல்லை;
### ✷ ஏனைய ஏழு எதிரிகள் மீதும் குற்றம் நிரூபணம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பாடசாலை மாணவி சிவலோகநாதன் வித்தியாவின் படுகொலையுடன் தொடர்புடையதாக குற்றம் சாட்டப்பட்ட 9 எதிரிகளில் முதலாம் மற்றும் ஏழாம் எதிரிகளுக்கு எதிராக எந்தவொரு சாட்சியங்களையும் முன்வைக்க முடியவில்லை எனவும் ஏனைய ஏழு எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதாக வழக்கு தொடுநர் தரப்பு தெரிவித்துள்ளது.

அந்த வகையில் இந்த வழக்கில் இருந்து இருவர் விடுதலையாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலை வழக்கின் நீதாய விளக்க (ரயல் அட்பார்) விசாரணைகள், வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் முன்னிலையில் கடந்த

23

## உணவுப் பொதியில் 'குடு' பரிமாற்றம் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவருக்கு போதைப் பொருள்களுடனான உணவு பொதி ஒன்றினை வழங்க முற்பட்ட நபர் ஒருவரை யாழ்ப்பாண பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி உணவுப் பொதியில் குடு எனும் போதைப்

23

## பந்துலவிடம் வாக்குமூலம்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தனவின் வீட்டுக்கு நேற்று பிற்பகல் சென்ற பொலிஸ் மோசடி புலனாய்வு பிரிவினர், வாக்கு மூலமொன்றைப்

24

## பெற்றோல் குண்டு வீசித் தாக்குதல்

(பரந்தன்)

யாழ்ப்பாணம் வரணி நாவற்காடு பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது இனந்தெரியாதோரால் பெற்றோல் குண்டு வீசித்

23

## வீடு புகுந்து வாள்வெட்டு

### அண்ணன், தங்கை, அயலவர் படுகாயம்

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணம் சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் வீடு ஒன்றினுள் புகுந்த இனந்தெரியாத நபர்கள் வாள்வெட்டு தாக்குதல் நடத்தியதில் மூவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று இரவு 8.40 மணியளவில் சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி பகுதியில் உள்ள வீட்டினுள் நுழைந்த சுமார் 12 பேர் கொண்ட கும்பல் சரமாரியாக வெட்டியதில் வீட்டில் இருந்த மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

04



துருக்கிக்கான இலங்கை பாதுகாப்பு ஆலோசகர் கேர்ணல் கேமல் சுரயங், கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையாவை கடற்படை தலைமையகத்தில் வைத்து நேற்று கலந்துரையாடியுள்ளார்.

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

IELTS கற்பதுடன் எங்களது
கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றுங்கள்
கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற
Now prepare for your Academic / General
IELTS
Full time / Part time
Next exam date in Jaffna. 30th Sep. 2017
idp www.idp.com/srilanka
திருமணம் முடித்து Spouse
விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு (சி-9618)
IELTS Life Skills A1 B1
ஒரே தடவையில் மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்
சர்வதேச மொழிக் கற்கைநெறிகள்
ஜேர்மன், சுவிஸ் மொழிப் பாடநெறி Deutsch
நெதர்லாந்து மொழிப் பாடநெறி Dutch
பிரான்ஸ் மொழிப் பாடநெறி French
BRITISH COLLEGE of Education
More information 0777-596148
23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
565, Peradeniya Rd, Kandy. 13, 1st Chapel Rd, Colombo -6
British College of Educatin - IELTS பரீட்சை நிலையம்

இன்று நண்பகல் 12 மணி தொடக்கம்

# மின்சார சபை ஊழியர்கள் அடையாள வேலை நிறுத்தம்

(மல்லாவி )

இலங்கை மின்சார சபை ஊழியர்கள் நாடளாவிய ரீதியில் இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் எதிர்வரும் 48 மணி நேரத்திற்கு அடையாள வேலை நிறுத்தப்போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக, இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும் குறித்த காலப்பகுதிக்குள் தீர்வு கிடைக்காவிடின், நாளை மறுதினம் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் தொடர்ச்சியான வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கப்போவதாகவும் இந்த தொழிற்சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை மின்சார சபையின் பல நாள் பிரச்சினையான சம்பளம் உள்ளிட்ட சில கோரிக்கைகளுக்கு மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு யோசனைகளை முன்வைத்துள்ள நிலையிலேயே இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்வதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கை மின்சார சபையின் வடிவமைப்பாளர்கள் சங்கம், இலங்கை மின்சார சபையின் கண்காணிப்பாளர்கள் சங்கம் ஆகிய இரண்டு சங்கங்களும் இந்த சேவை நிறுத்தப் போராட்டத்தில் இருந்து விலகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே, இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-15)

A level's பரீட்சையின் பின்னர்.......
கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் முல்லைத்தீவில்
Full / Part time
Diploma in Spoken English
முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளிவரை தினமும் 4 மணித்தியாலங்கள் நடைபெறுவதுடன் பகுதிநேரப் பாடநெறிகள் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறுகின்றது.
Course Fee: Spoken English : 15250/= Diploma in English : 21000/=
COMPUTER COURSES MS-OFFICE DIPLOMA GRAPHIC WEB (சி-9618)
BRITISH COLLEGE OF EDUCATION
23, Kachcherinallur Rd, Jaffna. Tel : 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 02 -4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
565, Peradeniya Rd, Kandy. Tel : 081-4949590
13, 1st Chaphel Rd, Colombo-06. Tel : 011-2362775
IELTS Exam Centre
Hot line : 0777-596148
BRITISH COUNCIL IELTS Students Registration Centre


பாராட்டி
வாழ்த்துகின்றோம்
08.09.2017 அன்று இடம்பெற்ற ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 43ஆவது பட்டமளிப்பு நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த
செல்வராஜா ஜக்ஷன்
(B.Sc Public Management (Special)
செல்வராஜா தர்ஷா
(B.Sc Estate Management & Valuation (Special)
ஆகியோர் பட்டங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளனர். இவர்கள் மேலும் பல பட்டங்களைப் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:-
அம்மம்மா, பெரியமாமா குடும்பத்தினர், சித்தி குடும்பத்தினர் மற்றும் சின்னமாமா
(C-9619)

# மகிந்த மக்களிடம் மண்டியிட்டு மன்னிப்புக்கோர வேண்டும்

## அமைச்சர் ஹரிசன் தெரிவிப்பு



(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொதுமக்களிடம் மண்டியிட்டு மன்னிப்புக்கோர வேண்டுமென கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பி.ஹரிசன் தெரிவித்துள்ளார்.**

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது மகிந்த மற்றும் கூட்டு எதிர்க் கட்சியின் உறுப்பினர்கள் பாரியளவில் பொதுச் சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்துள்ளனர்.

பாரியளவில் பிரசாரத்திற்காக பேருந்துகளைப் பயன்படுத்தியும், அலரி மாளிகையில் விருந்துபசாரங்களை வழங்கியும் அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். ஆனால் இப்போது மகிந்த தரப்பினர் போலியான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## ‘ஜனாதிபதி தந்தை’ நூல் வெளியீடு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பற்றிய நூல் ஒன்றை அவருடைய மூத்த மகள் சத்துரிக்கா சிறிசேன வெளியிடவுள்ளார். "ஜனாதிபதி தந்தை" எனும் பெயரில் வெளிவரவுள்ள குறித்த புத்தகத்தின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் 15ஆம் திகதி கொழும்பில் இடம்பெறவுள்ளது.

தனது தந்தையின் அரசியல் வாழ்வு எவ்வாறு அமைந்திருந்தது என்பது தொடர்பில் தனது பார்வையில் அறிந்து கொண்ட விடயங்களை குறித்த நூலில் அவர் உள்ளடக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## முறிமோசடியை மூடி மறைக்க சில் துணி வழக்கினை அரசு பயன்படுத்திக் கொண்டுள்ளது

### பிக்குகள் முன்னணி கடும் விசனம்



இலங்கை மத்திய வங்கி பிணை முறி மோசடியை மூடி மறைப்பதற்கு சில் துணி வழக்கினை அரசாங்கம் பயன்படுத்திக் கொண்டுள்ளது என தேசிய பிக்குகள் முன்னணியின் பொதுச் செயலாளர் வகாமுல்லே உதித்த தேரர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாகவே அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத்தொடர்பு கட்டுப்பாட்டு ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் அனுஷ பெல்பிட்ட ஆகியோருக்கு எதிராக தண்டனை விதித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தேசிய பிக்குகள் முன்னணி நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த தண்டனையானது பொதுமக்களுக்கு எவ்வித பலனையும் அளிக்கவில்லை எனவும் இந்த தண்டனை தொடர்பில் கூட்டு எதிர்க்கட்சி வேறு விதமான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## பிரதியமைச்சர் அருந்திக அவுட்!



(கொழும்பு)

சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் பிரதி அமைச்சராக கடமையாற்றிய அருந்திக பெர்னாண்டோ உடனடியாக அமுலுக்கு வரும்வகையில் அவரது அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 46(3)(அ) உறுப்புரையின் பிரகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கேற்ப இந்த பதவி நீக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ-3)

## மகிந்த தலைமையில் புதிய கூட்டமைப்பு

### ஜி.எல்.பீரிஸ் தகவல்

நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், பொதுஜன பெரமுன மற்றும் ஒன்றிணைந்த எதிரணி என்பன ஒன்று சேர்ந்து புதிய கூட்டமைப்பின் கீழ் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் களமிறங்க இருப்பதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

பொறளையிலுள்ள வஜிராஷ்ரம விகாரையில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

## ஜெகத் மீதான பொன்சேகாவின் குற்றச்சாட்டு இராணுவத்தை தனது சொந்த நலனுக்காக சர்வதேசத்திடம் காட்டிக் கொடுக்கும் செயல்

### நாமல் ராஜபக்ஷ. குற்றச்சாட்டு



ஜெகத் ஜெயசூரியவுக்கு எதிராக சாட்சியமளிக்க தான் தயாராக உள்ளதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கூறியிருப்பது இலங்கை நாட்டின் இராணுவத்தை தாங்களது சொந்த நலனுக்காக சர்வதேசத்திடம் காட்டிக்கொடுக்கும் செயல் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார்.

இவ்வாறான மன நிலை கொண்டவர்கள் இலங்கை நாட்டில் ஆட்சியில் நிலைத்தால் இலங்கை நாடானது மிகவும் பாரதூரமான விளைவுகளை சந்திக்க நேரிடும் எனவும் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில அவர் தெரிவித்துள்ளார். தற்போதைய அரசு இராணுவத்தை சர்வதேசத்தின் முன் சிரம் தாழ்த்த முயற்சிப்பதாக நாம் பல தடவைகள் சுட்டிக்காட்டியிருந்தோம். சிலர் நாம் ஆட்சியை கவிழ்க்க இதனை செய்கிறோமா என சிந்தித்தனர்.

இன்று முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமான சரத் பொன்சேகா ஜெகத் ஜெயசூரியவுக்கு எதிராக யுத்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பின் சாட்சியமளிக்க தயார் என கூறியுள்ளமையின் மூலம் அது வெளிப்படையாக தெரிகின்றது.

ஜெகத் ஜெயசூரிய மீது யுத்தக் குற்றச்சாட்டுக்களை முன் வைக்கும் காலப்பகுதியில் பொன்சேகாவே இராணுவத் தளபதியாக இருந்தார்.

பொன்சேகா நினைத்திருந்தால் யார் எது சொன்னாலும் தனக்குள்ள அதிகாரத்தை பயன் படுத்தி தகுந்த நடவடிக்கை எடுத்திருக்க முடியும். அவர் அதை செய்யாமல் ஆதாரம் சேர்த்ததன் மர்மம் தான் புரியவில்லை.

பொன்சேகாவின் குற்றச்சாட்டில் "பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் உத்தரவின் பெயரிலேயே இது நடைபெற்றுள்ளதாக" கூறுகிறார். இவர் எங்கே எந்த நோக்கத்தோடு வருகிறார் என்பதை இதன் மூலமே அறிந்து கொள்ளலாம்.

அங்கு நடைபெற்ற யுத்த குற்றச்சாட்டுக்களின் பின்னால் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளார் என்பதன் மூலம் யுத்த விடயங்கள் அனைத்தும் கோத்தபாய ராஜபக்ஷ போன்ற உயர்மட்ட அரசியல்வாதிகளால் முன்னெடுக்கப்பட்டுள்ளதை இவர் ஏற்றுக்கொள்கிறார்.

ஆனால் யுத்தத்தை வென்றது நானே என தம்பட்டமும் அடிக்கின்றார். இது எந்த வகையில் நியாயமாகும்? இவர் முன்வைக்கும் குற்றச்சாட்டு உண்மையாக இருக்குமாக இருந்தால் இவர் பொய் தளபதியாக இருந்துள்ளார் என நாமல் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)



குடற்புண்ணிற்கு (அல்சர்) நிரந்தரசிகிச்சை

Special Treatment for Gastric Ulcer

சந்திரமாக அல்லது நாட்பட்ட நிலையில் ஏற்பட்ட இரைப்பை, சிறுகுடல் விரணங்கள் (Acute or Chronic Gastric & Peptic Ulcer), வயிற்றுவலி, வயிற்றில் எரிவு, சமிபாட்டுவேளைவலி, அடிக்கடி பசியுணர்வு, நெஞ்செரிப்பு, புளித்தஏப்பம், வாயில் மணம், காலையில் பித்தவாந்தி அல்லது வாந்தியுணர்வு, உணவில் வெறுப்பு அல்லது பசியின்மை, தொடர் விக்கல், கல்லீரலில் அதிகொழுப்பு, ஈரல் வீக்கம் (Fatty & Enlarged Liver), மற்றும் மலச்சிக்கல் அல்லது அடிக்கடி மலங்கழிக்கும் உணர்வு (Irritable Bowel Syndrom), உடற்பலவீனம், அமைதியின்மை, களைப்பு போன்ற பிரச்சினைகளுக்கு மருத்துவ ஆலோசனைகளுடன் கூடிய சிகிச்சைகளால் நிரந்தர குணம்பெறலாம்.

ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966, Dep Ayu - 6-3/1/2541)
மாங்களபதி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251



## இன்டிபெண்டன்ஸ் கிண்ணம்

# பாபர் அசம் ஜொலிப்பு; பாகிஸ்தான் வெற்றி

உலக லெவின் அணிக்கு எதிரான முதலாவது ரி20போட்டியில், பாபர் அசாம் துடுப்பாட்டத்தில் ஜொலிக்க பாகிஸ்தான் அணி 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

கடந்த 2009இல் லாகூரில் இலங்கை அணி சென்ற பஸ் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதன்பின் பாகிஸ்தானில் சர்வதேச கிரிக்கெட் நடக்கவில்லை. இதற்குப் பதில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பாகிஸ்தானின் சொந்தமண் ஆனது.

கடந்த 2015இல் சிம்பாப்வே அணி ஐ.சி.சி., அங்கீகாரம் இல்லாமல் சென்று போட்டிகளில் பங்கேற்றது. சமீபத்தில் சம்பியன்ஸ் டிராபி வென்ற பாகிஸ்தான் அணித் தலைவர் சர்பராஸ் அகமட்,' இனி மேலாவது எங்கள் மண்ணுக்கு வாருங்கள்' என வேதனையுடன் அழைப்பு விடுத்தார்.

**இந்தியா 'நோ'**

இதையடுத்து, மனம் இறங்கிய சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் (ஐ.சி.சி.,) மூன்று போட்டிகள் கொண்ட 'இருபது-20' தொடரை நடத்த முன்வந்தது. இதில் பங்கேற்கும் உலக லெவின் அணிக்கு தென்னாபிரிக்காவின் டு பிளசி தலைவராக உள்ளார். இந்திய வீரர்கள் யாரும் இதில் பங்கேற்கவில்லை. எட்டரை ஆண்டுகள் கழித்து பாகிஸ்தானில் நேற்று சர்வதேச போட்டி நடந்தது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வென்ற உலக லெவின் அணித் தலைவர் டு பிளசி, முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**பாபர் அரைசதம்**

பாகிஸ்தான் அணிக்கு பாபர் அசம், பகர் ஜமான் (8) ஜோடி சுமாரான ஆரம்பம் வழங்கியது. பவுண்டரிமழை பொழிந்த பாபர் அசம், 33ஆவது பந்தில் அரைசதம் அடித்தார்.

2ஆவது விக்கெட்டுக்கு 122 ஓட்டங்கள் சேர்த்த போது, அகமது ஷேசாத் (39) ஆட்டமிழந்தார். பாபர் அசம் 52 பந்துகளில் 86 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். சோயப் மாலிக் 38, அணித் தலைவர் சர்பராஸ் அகமட் 4 ஓட்டங்கள் எடுத்தனர்.

20 ஓவர்கள் நிறைவில் பாகிஸ்தான் 5 விக்கெட்டுக்களை இழந்து 197 ஓட்டங்கள் எடுத்தது. இமாம் வாசிம் (15) அவுட்டாகாமல் இருந்தார்.

பந்துவீச்சில் உலக லெவின் அணி சார்பில் திசார பெரேரா 2, மோர்னே மோர்கல், பென் கட்டிங், இம்ரான் தாகிர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

**கடின இலக்கு**

கடின இலக்கைத் துரத்திய உலக லெவின் அணியை தமிம் இக்பால் (18), அம்லா (26), டு பிளசி (29), பெய்ன் (25) என, வரிசையாக ஏமாற்றினர். மில்லர் (9), எலியட் (14), பெரேரா (17) என, பின் வரிசை வீரர்களும் அணியை கைவிட்டனர்.

முடிவில், உலக லெவின் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 177 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. சமி (29) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதனால் பாகிஸ்தான் அணி 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பில் ரம்மான் ரயீஸ், ஷாதப் கான், சொஹைல் கான் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.


போட்டியின் ஆட்டநாயகனாக பாகிஸ்தான் அணியின் பாபர் அசம் தெரிவானார்.

இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது போட்டி இன்று இதே மைதானத்தில் நடைபெறுகிறது.



## இந்திய XI அணியுடனான பயிற்சிப் போட்டி

# அவுஸ்திரேலியா வெற்றி



இந்திய போர்ட் பிரசிடென்ட் லெவின் அணிக்கு எதிரான பயிற்சிப் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 103 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலகுவாக வெற்றி பெற்றது.

இந்தியா வந்துள்ள அவுஸ்திரேலிய அணி ஐந்து ஒருநாள், மூன்று 'ரி20' போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

முதல் ஒருநாள் போட்டி வரும் 17ஆம் திகதி சென்னையில் நடைபெறவுள்ளது. இதற்கு முன், இந்தியா போர்ட் பிரசிடென்ட் லெவின - அவுஸ்திரேலியா அணிகள் மோதிய பயிற்சி போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

**வோர்னர் அரை சதம்**

அவுஸ்திரேலிய அணிக்கு ஹில்டன், டக்-அவுட்டானார். பின், இணைந்த வோர்னர், அணித் தலைவர் ஸ்மித் ஜோடி சிறப்பாக விளையாடியது. இருவரும் அரை சதம் கடந்தனர். வோர்னர் 64 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். வோஷிங்டன் சுந்தர் 'சுழலில்' ஸ்மித் (55) சிக்கினார். தன் பங்கிற்கு டிராவிஸ் ஹெட் (65), ஸ்டாய்னிஸ் (76) அரை சதம் அடித்தனர். மக்ஸ்வெல்14, வேட் 45 ஓட்டங்களில் திரும்பினர்.

50 ஓவர்கள் நிறைவில் அவுஸ்திரேலிய அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 347 ஓட்டங்கள் எடுத்தது.

போல்க்னர் (8), அஷ்டன் ஏகார் (8) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் இந்திய லெவின் அணி சார்பில் வோஷிங்டன் சுந்தர், படேல் தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

**மயாங் ஆறுதல்**

பின், களமிறங்கிய இந்திய லெவன் அணிக்கு ராகுல் திரிபாதி (7) ஏமாற்றினார். கோஸ்வாமி (43), மயாங் அகர்வால் (42) ஓரளவு கைகொடுத்தனர். நிதிஷ் ராணா (19) ரன்-அவுட்டானார். அணித் தலைவர் குர்கீரத் சிங் 27 ஓட்டங்கள் எடுத்தார். கர்னேவார் (40) ஆறுதல் அளித்தார். மற்றையவர்கள் ஏமாற்ற, இந்திய போர்ட் பிரசிடென்ட் லெவன் அணி 48.2 ஓவர்களில் 244 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியடைந்தது.

குஷாங்க் படேல் (41), ராகில் ஷா (3) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பில் அதிகபட்சமாக அஷ்டன் ஏகார் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

## 'ஐ.நாவின் அவசர...

காணாமல் போனோர் பணியகத்தை இலங்கை உடனடியாக செயற்படுத்த வேண்டும் என்றும், ஏனைய நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என்றும் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல் ஹூசேன் வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 36ஆவது கூட்டத்தொடர் நேற்று முன்தினம் ஜெனிவாவில் ஆரம்பமானது. இந்தக் கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"காணாமல்போனோர் பணியகத்தை இலங்கை உடனடியாக செயற்படுத்த வேண்டும். அத்துடன், இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள காணிகளை விடுவித்தல், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நீண்டகாலமாக இழுபறிப்படும் வழக்குகளுக்கு தீர்வுகாணல் உள்ளிட்ட, ஏனைய நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக அனைத்துலக மனித உரிமைகள் நியமங்களுக்கு ஏற்ப புதிய சட்டம் கொண்டு வரப்பட வேண்டும்.

அனைத்துலக மனித உரிமை மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகளுக்கு பொறுப்புக்கூறலை உறுதி செய்ய நம்பகமான நடவடிக்கைகளை இலங்கை எடுக்காதது, உலகளாவிய சட்ட நடவடிக்கைகளுக்கு இன்னும் அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது" என்றும் ஐ.நா ஆணையாளர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இது தொடர்பில் நேற்று ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல,

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் என்ற வகையில் நாம் பூரண ஆதரவுகளையும் உதவிகளையும் வழங்கியுள்ளோம். தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்ப்பதற்காகவே முழுமூச்சுடன் செயற்படுகின்றோம். நாம் நாட்டை நல்லிணக்க பாதையில் கொண்டு செல்ல அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றோம்.

இந்த சூழ்நிலையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அவசரத்துக்கு எம்மால் எதனையும் செய்ய முடியாது. எமக்கு மேலும் கால அவகாசம் வேண்டும் என அமைச்சர் தெரிவித்தார். (செ-11)

## குடும்பஸ்தர்...

இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த நபர், வேலணை பாலத்தருகில் உள்ள கடலில் வீச்சு தொழில் செய்து வரும் நிலையில், நேற்றைய தினம் நண்பகல் வழமை போல் மீன்பிடிக்கச் சென்றுள்ளார்.

அப்போது அவருக்கு திடீரென நெஞ்சு வலித்த போது, கரைக்கு வந்து ஓய்வெடுக்க முயற்சித்த வேளை அந்த இடத்திலேயே அவர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார்.

வீதியால் சென்றவர்கள் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்ததை அடுத்து சடலம் மீட்கப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது.

குறித்த மரணம் தொடர்பான மரண விசாரணையை தீவக மரணவிசாரணை அதிகாரி நாகராஜா தியாகராஜா மேற்கொண்டிருந்த நிலையில், பிரேத பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (செ-9)

## வீடு புகுந்து வாள்...

இச்சம்பவத்தில் கிராம்புவில் பகுதியை சேர்ந்த சகோதரர்களான பரமேஸ்வரன் சுஜிவன் (வயது 30) பரமேஸ்வரன் சுஜித்தா (வயது 27) மற்றும் அயலவரான ஜெயரத்தினம் சிறிராஜ் (வயது 30) ஆகியோர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வீட்டினுள் நுழைந்த கும்பல் சகோதரனை தாக்குவதை கண்ணுற்று அதை தடுக்க சென்ற வேளையிலேயே சகோதரியும் அயலவரும் வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இவர்களில் பரமேஸ்வரன் சுஜீவன் தலையில் படுகாயமடைந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (செ-39)

## போலி அனுமதிப்பத்திரத்துடன்

# மணல் கடத்தலில் ஈடுபட்டிருந்த டிப்பர் வாகனச் சாரதி கைது

(முல்லாவி)

கிளிநொச்சி - பரந்தன் பகுதியில் வைத்து சட்டவிரோதமான முறையில் மணல் கடத்தலில் ஈடுபட்டு வந்த டிப்பர் வாகனத்தின் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார், கடத்தலுக்கு பயன்படுத்திய டிப்பர் வாகனம், கடத்தப்பட்ட மணல் என்பவற்றையும் கைப்பற்றியுள்ளனர்.

கைதான சந்தேகநபர் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது நீதிபதி, சந்தேக நபரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டுள்ளதாக கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத்திற்கு நீண்ட காலமாக சட்டவிரோதமான முறையில் வழி அனுமதிப்பத்திரம் தயாரித்து மணல் கடத்தல் நடைபெறுவதாகக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து, பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் உத்தரவுக்கு அமைய கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான விசேட முறியடிப்பு பொலிஸ் படைப் பிரிவின் பொறுப்பதிகாரி உபபொலிஸ் பரிசோதகர் கருணாரட்ணம் ஜெசிநதன் தலைமையிலான பொலிஸ் அணியினர் புலன் விசாரணைகளில் ஈடுபட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 8 மணியளவில் ஏ9, வீதியில் கிளிநொச்சிக்கும் பளைப் பகுதிக்கும் இடையே விசேட வீதிக் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு இருந்த வேளை பரந்தனிற்கு அண்மையாக வைத்து சட்டவிரோதமான முறையில் தயாரிக்கப்பட்ட வழியனுமதிப்பத்திரத்துடன் ஆற்று மணலை ஏற்றி பயணித்த டிப்பர் வாகனம் ஒன்றைக் கைப்பற்றியுள்ளதுடன் அதன் சாரதியையும் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைதான சந்தேக நபரையும், கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களையும் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு பின் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் நேற்று பாரப்படுத்தப்பட்டிருந்தது.

இதன்போது கைதான சந்தேக நபரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டதுடன் டிப்பர் வாகனத்தையும் வழக்கு விசாரணை முடியும் வரை தடுத்து வைக்குமாறும் உத்தரவு பிறப்பித்துள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-15)

# படுகொலைகள் குறித்து கோத்தபாய, ஜெகத்திடம் இன்று விசாரணை!

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் 27 கைதிகள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய உள்ளிட்ட உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகளிடம் இன்று விசாரணை நடத்தப்படவுள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலையில், 2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதி நடந்த வன்முறைகளின் போது, 27 கைதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்த வன்முறைச் சம்பவத்துடன், இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய நேரடியாகத் தொடர்புபட்டிருந்தார் என்று, பிராந்திய அபிவிருத்தி அமைச்சரான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, பொலிஸ் மா அதிபர் அநுர சேனநாயக்க உள்ளிட்ட உயர்மட்ட இராணுவ, பொலிஸ் அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இது தொடர்பாக வாக்குமூலம் அளிப்பதற்காக இன்று கோத்தபாய ராஜபக்ஷவையும், ஏனைய அதிகாரிகளையும் குற்றப் புலனாய்வுப் பிரிவு தலைமையகத்துக்கு வருமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது என்று பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.





இந்த கொலைகள் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஏற்கனவே பல இராணுவ, பொலிஸ் அதிகாரிகளிடம் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சீனி, உப்பு, எண்ணெய்க்கும் இனி வரி சுகாதார அமைச்சர் ராஜித தகவல்



(கொழும்பு)

தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக சீனி, உப்பு, எண்ணெய் போன்றவற்றுக்கு வரி விதிக்க வேண்டுமென்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

புதிதாகத் தாதி பயிலுநர்கள் பயிற்சிக்காகச் சேவையில் நியமனம் பெறும் 1614 பேருக்கு நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் அலரி மாளிகையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் மூலம் 2025ஆம் ஆண்டளவில் நோய்களைப் பெருமளவில் கட்டுப்படுத்த முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இம்முறை நவராத்திரி விரதம் எப்போது அனுஷ்டிக்கலாம்?



நவராத்திரி விரதமானது புரட்டாதி மாதம் வளர்பிறைப் பிரதமை முதல் வளர்பிறை நவமி வரையான ஒன்பது இரவுகளுடனும் விஜயதசமியுடனும் சேர்த்து பத்து நாட்களாக அனுஷ்டிக்கப்பட்டு வரும் விரதமாகும்.

ஆனால் வெ. இரகுநாதையரால் கணிக்கப்பட்ட வாக்கிய பஞ்சாங்கப்படி 20.09.2017 அன்று நவராத்திரி விரதம் ஆரம்பித்து 30.09.2017 அன்று விஜயதசமியுடன் பதினொரு தினங்கள் விரதம் அனுஷ்டிக்கப்படலாம் என கணிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தியாவில் வெளிவரும் ஆற்காடு கா.வெ.சீதாராமய்யர் சர்வ முகூர்த்த பஞ்சாங்கத்தில் எதிர்வரும் 21.09.2017 அன்று நவராத்திரி விரதம் ஆரம்பித்து 30.09.2017 அன்று விஜயதசமியுடன் பத்து தினங்கள் விரதம் அனுஷ்டிக்கப்படலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்கு இரண்டு பஞ்சாங்கங்களையும் ஒப்பிட்டு நோக்கிய போது 20.09.2017 அன்று முற்பகல் 11.23 மணிவரை அமாவாசை திதி உள்ளது. அதேவேளை 21.09.2017 அன்று முற்பகல் 11.02 மணிவரை பிரதமை திதி அமைந்துள்ளது.

இந்நிலையில் கும்பம் வைத்து வழிபாடு செய்வதில் இரண்டு நிலைகள் காணப்படுகின்றன. அரசு, பொது நிறுவனங்களில் காலையில் கும்பம் வைத்து வழிபடுவோர் 21.09.2017 அன்று முற்பகல் 11.02 மணிவரையுள்ள பிரதமை திதியில் கும்பத்தை வைத்து வழிபடுவது பொருத்தமானதாக அமையும்.

ஆனால் இரவில் கும்பம் வைத்து வழிபடுவோர் 20.09. 2017 அன்று முற்பகல் 11.24 மணிக்கு பின்னர் பிரதமை திதியில் கும்பம் வைத்து விரதத்தை ஆரம்பித்தல் பொருத்தமானது. எனவே நவராத்திரி என்ற நிலையில் அவரவர் தங்களுக்கு பொருத்தமான நாளினைத் தெரிவு செய்து முத்தேவியரின் விரதத்தை அனுஷ்டிப்பது சாலச்சிறந்தது.

## இராசி பலன்

13.09.2017
(ஆவணி 28, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
அட்டமி முன்னிரவு 11.48 மணிவரை
ரோகினி முற்பகல் 8.18 மணிவரை
சுபநேரம் 4.33-6.03 மணிவரை
இராகுகாலம் 12.03-1.33 மணிவரை
மத்தியாஷ்டமி

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | சந் | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அனுசம்<br>இரவு 7.18 மணிக்கு<br>மிது-சந் | | ராகு, சுக் |
| கேது | | | சூரி, புத, செவ் |
| | சனி | குரு | |

**மீனம்:** உடன் பிறப்புகளின் ஆதரவு பெருகும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**மேடம்:** காரியத்தில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**இடபம்:** எந்தவொரு வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்வு அவசியம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**கும்பம்:** மைத்துனர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்:** அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்:** மறைமுகப் போட்டிகள் மாறும், பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**சிம்மம்:** முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், உற்ற நண்பர்கள் உறுதுணையாக இருப்பர், தூரதேசச் செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு:** ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாகச் செயற்படுவர், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுவீர்கள்.

**விருச்சிகம்:** தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், உறவினர்களின் வருகையுண்டு, போசன சுகமுண்டு.

**துலாம்:** வழிபாட்டால் சிறப்பினைக் காணவேண்டிய நாள், வரவும் செலவும் சமமாகும் நாள், புதிய முயற்சிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம்.

**கன்னி:** பற்றாக்குறை தீர்ந்து பண வரவு கிட்டும் நாள், தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர்.

## தளபாடங்கள் வழங்கல்



2017ஆம் ஆண்டுக்கான குறித்தொதுக்கப்பட்ட நிதியுதவியின் கீழ் பருத்தித்துறை பிரதேசசபைப் பகுதிகளுக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கான உதவிகளை வட மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் வழங்கி வைத்தார்.

கடந்த 10ஆம் திகதி மந்திகையில் அமைந்துள்ள பருத்தித்துறைப் பிரதேச சபையில் இடம்பெற்ற நிகழ்வில் இந்த உதவிகள் குறித்த நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டன. திக்கம்சனசமூக நிலையம், அறிவகம் சனசமூக நிலையம் மற்றும் குரும்பகட்டி முன்பள்ளி என்பவற்றுக்கான தளபாடங்கள் மற்றும் சிறார்களுக்கான பாண்ட் வாத்திய இசைக்கருவிகள் என்பவற்றை குறித்த நிர்வாகத்தினரிடம் கையளித்தார்.

நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினருடன், பருத்தித்துறை பிரதேசசபை செயலாளர் மற்றும் குறித்த சனசமூக நிலைய நிர்வாகிகள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-23)

## வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவ ஏற்பாட்டுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்

(யாழ்ப்பாணம்)

20.09.2017 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 06.10.2017 கேணித் தீர்த்தத்துடன் நிறைவுபெறும் வல்லிபுர ஆழ்வார் ஆலய மஹோற்சவத்திற்கான ஏற்பாட்டுக் கூட்டம் 28.08.2017 அன்று ஆலய வளாக கண்ணன் மண்டபத்தில் மு.ப.10 மணிக்கு நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் உற்சவ காலத்துடன் தொடர்புடைய எமது பிரதேசத்திற்குட்பட்ட பல்வேறு திணைக்களங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.




- மஹோற்சவ காலத்தில் ஆலயச் சூழலில் பச்சை குத்தும் செயற்பாடு முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
- மஹோற்சவ காலங்களில் வெளியிடங்களில் இருந்து வருகைதரும் திருடர்களின் நடமாட்டம் அதிகம் ஏற்பட வாய்ப்புள்ளதால் பக்த அடியார்கள் பெறுமதிமிக்க தங்க ஆபரணங்களை அணிவதை தவிர்த்தல் வேண்டும்.
- பக்த அடியார்கள் கலாசார உடையுடனும் ஒழுக்க சீலர்களாகவும் வருகை தந்து வழிபாட்டில் ஈடுபட வேண்டும்.
- மடங்களில் சமைத்தல், உணவு வழங்கும் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் தைபோயிட்டுக் காய்ச்சலுக்கு எதிரான தடுப்பு மருந்து, மருத்துவச் சான்றிதழ்கள் பெற்றிருத்தல் வேண்டும்.
- மடங்களில் ஒலிபெருக்கி பாவிக்க முடியாது. Box set பக்தர்களுக்கு இடையூறு இல்லாத வகையிலும் பூசைகளுக்கு இடையூறு இல்லாத வகையில் பாவித்தல் வேண்டும்.
- பொலித்தீன் one day cup பாவனைக்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
- புகைத்தல், மதுபானப் பொருட்கள், போதைவஸ்துப் பொருட்கள் என்பவற்றின் பாவனை, விற்பனை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

மீறுவோர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

- தண்ணீர்ப் பந்தல்கள் அமைப்பவர்கள் சுகாதாரப் பகுதியினருடன் கலந்தாலோசித்த பின்னரே அமைத்தல் வேண்டும்.
- தாக சாந்திக்குப் பயன்படுத்தப்படும் தண்ணீருக்கு இடப்படும் ஐஸ்கட்டிகள் உணவுக்குப் பயன்படுத்தப்படும் ஐஸ் கட்டிகளே பயன்படுத்தப்பட வேண்டும். மீனுக்குப் பாவிக்கப்படும் ஐஸ் கட்டிகள் பாவித்தலுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.
- வீதித் தடைக் கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு பக்தர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

என பருத்தித்துறை பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (இ)

## "இலக்கியத்தை நேசிக்கும் சமுதாயத்தை முன்னிலைப்படுத்துவோம்" போட்டிகள்

மனித விழுமியப் பண்புகளால் உயர்ந்த, ஒழுக்கமான சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் பேரெண்ணத்தோடு, செயற்படும் யாழ்ப்பாணப் பிரதேச கலாசார அதிகார சபை, இலக்கிய மாதத்தை முன்னிட்டு இலக்கியத்தை நேசிக்கும் சமுதாயத்தை முன்னிலைப்படுத்துவோம் என்ற தொனிப்பொருளில் முப்பெரும் போட்டிகளை நிகழ்த்தவுள்ளது.

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்களுக்கு அமைவாக போட்டிகளில் பங்கு கொள்வோரது பெயர், முகவரி, வயது, தொலைபேசி இலக்கம் முதலானவற்றை உறுதிப்படுத்தி 21.09.2017 வியாழக்கிழமைக்கு முன்னர் யாழ்ப்பாணப் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

➢ முன்பள்ளி மாணவர்களுக்கான ஆத்திசூடி, கொன்றை வேந்தன் மனனப்போட்டி

முன்பள்ளி மட்டத்திலே போட்டிகளை நடத்தி முதல் மூன்று இடங்களைப் பெற்றுக்கொள்ளும் மாணவர்களின் விபரங்களை பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

➢ பாடசாலை மாணவர்களுக்கான பட்டிமன்றப் போட்டி

- குழுவில் ஐவர் இடம் பெற வேண்டும்.
- மூவர் போட்டியில் கலந்து கொள்வர்.

30 நிமிடங்களுக்கு முன்னரே தலைப்பு வழங்கப்படும்.


- கலை, இலக்கியம், மரபுரிமைகள், சமூகவியல் மற்றும் பொதுவிடயங்களோடு தொடர்புடைய தலைப்பு வழங்கப்படும்.
- பட்டி மன்றத்துக்குரிய பொதுவான விதிமுறைகளுக்கமைவாகப் போட்டிகள் நடைபெறும்.

➢ கலைஞர்களுக்கான பேச்சுப் போட்டி (திறந்த)

- யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் எவரும் கிராம சேவையாளரது உறுதிப்படுத்தலோடு விண்ணப்பிக்க முடியும்.
- வயது வேறுபாடின்றி அனைவரும் கலந்து கொள்ளலாம்.
- 30 நிமிடங்களுக்கு முன்னரே தலைப்பு வழங்கப்படும்.

கலை, இலக்கியம், மரபுரிமைகள், சமூகவியல் மற்றும் பொதுவிடயங்களோடு தொடர்புடையதலைப்புவழங்கப்படும்.

- பேச்சுப் போட்டிக்குரிய விதி முறைகளுக்கமைவாகப் போட்டிகள் நடைபெறும் என யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பொ.தயானந்தன் அறிவித்துள்ளார். (இ)



அளவெட்டி மேற்கு நாகேஸ்வரம் ஸ்ரீ நாத வரத நாராய்ணர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்று இடம்பெற்றது. (படம்:-வசந்தன்)



யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் டெங்கு ஒழிப்பு சிரமதானம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. இதில் 14வது படைப்பிரிவில் இராணுவத்தினரும் மாணவர்களுடன் இணைந்து சிரமதானப் பணிகளை மேற்கொண்டிருந்தனர். (படங்கள்:-குருநகர் செய்தியாளர்)

## துவிச்சக்கரவண்டி வழங்கல்



வட மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து மாணவன் ஒருவருக்கு துவிச்சக்கரவண்டி ஒன்று வழங்கப்பட்டுள்ளது. வடமராட்சி கரணவாய் மூதலைக் குழியினைச் சேர்ந்த மேற்படி மாணவனால் வடமாகாண சபை உறுப்பினர் எஸ். அகிலதாஸிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக 2017 ஆம் ஆண்டிற்கான தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதி மூலம் கொள்வனவு செய்யப்பட்ட துவிச்சக்கரவண்டியை தனது அலுவலகத்தில் வைத்து வழங்கினார். (இ-60)



சமர்ப்பன் தியான நிலையத்தின் இலங்கை கிளையின் ஏற்பாட்டில் சுன்னாகம் கதிரமலை சிவன் ஆலய திருமண மண்டபத்தில் இந்தியாவிலிருந்து வருகை தந்த விசேட தியான பயிற்சியாளர்களினால் கருத்தரங்கு அண்மையில் இடம்பெற்றபோது...

## துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் பலி! பொலிஸாரின் விளக்கமறியல் நீடிப்பு

இளைஞன் ஒருவர் உயிரிழக்க காரணமாக இருந்த பொலிஸ் சந்தேக நபர்கள் இருவரையும் எதிர்வரும் 25.09.2017 வரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறைநீதவான்நீதிமன்றநீதிபதி திருமதிநளினிசுபாகரன்நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

கடந்த ஜூலை மாதம் 09 ஆம் திகதி சட்ட விரோதமான முறையில் மணல் ஏற்றி வந்த ஹண்டர் வாகனம் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் பலியானார்.

இது தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் இரண்டு பொலிஸ் சந்தேக நபர்களையும் நேற்று முன்தினம் மீண்டும் நீதிமன்றில் முற்படுத்தியபோது அவர்களை 25.09.2017 வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (இ-60)

112

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?



மாணவி வித்தியாவின் தாய் மற்றும் சகோதரன் ஆகியோருடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துரையாடியதுடன் மாணவியை இழந்த குடும்பத்திற்கு தேவையான உதவிகளை அரசு வழங்கும் என்ற உத்தரவாதத்தையும் ஜனாதிபதி வழங்கினார்.

வித்தியாவின் குடும்பத்திற்கான உதவித் திட்டங்களில் ஒன்றாக வவுனியாவில் வீடொன்றை வழங்குவதற்கு ஜனாதிபதி மைத்திரி உத்தரவிட்டார்.

மாணவி வித்தியாவின் மூத்த சகோதரி வவுனியா வளாகத்தில் பட்டப்படிப்பை மேற்கொள்வதன் காரணமாகவும் புங்குடுதீவில் தொடர்ந்தும் வித்தியாவின் குடும்பம் வசிப்பது அவ்வளவு பாதுகாப்பானதல்ல என்ற அடிப்படையிலும் வவுனியாவில் வீடு வழங்குவது பொருத்துடையதாகும்.

யுத்தம் நடந்த காலங்களில் படையினரின் துப்பாக்கிச் சூட்டில்; விமானப் படையின் தாக்குதலில்; ஆட்லறி ஷெல் வீச்சில் உயிரிழந்த தமிழ் மக்களுக்கான இழப்பீட்டுத் தொகைகள் எதுவும் கிடைக்காத நிலையில், விடுதலைப்புலிகளின் தாக்குதலில் உயிரிழந்த சிங்கள குடும்பங்களுக்கு இழப்பீட்டுத் தொகைகள் வழங்கப்பட்டதுடன், உடன் செலவையும் அன்றைய அரசுகள் பொறுப்பேற்றுக் கொண்டன.

ஆனால் ஈழத்துத் தமிழ் மாணவி ஒருவர் படுகொலை செய்யப்பட்ட போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேரில் வந்து ஆறுதல் தெரிவித்ததுடன் வித்தியாவின் குடும்பத்திற்கு வீடு வழங்குவதற்கும் உத்தரவிட்டார் எனில் ஜனாதிபதி மைத்திரியின் உத்தம குணம் இங்கு போற்றுதற்குரியது.

மாணவி வித்தியாவின் தாய் மற்றும் சகோதரனைச் சந்தித்து ஆறுதல் தெரிவித்த ஜனாதிபதி அடுத்த கட்டமாக யாழ். மாவட்டத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட பாடசாலை மாணவிகளுடனான சந்திப்பொன்றை யாழ்ப் பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடத்தினார்.

வித்தியாவின் படுகொலை மாணவிகளிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும். இதனால் அவர்களிடம் இனம்புரியாத அச்சநிலை உருவாக வாய்ப்பு உண்டு.

எனவே வித்தியாவின் குடும்பத்திற்கு அடுத்தபடியாக புங்குடுதீவு மகா வித்தியாலயம் உள்ளிட்ட யாழ்ப்பாணத்துப் பாடசாலைகளில் உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவிகளைச் சந்தித்து அவர்களை ஆற்றுப்படுத்துவது அவசியம் என்ற ஜனாதிபதி மைத்திரியின் சிந்தனை மிகவும் உயர்வானது.





## மாணவி வித்தியா கொலை நடந்தது என்ன?

யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் சந்திப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவிகள் பஸ் மூலம் யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு அழைத்து வரப்பட்டனர்.

ஏனைய பாடசாலை மாணவியரும் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசா லைக்கு வந்தாயிற்று.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிகவும் எளிமையாக யாழ்ப்பாணம் வேம்படிப் பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு வருகிறார்.

மிகச் சாத்ரரணமாக- மேடை அலங்காரங்கள், சிம்மாசன ஏற்பாடுகள் எதுவுமின்றி ஒரு ஆசிரியர் எங்ஙனம் வகுப்பறையில் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுவாரோ அதுபோல இந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, யாழ். மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த மாணவிகளைச் சந்தித்து மாணவி வித்தியாவின் படுகொலையால் தாம் அடைந்துள்ள வேதனை யைப் பகிர்ந்து கொண்டார்.

இனிமேல் இதுபோன்ற வன்கொடுமைகள் இடம் பெறாமல் பாதுகாக்கப்படும் என்றஉத்தரவாதத்தையும் வழங்கினார்.

ஒரு தந்தை தன் பிள்ளைகளுக்கு எப்படி ஆலோசனை கூறுவாரோ அது போல ஜனாதிபதி மைத்திரி நடந்து கொண்டமை அவர் மீதான நம்பிக்கையை மேலும் அதிகரித்துக் கொண்டது.

மாணவிகள் மத்தியில் ஜனாதிபதி உரையாற்றிய அமைப்பைப் பார்க்கும் போது எங்கள் காலத்து ஆசிரியர்களின் நினைப்பே மனத்திடை எழுந்தது.

ஆம் அந்தக்காலத்து உபாத்தியார் பரமாஸ் வேட்டியும் நஷனலும் உத்தரிய மடிப்புச் சால்வையும் அறிந்த அந்தத் தோற்றம் ஆசிரியத்து வத்தின் அடையாளம். அதை நாம் இழந்து பலகாலம் ஆயிற்று. அந்த ஆசிரியத்துவத்திற்குரிய தோற்றத்தில் கற்பித்தல் இடம்பெற்ற காலத்தில் ஆசிரியர்கள் மீது மாணவர்கள் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தனர்.

மாணவர்கள் மட்டுமல்ல அந்த ஊர் சமூகம் என எல்லோருமே ஆசிரியர்களுக்கு முதல் மரியாதை கொடுத்தனர்.

என்ன செய்வது இன்று ஆசிரியத்துவத்திற்குரிய அடையாளம் தொலைந்து போயிற்று.

என்றைக்கு ஆசிரியர்களுக்குரிய பண்பாட்டுக் கோலவுடையத் தொலைத்தோமோ அன்று முதல் ஆசிரியத்துவத்திற்குரிய பெருமதிப்பையும் தொலைத்துவிட்டோம் என்ற உண்மையையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்துடையதாகும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேசிய உடையோடு நின்று மாணவிகளுக்கு ஆறுதலும் அறிவுரையும் கூறியது கண்டு மனம் நெகிழ்ந்து கொண்டது. முந்தி இருந்தவர் எங்களைக் கொன்று இறுமாப்போடு இங்கு வந்தார்.

அவர் வரும்போது- பாடசாலைகளுக்கு விஜயம் செய்யும் போது எத்தனை சோடனைகள், எத்தனை அலங்காரங்கள், எத்தனை ஆலாவர்ணங்கள், நடனங்கள், புராண படனங்கள்... அப்பாடா எங்களை வதைத்து எங்களைக் கொண்டே தனக்குத் திருவிழாவைச் செய்தவர் அவர்.

இவரோ எங்கள் துன்பத்தில் எங்களைத் தேடி வந்து எங்களுக்கும் எங்கள் பிள்ளைகளுக்கும் ஆறுதல் கூறுகி றார். எந்தப் பகட்டும் இல்லை. படோபகாரமும் இல்லை. மிகவும் எளிமை. இதுவே எங்கள் மாணவர்களுக்கான முன்னுதாரணம்.

மாணவி வித்தியாவின் படுகொலை தொடர்பில் ஜனாதிபதி மைத்திரி யாழ்ப்பாணம் வந்து வித்தியாவின் குடும்பத்திற்கு, பாடசாலை மாணவிகளுக்கு ஆறுதல் கூறியமை ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் ஆறுதல் கூறியதாக அமைந்தது என்றால் அதில் மிகைப்படுத்தல் ஏதுமில்லை எனலாம்.

(வளரும்)

-புருசோத்தமன்-

# வன்னியில் அழிக்கப்பட்ட காடுகளின் விபரங்கள் தேவை; அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிக்குக!

## ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் கோரிக்கை

(குருமன்காடு)

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிந்த பின்னர் வன்னியில் அழிக்கப்பட்ட காடுகளின் விபரங்களை வழங்குமாறு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிசாத் பதியுதீன் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது வன இலாகாவின் செயற்பாடுகள் குறித்து பேசப்பட்ட போது, வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன், 2009 யுத்தம் முடிவடைந்த பின்னர் வன்னியில் காடுகள் பல அழிக்கப்பட்டுள்ளன. அதனை அழிக்கும் போது ஏன் வன இலாகா அதனை தடுக்கவில்லை. அழிக்கப்பட்ட காடுகளின் விபரங்களை அடுத்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும் எனக் கோரினார்.

இதன்போது பதில் அளித்த வனஇலாகா அதிகாரி, காடு அழிக்கப்படுவதற்கு தாம் அனுமதி வழங்கவில்லை. காடு அழித்தவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள அதேவேளை, கடந்த ஆட்சிக் காலத்தில் சில நடந்திருந்தாலும் தாம் தற்போதே இங்கு கடமைக்கு வந்ததாகவும் அதுபற்றி தெரியாது எனவும் கூறினார்.

இதன்போது குறுக்கிட்ட கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன், காடு அழித்தவர்கள் மீது வழக்கு போட்டதா, இல்லையா என்பது வேறு விடயம். எமக்கு அழிக்கப்பட்ட காடுகளின் விபரம் தேவை. அதனை அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிக்க முடியுமா என வினவினார்.

இதனையடுத்து, இணைத்தலைவர்களான முதலமைச்சர் மற்றும் வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ஆகியோரும் வன்னியில் அழிக்கப்பட்ட காடுகளின் விபரங்களை அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிக்குமாறு தீர்மானமாக நிறைவேற்றியிருந்தனர். (2-250)




# கழிவகற்றல் முகாமைத்துவம் சீரின்மையால் பரந்தன் பகுதியில் தொற்றுநோய் அபாயமும் இலையான்,நுளம்புகளின் பெருக்கமும் அதிகரிப்பு

(கண்டாவளை

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் சரியான கழிவ கற்றல் முகாமைத்துவமின்மை யால் தொற்று நோய்கள் பரவும் அபாயநிலை காணப்படுவதுடன், நுளம்பு மற்றும் இலையான்களின் பெருக்கம் அதிகரிக்கும் அபாய நிலை காணப்படுவதாக வர்த் தகர்கள் மற்றும் பல்வேறு தரப்பினரும் குற்றம் சாட்டி யுள்ளனர்.

கிளிநொச்சி நகரத்தில் தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடும் இடமாகவும் காணப்படும் பரந்தன் பகுதியில் கழிவகற்றல் முகாமைத்துவம் சரியாக இல்லையென பல்வேறு தரப்புக்களும் குற்றம் சாட்டியுள்ளன.

குறிப்பாக பேருந்துநிலையம், பொதுச்சந்தை ஆகியன தினமும் உரிய முறையில் சுத்தம் செய்யப்படாத நிலையில் காணப்படுவதுடன், பரந்தன், பூநகரி வீதி, பரந்தன் முல்லைவீதி ஏ-9 வீதி ஆகிய வீதிகளை ஒன்றிணைக்கும் சந்தியின் நான்கு புறமும் கழிவுகள், பொலித்தீன்கள், வெற்றுப் போத்தல்கள் நீண்ட காலமாக காணப்படுகின்றன. இதனைவிட வடிகாலமைப்பு எதுவுமின்றி ஆங்காங்கே வெள்ளநீர் தேங்கி காணப்படுகின்றன.

அத்துடன், பொதுச்சந்தை மலசலகூடம் ஆகியவற்கான தண்ணீர் வசதிகள் இன்மை காணப்படுகின்றது.

குறித்த விடயம் தொடர்பில் பரந்தன் வர்த்தக சங்க நிர்வாகம் இதற்குப் பொறுப்பாகவுள்ள கரைச்சிப்பிரதேச சபையினருக்கு அறிவித்த போதும், இதுவரை எந்த ஒரு நட வடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என நகர வர்த்தகர்களும் பொதுமக்களும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனைவிட பேருந்து நிலையத்தில் பயணிகள் தரித்து நிற்க முடியாத நிலையில் சுகாதார சீர்கேடு காணப்படுவதாகவும் குற்றம்சாட்டியுள்ள பல்வேறு தரப்பினரும் இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# வவுனியாவிற்கும் அதிகமான வீடுகள் வழங்கப்பட வேண்டும்

## ஜனாதிபதி மற்றும் மீள்குடியேற்ற அமைச்சருக்கு கடிதம் அனுப்ப தீர்மானம்

(குருமன்காடு)

வவுனியாவிற்கு அதிகமான வீடுகள் தேவைப்படுவதனால் அதனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனாதிபதி மற்றும் மீள்குடியேற்ற அமைச்சுக்கு கடிதம் அனுபபுமாறு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஜனாதிபதியினால் 65 ஆயிரம் வீடுகள் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ள நிலையில் வவுனியாவிற்கும் அதிகமான வீடுகள் தேவையாகவுள்ளது என வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன் நேற்று முன்தினம் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட இணைத்தலைவரான அமைச்சர் றிசாத் பதியுதீன் வவுனியாவில் தேவையான வீடுகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு அவற்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஒருங்கிணைப்புக்குழு தீர்மானமாக ஏற்றுக்கொள்கின்றது.

எனவே அதிகப்படியான வீடுகளை வழங்குமாறு ஜனாதிபதி மற்றும் மீள்குடியேற்ற அமைச்சுக்கு மாவட்ட செயலகம் ஊடாக கடிதம் அனுப்புமாறும் அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார். (2-250)

# காலபோக நெற்செய்கை தொடர்பான கூட்டங்களின் கால,நேர அட்டவணை

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள, சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழான 2017 - 2018 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கை தொடர்பான அறிவூறுத்தல் கூட்டங்கள் நடைபெறவுள்ள கால நேர அட்டவணையை ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கமநல அபி விருத்தி உத்தியோகத்தர் ம. சற்குணநேசன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கற்சிலை மடு கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட விவசாயிகளுக்கு கற்சிலைமடு பொதுநோக்கு மண்ட பத்திலும் பிற்பகல் 3 மணிக்கு பண்டாரவன்னி கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட விவசாயிகளுக்கு ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்திலும் நடைபெறவுள்ளது.

இதேவேளை, கூழாமுறிப்பு கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட விவசாயிகளுக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கும், பிற்பகல் 3 மணிக்கு கருவேலன்கண்டல் கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட விவசாயிகளுக்கும் ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தில் நடை பெறவுள்ளது.

இந் நிலையில், எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கோடாலிக் கல்லு கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட விவசாயிகளுக்கு முள்ளியவளை கமநல சேவை நிலையத்திலும், பிற்பகல் ஒரு மணிக்கு பெரிய இத்தி மடு கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட விவசாயிகளுக்கு பெரிய இத்தி மடு கிராம பொதுநோக்கு மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

விவசாயிகள் தங்கள் பகுதி குளக் கூட்டங்கள் நடைபெறும் போது தவறாது கலந்து கொள்வதுடன், தங்கள் வரவையும் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குளக் கூட்டங்களின் போது, உரமானியக் கொடுப்பனவு, விதை நெல் விநியோகம், விவசாயக் காப்புறுதி மேற்கொள்வது உட்பட பல்வேறு விடயங்கள் குறித்தும் ஆராயப்படவுள்ளதால் விவசாயிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.சற்குணநேசன் அறிவித்துள்ளார். (2-15)

# இலகுவான போக்குவரத்தை மேற்கொள்ள வீதியை செப்பனிட்டுத் தருமாறு கோரிக்கை

தண்ணீரூற்று குமுழமுனை வீதி பல வருடங்களாக கவனிப்பாரற்று காணப்படுவதாகவும் அதனை திருத்தி மக்களின் இலகுவான போக்குவரத்துக்கு வழிசெய்ய உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

பெரும்பாலும் பண்ணையாளர்கள், விவசாயிகள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர் பயன்படுத்தும் இவ்வீதி திருத்தப்படுவது அவசியம் எனவும் அவ்வாறு இவ்வீதி திருத்தப்படாமல் நீண்ட காலம் இழுத்தடிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (2-310)

# அதிசொகுசு பேருந்து மோதி மூன்று வாகனங்கள் சேதம்



(மல்லாவி)

கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பிரிவில் ஏ-9, வீதியில் உள்ள உமையாள் புரம் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் கார் மீது வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் அதிசொகுசு பேருந்து மோதியதுடன் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த சிறிய ரக கன்ரர் வாகனத்துடனும், மோதி விபத்துக்குள்ளானதில் தெய்வாதீனமாக உயிர் இழப்புக்களோ அல்லது காயங்களோ எவருக்கும் ஏற்படவில்லை என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கடகிழமை இரவு 10.30, மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

யாழ்ப்பாணத்தில் இருந்து ஏ-9, வீதி ஊடாக கொழும்பு நோக்கி பயணித்த அதிசொகுசுப் பயணிகள் பேருந்து உமையாள்புரம் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் காருடன் மோதியதுடன், வீதியில் பயணித்துக் கொண்டிருந்த கன்டர் ரக வாகனத்துடனும் மோதி விபத்துக்குள்ளானது. இவ்விபத்தின் போது மோட்டார் கார் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் பேருந்து மற்றும் கன்டர்ரக வாகனம் என்பவற்றிற்கு பகுதி அளவில் சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு சென்ற கிளிநொச்சி பொலிஸார் சிறிது நேரம் தடைப் பட்டிருந்த ஏ - 09, வீதியின் போக்குவரத்தைச் சீர்படுத்தியதுடன், விபத்துக்குள்ளான வாகனங்களை மீட்டு பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (2-15-312)

# கிளி/ முருகானந்தாக் கல்லூரி மகிந்தோதயா ஆய்வுகூடத்தில் தீ!

## பல இலட்சம் பெறுமதியான பொருட்கள் சேதம்



கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரியில் மகிந்தோதயா ஆய்வு கூடத்தின் தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப மத்திய நிலை பகுதியில் நேற்று முன் தினம் மின் ஒழுக்கு ஏற்பட்டமை காரணமாக தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

பாடசாலை நேரத்தில் இந்த விபத்து நிகழ்ந்தமையால் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து பிரதான மின்வழங்கும் பகுதி ஆளியை நிறுத்தி தீயை அணைத்து விபத்துப் பாதிப்பை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதனால் கணனிகள் சிலவும் ஏர் கண்டிஷனிங் மெசின், தளபாடங்கள் என பல இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் அழிவடைந்துள்ளன.

மகிந்தோதயா ஆய்வுகூடம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் பாடசாலைகளுக்கு கட்டிக் கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-312-15)

# மாணவர்கள் சட்டத்திற்கு முரணான செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்

## கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சுட்டிக்காட்டு

(கண்டாவளை )

கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளிலும் சட்டவிரோத செயல்களுக்கு மாணவர்கள் உட்படுத்தப்பட்டு வருவதாக கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் ஞானம் ஜோன் குயின்ரஸ் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பாடசாலை மாணவர்கள், சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுதல் ஆபத்தான தொழில்களில் ஈடுபடுத்தப்படுதல், சட்டவிரோத செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படுதல் போன்ற சம்பவங்கள் காணப்படுகின்றன.

இது தொடர்பான விழிப்புணர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றபோதும், பின் தங்கிய கிராமங்களில் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்தும் காணப்படுகின்றன.

இந்நிலையில் கிளிநொச்சி கல்வி வலயத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்று வரும் சில மாணவர்கள் சட்டவிரோத மணல் அகழ்வு போன்ற சட்டத்திற்கு முரணான செயற்பாடுகளுக்கு உட்படுத்தப்படுவதாக வலயக்கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இம்முறை நடைபெற்ற கல்விப்பொதுத்தராதர உயர்தரப்பரீட்சை எழுதிய மாணவன் ஒருவர் முதல் நாள் பரீட்சை எழுதிவிட்டு மணல் அகழ்வில் ஈடுபட்ட நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு தண்டப்பணம் செலுத்தி அதன் பின்னர் மறுநாள் பரீட்சைக்கு தோற்றவேண்டிய நிலையில் உரிய நேரத்திற்கு பரீட்சை மண்டபத்திற்குள் செல்லாது ஒரு மணி நேரம் தாமதமாகியே பரீட்சைக்கு தோற்றியதாவும் குறிப்பிட்டுள்ளதுடன், அவர்களின் எதிர்காலம் குறித்து இவ்வாறான சம்பவங்களில் மாணவர்கள் ஈடுபடுத்தப்படுவதை தடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (2)

# நீதிமன்ற அபராதங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி 10ஆம் கட்டைப்பகுதியில் வேகக் கட்டுப்பாட்டையிழந்த வாகனம் தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் வீட்டிலிருந்து வீதிக்கு வந்த பெண் உயிரிழப்புக்கு காரணமாக இருந்த சாரதியை எதிர்வரும் 21 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறும் சட்டவைத்திய அதிகாரி முன் நிறுத்தி மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நீதிமன் றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி பூநகரி பரந் தன் வீதியின் 10ஆம் கட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த வாகனம் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டு விபத்துக்குள்ளானதுடன், வீட்டிலிருந்து கடைக்கு துவிச்சக்கரவண்டியில் புறப்பட்ட பெண்ணையும் மோதியதில் பெண் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் பூநகரி பொலிஸார் குறித்த வாகனத் தின் சாரதியை கைது செய்து நேற்று முன்தினம் பிற்பகல் 3.25 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதி மன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் முன் னிலையில் ஆஜர்படுத்திய தையடுத்து. விபத்துக்கு காரணமாக இருந்த சாரதியை எதிர்வரும் 21ஆம்திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறும் சந்தேக நபரை சட்டவைத்திய அதிகாரியின் முன்னிறுத்தி மருத்துவ அறிக்கையை மன்றுக்கு சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் கட்டளையிட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

கிளிநொச்சி கண்ணகி நகர் பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்று தீப்பற்றி எரிந்து இரண்டு வயது குழ ந்தை உயிரிழந்தும் அதன் உரிமையாளர் எரிகாயங் களுக்கும் உள்ளாகிய சம் பவம் தொடர்பில் கைது செய் யப்பட்ட மூன்று சந்தேக நபர் களையும் எதிர்வரும் 21ஆம் திகதி வரையும் விளக்க மறியலில் வைக்குமாறு கிளி நொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி கண்ணகி நகர் கிராமத்தில் கடந்த 10ஆம் திகதி இரவு 8மணியளவில் வர்த்தக நிலையம் ஒன்று தீப்பற்றி எரிந்ததில் அதன் உரிமையாளரும் அவரது இரண்டு வயது மகனும் எரி காயங்களுக்கு உள்ளாகி யதுடன், குறித்த இரண்டு வயதுக்குழந்தை உயிரிழந் துள்ளது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் தருமபுரம் பொலிஸார் குறித்த சம்பவம் இடம்பெறுவதற்கு சற்று முன் னர் வர்த்தக நிலையத்தில் பெற்றோல் வாங்கிய மூன்று பேரை கைது செய்து குறித்த மூவரையும் நேற்று முன் தினம் பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜர் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த மூவரையும் எதிர்வரும் 21ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

கிளிநொச்சி நகரில் உள்ள இரு உணவகங் களுக்கு அருகில் டெங்கு நுளம்பு பரவக்கூடிய வகை யில் சூழலை வைத்திருந்த இரண்டு வர்த்தகர்கள் கடு மையாக எச்சரிக்கை செய் யப்பட்டதுடன், தலா ஆயி ரத்து 500 ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரில் உள்ள இரண்டு உணவகங் களுக்கு அருகில் டெங்கு நுளம்பு பரவக்கூடிய வகை யில் சூழலை வைத்திருந்த இரண்டு வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த பொதுச்சுகாதார பரிசோதகர் கள் குறித்த இரண்டு பேரை யும் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீத வான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் முன்னிலையில் ஆஜர் படுத்தியதையடுத்து குறித்த இரு வர்த்தக நிலைய உரி மையாளர்களும் கடுமை யாக எச்சரிக்கை செய்யப் பட்டதுடன், குறித்த இரண்டு பேருக்கும் தலா ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் அனுமதிப்பத்திர மின்றி மணல் ஏற்றிய மூன்று பேருக்கு ஒரு இலட் சத்து இருபத்து ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட் டுள்ளது.

கிளிநொச்சி, பரந்தன் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் அனுமதிப்பத்தி ரமின்றி மணல் அகழ்ந்து ஏற்றிச்சென்ற இரண்டு உழவு இயந்திரங்களையும் டிப்பர் வாகனம் ஒன்றினை யும் கைது செய்த கிளிநொச் சிப் பொலிஸார் குறித்த மூன்று சாரதியையும் வாகனங்க ளையும் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீத வான் நீதிமன்றில் முன் னிலைப்படுத்தினர்.

அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றியவருக்கு இருபத்து ஐயா யிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன், மணல் பறிமுதல் செய்யப்பட்டது.

டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றிச்சென்றவருக்கு அறுபதாயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டதுடன், மணல் பறிமுதல் செய்யப் பட்டுள்ளது.

உழவு இயந்திர்த்தில் மணல் ஏற்றிச்சென்றவருக்கு நாற்பதாயிரம் ரூபா தண் டப்பணம் விதிக்கப்பட்டு மணல் பறிமுதல் செய்யப் பட்டுள்ளது.

இவ்வாறு குறித்த மூவ ருக்கும் ஒரு இலட்சத்து இருபத்து ஐயாயிரம் ரூபா தண் டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

# சைட்டம் எதிர்ப்பு வாகனத் தொடர் பேரணி நேற்று கிளிநொச்சியை சென்றடைந்தது



(கண்டாவளை)

சைட்டம் தனியார் மருத்துவக்கல்லூரிக்கு எதிராக அரசாங்க வைத்தியர்கள் சங்கம் நேற்றையதினம் முதல் மாவட்ட ரீதியில் சுழற்சி முறையில் போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்திருந்தது.

இந் நிலையில் சைட்டம் எதிர்ப்பு மக்கள் அரண் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களை ஒன்றிணைத்து சைட்டம் எதிர்ப்பு வாகனப் பேரணி நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

அந்த வகையில் யாழ்ப்பாணம் முற்றவெளி திறந்த வெளி அரங்கிற்கு அண்மையில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட வாகனப் பேரணி கிளிநொச்சியை நண்பகல் அளவில் சென்றடைந்தது.

இதன்போது சைட்டம் வாகனப் பேரணியின் கிளிநொச்சி பொதுச் சந்தை முன்பாக மக்களை தெளிவூட்டும் செயற்பாட்டில் ஈடுபட்டனர். தொடர்ந்து மக்களுக்கான தெளிவூட்டும் கருத்துக்களும் முன்வைக் கப்பட்டன. அங்கு கருத்துத் தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேகர், கிளிநொச்சி மாவட்டம் வறுமையில் 3 ஆம் இடத்தில் உள்ளது. முல்லைத்தீவு மாவட்டம் வறுமை மாவட்டத்தில் முதலாம் இடத்தில் உள்ளது. இந் நிலையில் இங்கிருந்து யாராலாயினும் 100 இலட்சம் ரூபா கொடுத்து கல்வி கற்று வைத்தியராக முடியுமா? என குறிப்பிட்டிருந்தார். (2-315-312)

# நெற்செய்கை தொடர்பான அறிவுறுத்தல் கூட்டங்களின் கால அட்டவணை

## பூநகரி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவிப்பு

பூநகரி கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட கமக்கார அமைப்புக்களுக்கான 2017 -2018 ஆம் ஆண்டுக்கான கால போக நெற்செய்கை தொடர்பான அறிவுறுத்தல் கூட்டங்கள் நடைபெறவுள்ள கால நேர அட்டவணையை பூநகரி கமநல நிலைய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மு.இரகுநாதன் அறிவித்துள்ளார்.

இதன்படி ஆலங்கேணி கமக்கார அமைப்பிற்குட்பட்ட விவசாயிகளுக்கு நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கும் ஞானிமடம் கமக்கார அமைப்பிற்குட்பட்ட விவசாயிகளுக்கு நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கும் மட்டுவில் நாடு மேற்கு கமக்கார அமைப்பிற்குட்பட்ட ‘விவசாயிகளுக்கு நாளை வியாழக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கும் வாடியடி கமக்கார அமைப்பிற்குட்பட்ட விவசாயிகளுக்கு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கும் அந்தந்த பகுதிகளில் உள்ள பொது மண்டபங்களில் நடைபெறும் என அவர் அறிவித்துள்ளார்.

ஆதலால் வெள்ளிமாவட்டங்களில் இருக்கும் நெற்செய்கையாளர்களும் தங்கள் காணிகள் அமைந்துள்ள பகுதி கமக்கார அமைப்பின் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (2-84)

# திருக்குறள் தமிழ் இலக்கிய கலைத்திறன் போட்டிகள்

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கம் ஆண்டு தோறும் முன்னெடுத்து வருகின்ற திருக்குறள் மாநாட்டையொட்டிய மாணவர்களுக்கிடையில் திருக்குறள், ஆத்தி சூடி, கொன்றை வேந்தன் பாக்கள் அடங்கிய பாடத் திட்டத்தை மையமாகக் கொண்டு எழுத்துத்தேர்வையும் பள்ளிகளுக்கிடையில் நாட்டுப்புறக் கலை, குறள் இசை தமிழ் இசைப்பாடல்கள், தமிழ்த் தாய் வணக்கப்பாடல், சங்கக் கொடிக் கவிதை, நாடகம் ஆகியவற்றில் கலைத்திறன் போட்டிகளையும் நடத்தி வருகின்றது. அந்த வகையில் இந்த ஆண்டுக்குரிய போட்டிகளுக்கான சுற்றறிக்கையும் வேண்டுகைப் படிவங் களும் ஏற்கனவே பள்ளிக ளுக்கு அனுப்பப்பட்டுள் ளன.

இப்போட்டிகளுக்கான வேண்டுகைகளை அனுப்ப வேண்டிய முடிவு எதிர்வரும் 15ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த நாளுக்குள் இப் போட்டிகளுக்கான வேண்டுகைகளை அனுப்பி மாணவர்களுக்கும் சங்கத்திற்கும் ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அளிக்குமாறு பள்ளி முதல்வர்களை கோரியுள்ளனர் தமிழ்ச்சங்கத்தினர். (2-84)

# நீதிமன்ற அபராதங்கள்

கிளிநொச்சி பகுதியில் ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்டவருக்கு ஐயாயிரம் ரூபா தண் டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வட்டக்கச்சிப்பகுதியில் ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்பு உடைமையில் வைத்திருந்த ஒருவரை கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் முன்னிலையில் ஆஜர் படுத்தியதையடுத்து, குறித்த குற்றச்சாட்டுடன் தொடர்புபட்டவருக்கு ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

கிளிநொச்சி ஏ-9 வீதியில் கவனயீனமான முறையில் வாகனம் செலுத்தியவருக்கு மூவாயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி ஏ-9 வீதியில் ஆபத்தான முறையில் வாகனத்தை செலுத்திச்சென்ற ஒருவரை கைது செய்து அவர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த நபரை நேற்றுமுன்தினம் பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜாவின் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து. குறித்த நப ருக்கு மூவாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் இரண் டாயிரம் மில்லிலீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்ட நபருக்கு பதினையாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் இரண்டாயிரம் மில்லிலீற்றர் கசிப்பினை உடைமையில் வைத்திருந்த ஒருவரை கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த நபரையும் சான்றுப்பொருளையும் நேற்று முன்தினம் பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் முன்னிலையில் ஆஜர் படுத்தியதை யடுத்து குறித்த குற்றச்சாட்டுக்கு பதினையாயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற வழக்கொன்றுடன் தொடர்புபட்டு தலைமறைவாகிய நிலையில் திறந்த பிடியாணை மூலம் கைது செய்யப்பட்ட நபரை எதிர்வரும் 25ஆம்திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற வழக்கொன்றுடன் தொடர்புபட்ட நிலையில் தொடர்ந்து வழக்கு தவணைகளுக்கு சமுகமளிக்காது தலைமறைவாகியிருந்த ஒருவரை திறந்த பிடியாணை மூலம் அப்பகுதி கிராம அலுவலரால் கைது செய்து நேற்று முன்தினம் பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து. குறித்த நபரை எதிர்வரும் 25ஆம்திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றினால் சமுதாயம் சார் சீர்திருத்த கட்டளைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் 5 நாட்கள் சமூக சேவைக்கு சமுகமளிக்காத நபரை எதிர்வரும் 15ஆம்திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிம்ன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற வழக்கு ஒன்றுடன் தொடர்புபட்ட நிலையில் தண்டப்பணம் செலுத்துவதற்கு பதிலாக சமுதாயம் சார் சீர்திருத்த கட்டளைக்கு அமைவாக சமூக சேவைக்கு உட்படுத்தப்பட்ட நபர் ஒருவர் 5 நாட்கள் சமூக சேவைக்கு சமுகமளிக்காத நிலையில் நீதிமன்றம் ஊடாக பிடியாணை பிறப்பிக்கப்பட்டு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதமன்றில் நீதி மன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந் தராஜாவின் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து, குறித்த நபரை எதிர்வரும் 15ஆம்திகதி வரையும் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

கிளிநொச்சி பகுதியில் மதுபோதையில் வாகனம் செலுத்தியருக்கு ஆறாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன், சாரதி அனுமதிப்பத்திரம் இரண்டு வார காலத்திற்கு இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி ஏ-9 வீதியில் மதுபோதையில் வாகனம் செலுத்திச்சென்ற ஒருவரை கைது செய்து அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்தநபரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து ஆறாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்துடன், சாரதியனுமதிப்பத்திரம் இரண்டு வார காலத்திற்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. (2-315)



துன்னாலை தூய சதா சகாயமாதா ஆலய வருடாந்த திருவிழாவின் இறுதிநாள் திருப்பலி ஒப்புக் கொடுப்பும் மாதாவின் சொரூப பவனியும் இடம்பெற்ற போது... (படங்கள்:- மகாலிங்கம்)

# சைட்டம் கல்லூரி விவகாரத்தால் வைத்திய சேவைகள் முடக்கம்

மாலபே சைட்டம் தனியார் வைத்தியக் கல்லூரி தொடர்பிலான சர்ச்சைகளுக்கு, ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவிடமிருந்தும் தீர்வுகள் கிடைக்காததனால் நேற்று முதல் நாளை மறுதினம் 15 ஆம் திகதி வரை, 25 மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில், சுழற்சி முறையில் வேலை நிறுத்தப்போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

அந்தவகையில் சைட்டம் நிறுவனத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து மலையகத்தில் உள்ள சில வைத்தியசாலைகளில் நேற்று வைத்திய சேவைகள் முற்றாக முடங்கிக் காணப்பட்டன.

ஹற்றன் டிக்கோயா ஆதார வைத்தியசாலைக்குத் தூர பிரதேசங்களிலிருந்து வருகை தந்த தோட்ட தொழிலாளர்கள் பாரிய பிரச்சினைக்கு முகங்கொடுத்தனர். வெளி நோயாளர் பிரிவு மற்றும் கிளினிக் முழுமையாக செயழிழந்ததனால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்குள்ளாகினர். (இ-7)

# மகிந்தவையும் கைது செய்க

## பொன்சேகா வலியுறுத்து



சில் துணி மோசடி விவகாரம். தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் கைது செய்ய வேண்டும் என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். "லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பெல்பிட்ட ஆகியோர் சிறையில் அடைக்கப்பட்டதில் எந்த தவறும் கிடையாது. முன்னாள் ஆட்சியாளர்களின் உத்தரவிற்கிணங்க செயற்பட்டதாலே அவர்களுக்கு இந்த நிலை ஏற்பட்டது. ஆட்சியாளர்கள் சொன்னதற்காக யாரையாவது பாலியல் வல்லுறவு செய்திருந்தால் அதை மன்னிக்க முடியுமா?

குறித்த மோசடிக்கு காரணமான மகிந்த ராஜபக்ஷவையும் கைது செய்ய வேண்டும். இவர்களுக்கு நீதிமன்ற அபராதத்தை செலுத்த பணம் சேகரிப்பதாக கூறப்படுகிறது. ஆனால் சில் துணி ஒன்றின் விலை 15 டொலராக இருந்தாலும் அதற்கான விலை 50 டொலர் என்று குறிப்பிட்டே 600 மில்லியன் மோசடி செய்யப்பட்டுள்ளது. இவர்களிடம் மோசடி செய்த பெருமளவு பணம் இருக்கும். அபராதத்தை செலுத்துவது இவர்களுக்கு பிரச்சினை கிடையாது எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# தூய ஆரோக்கிய அன்னை ஆலய வருடாந்த திருவிழா

யாழ். போதனா வைத்தியசாலையின் தூய ஆரோக்கிய அன்னை ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 23ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ்.பேராயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் திருவிழா திருப்பலியும் இடம்பெறும். (இ-10-107)

# பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு

டெங்கு நோய்த் தாக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டத்தை விரைவாக முன்னெடுக்குமாறு ஜனாதிபதி விடுத்த பணிப்புரையின் கீழ் ஒவ்வொரு பாடசாலைகளிலும் டெங்கு ஒழிப்பு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயாளர்கள் அதிகமாக இனங்காணப்பட்டுள்ளதால் பாடசாலைகளில் 4 மாணவர்கள் அடங்கிய குழுவில் ஆசிரியர் ஒருவரை தலைவராக நியமித்து அனைத்து பாடசாலைகளிலும் வாரம் ஒருமுறை டெங்கு ஒழிப்பு சிரமதானத்தை மேற்கொள்ள வேண்டும்என யாழ் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் அறிவித்துள்ளார். (இ-10-135)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## காட்டு நாரத்தை

Botanical Name - Atalantia Monophylla
Family - Rutaceae
Engl - Wild linne

வெப்ப வலய நாடுகளில் காடுகளில் அதிகமாக வளரக் கூடிய சிறிய மர வகையைச் சார்ந்தது. முள்ளுள்ள மரமாகும். பல்லாண்டு காலம் வளரக் கூடியது. ஆண், பெண் பூக்கள் தனித்தனி தாவரங்களில் காணப்படும். மஞ்சள் கலந்த பச்சை நிற மான வாசனையுள்ள பூக்கள் காணப்படும். வட்ட வடிவக்காய்கள். இதன் தோலிலும் நிறம் பாது கொழுப்பு மில வாசனைத் தன்மையான நெய்ப்பான சுரப்பு இருக்கும். விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம். இதன் தாயகம் இந்தோனேசியா. ஆனாலும் இலங்கை, இந்தியாவில் புதர்க் காடுகளிலும் பரவலாக வளர்ந்து காணப்படும்.

இதன் இலைகள், பழச் சதை, பழத்தோல் ஆகியவை மருத்துவ குணம் மிக்கவை.

❖ இதன் பழச் சாற்றுடன் கறிப்புப்பு சிறிது சேர்த்து சொறி, சிரங்கு மீது பூசிவர இவைகள் ஆறும்.

❖ குடற்புண் எனப்படும் குன்மத்திற்கு இதன் பழச்சாறு 15 மில்லி அளவு தினமும் காலையும் மாலையும் சாப்பிட்டு வர குடற்புண் ஆறும்.

❖ இதன் பழத்தை கும்பிச் சாம்பலில் சுட்டு எடுத்து வெட்டி சாறு பிழிந்து 15 மில்லி அளவு எடுத்து அதேயளவு தேன் கலந்து தினம் 3 வேளை சாப்பாட்டின் முன்பு எடுத்து வர இருமல் நோய் தணியும்.



❖ மேற்படி எடுத்த சாறு 1 தேக்கரண்டி, இஞ்சிச்சாறு 1 தேக்கரண்டி, மாதுளம்பழச் சாறு 1 தேக்கரண்டி கலந்து தினமும் காலை, மாலை எடுத்து வர வரட்டு இருமலும் ஆஸ்துமா வியாதியும் குணப்படும்.

❖ ஒரு காட்டு நாரத்தம் பழத்தை துண்டு துண்டாக வெட்டி 560 மில்லி நீரில் போட்டுக் காய்ச்சி 60 மில்லியாக வற்ற வைத்து ஒரு இரவு முழுவதும் பனியில் வைத்து பின்பு வடிகட்டி அதிகாலையில் சாப்பிட்டு வர சளியுடன் கூடிய காய்ச்சல் தணியும்.

❖ காட்டு நாரத்தன் காய்களை வெட்டி உப்பு, மஞ்சள் சேர்த்து ஊறுகாய் போல் தயாரித்து சாப்பிட்டு வர செரியாமை, ஓங்காளம் நீங்கி அதிகரித்த பித்தம் தணியும்.

❖ தாகம் தணியவும் பித்த சாந்திக்கும் இதன் பழச்சாறுடன் சீனி சேர்த்து காய்ச்சி பாகுபதத்தில் எரித்து இறக்கி தேவையானளவு நீர் சேர்த்து பானமாக அருந்தி வரலாம்.

100 கிராம் உண்ணக்கூடிய காட்டு நாரத்தம்பழத்திலுள்ள சத்துக்கள்

நீர்ச்சத்து -88.3 கிராம்
காபோவைதரேற்று- 10.5 கிராம்
குளுக்கோசு (சீனிச்சத்து) - 1.7 கிராம்
நார்ச்சத்து- 2.8 கிராம்
கொழுப்பு- 0.2 கிராம்
புரதம்- 0.7 கிராம்
உயிர்ச்சத்து $B_1$- 0.03 மி.கிராம்
றைபோபிளேவின்-0.02மிகி
நியாசின்- 0.2 மி.கி.
உயிர்ச்சத்து $B_6$-0.46மிகிராம்
உயிர்ச்சத்து C-29. மிகிராம்
போலேற் -8 மைக்.கிராம்
கல்சியம்- 33 மி.கிராம்
இரும்புச்சத்து-0.6மிகிராம்
மக்னீசியம்- 6 மி.கிராம்
பொட்டாசியம்-102மி.கிராம்
சோடியம்- 2 மி.கிராம்

❖ முட்டு வலி, வீக்கத்திற்கு காட்டுநாரத்தை விதைகள், எள்ளு, கொள்ளு, இலுப்பை விதை, வேப்பம் விதை, கழற்சி விதை மேற்படி எல்லாவற்றையும் ஒரேயளவாக எடுத்து இடித்து பொட்டணியாகக் கட்டி அவித்து ஒத்தடம் கொடுக்க மேற்படி மூட்டுக்களில் ஏற்படும் வலி, வீக்கம் தணியும்.

❖ காமாலை நோயிற்கு வெள்ளுள்ளி 200 கிராம் எடுத்து கல்வத்தில் வைத்து நாரத்தம்பழச்சாறு, கையாந்தகரைச் சாற்றால் அரைத்து விழுதை வழித்து ஒரு மண் பானையில் வேரு கட்டி அத் துணியில் மேற்படி விழுதை போட்டு மேற்சட்டி மூடி பொருத்துவாயினை துணியால் கட்டி 7 நாட்கள் சதுப்பு நிலத்தில் புதைத்து வைத்து எடுத்து பானையில் வடிந்து இருக்கும் சாற்றை வடித்து 7 நாட்கள் ஒரு மேசைக்கரண்டி அளவு தினமும் கொடுக்க காமாலை தணியும்.

செங்கண்மாரிக்கு எண்ணெய்

நாரத்தம்பழச்சாறு- 300 மில்லி, கீழ்க்காய்நெல்லிச் சாறு- 300 மில்லி, கற்றாழைச்சாறு- 300 மில்லி,



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

மொசுமொசுக்கைச்சாறு- 300 மில்லி, கர்ப்பூரவள்ளிச்சாறு- 300 மில்லி, கையாந்தகரைச்சாறு- 300 மில்லி, பசும்பால்- 300 மில்லி, இளநீர்- 300 மில்லி, நல்லெண்ணெய் -300 மில்லி, கொத்தமல்லி, மிளகு, சீரகம், திப்பிலி ஒவ்வொன்றும் 2 கிராம் அளவு எடுத்து மைபோல அரைத்து, சாறுகள், பால், இளநீர், நல்லெண்ணெயில் கலந்து அடுப்பேற்றி சிறு தீயாக எரித்து பதத்திற்கு வடித்து ஆற விட்டு தலைக்கு தேய்த்து முழுகிவர பித்தத்துடன் கூடிய வியாதிகள், காமாலை தீரும்.

# கிழக்கில் பாரபட்சம்

## த.தே.கூ. குற்றச்சாட்டு



(கொழும்பு)

கிழக்கு மாகாணத்திலுள்ள சுகாதாரத் தொண்டர்களுக்கு நியமனம் வழங்காமல் கிழக்கு மாகாண சபை பாரபட்சம் காட்டியுள்ளதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் குற்றஞ் சாட்டினார்.

சுகாதார தொண்டர்கள் நியமனம் கோரி, மட்டக்களப்பு நகரில் நேற்று முன்தினம் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே, அவர் மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டினார்.

"மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 65க்கும் மேற்பட்ட சுகாதார தொண்டர்கள் கிழக்கு மாகாண சபையால் நியமனம் வழங்காமல் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். கிழக்கு மாகாண சபையால் கடந்த காலங்களில் சிற்றூழியர் நியமனங்கள் பலருக்கும் வழங்கப்பட்டன. இந்நிய மனங்களில் இந்த சுகாதார தொண்டர்கள் உள்வாங்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

"அரசியல் சிபாரிசுகளுக்கு ஏற்ப கிழக்கு மாகாண சபையால் கடந்த காலங்களில் சிற்றூழியர் நியமனங்கள் வழங்கப்பட்டன.

"கடந்த 2000ஆம் ஆண்டு தொடக்கம் இவர்கள் இந்த ஆண்டு வரை சுகாதார தொண்டர்களாக எந்த வித கொடுப்பனவுமின்றி சேவையாற்றி வருகின்றனர்.


"வறுமையிலும் இந்த சுகாதாரத் தொண்டர் சேவை செய்யும் இவர்களுக்கு கிழக்கு மாகாண சபையும் மத்திய அரசும் நியமனம் வழங்க வேண்டும்.

"இதனை நான் நாடாளுமன்றத்திலும் வலியுறுத்தவுள்ளேன். இவர்களின் நிலைமையை கிழக்கு மாகாண சபை கருத்திற்கொள்ள வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றேன்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)





"நல்ல அம்மா-சிவசிந்தனை" எனும் ஆன்மீக அறிவுக் களஞ்சிய வெளியீடு செல்வச் சந்நிதி ஆலய பூங்காவனத் திருவிழாவன்று இடம்பெற்றது. இதில் மறவன்புலோ சிவசேனா அமைப்பாளர் சச்சிதானந்தம் இதனை வெளியிட்டு வைத்தார்.



இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையினால் ஒழுங்கமைக்கப்பட்ட இரத்ததான நிகழ்வானது சம்பத் வங்கி யாழ். கிளையின் 8ஆம் ஆண்டு நிறைவினை ஒட்டி சம்பத் வங்கி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் 36 குருதிக்கொடையாளர்கள் குருதி வழங்கினர். (படங்கள்- மயில்வாகனம்)

# சிதைவடைந்த நிலையில் தேர்



கடந்த 27 வருடங்களின் பின்னர் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மயிலிட்டி பகுதியிலுள்ள முறையன் வளவு முருகன் ஆலய தேர் சிதைவடைந்த நிலையில் உள்ளது. (இ-10-23)

# ஹன்டர் உரிமையாளர் கைது!

மணல் கடத்தி வந்த போது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புபட்ட ஹன்டர் வாகனத்தின் உரிமையாளரை தாம் கைது செய்துள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஜுலை மாதம் 9 ஆம் திகதி சட்ட விரோதமான முறையில் மணல் ஏற்றி வந்த ஹன்டர் வாகனத்தை நிறுத்துமாறு பொலிஸார் சைகை காட்டிய போது தப்பிச் செல்ல முற்பட்ட வாகனத்தின் மீது பொலிஸார் மேற் கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் வாகனத்தின் பின்பகுதியில் இருந்த இளைஞர் ஒருவர் பலியானார். ஹன்டர் வாகன உரிமையாளர் தலை மறைவாகி இருந்த நிலையில் நேற்று முன்தினம் நண்பகல் பருத்தித்துறை நீதிமன்றிற்கு முன்பாக வைத்து கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்ததோடு கைது செய்யப்பட்டவர் துன்னாலை கிழக்கைச் சேர்ந்தவர் எனவும் கூறினர். (இ-60)

# டிரானுக்கு வெளிநாடு செல்ல அனுமதி



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் ஒரு மாதம் வெளி நாடு செல்ல கொழும்பு மேல் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் 16ஆம் திகதி முதல் ஒக்டோபர் 16ஆம் திகதி வரை அவர் வெளிநாடு செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இது குறித்து குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளுக்கு தெரியப்படுத்துமாறும், நீதிபதி தனது உத்தரவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், இந்த வழக்கை மீண்டும் ஒக்டோபர் 20ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் யுத்தம் மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை அமைக்க வழங்கப்பட்ட 200 மில்லியன் ரூபாவை மோசடி செய்ததாக குற்றம்சாட்டி டிரானுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


## வைத்தியம்

தலைமுடி உதிர்தல், முள்ளந்தண்டு பிரச்சினை, பாரிசவாதம், சலரோகம், உடல் பருமன் குறைத்தல் அல்லது கூட்டுதல் (வயிறு/மார்பு/கை) ஆண்மைக்குறைபாடுகள், குழந்தையின்மை போன்றவற்றுக்கு மருந்தின்றி, பக்கவிளைவின்றி அக்குபஞ்சர் சிகிச்சை வழங்கப்படும்.

நோய் எதுவாயினும் தீர்வு உண்டு

(ACU) Dr.Sanker

077 035 7307

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 60செவ் 1 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:A/L/பிரான்ஸ் NOT PR<br>தொ.இ: B/7756 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BFAஎதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/7754 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 14சூரிசெவ் 5 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:BSc, MBA/ தனியார் தொழில்<br>தொ.இ: B/7759 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 39செவ் 1 இல்<br>உயரம்: 162cmதகைமை/தொழில்:BSc<br>தொ.இ: G/7755 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 19சூரிசெவ் 11 இல்<br>தகைமை/தொழில்:O/L/அரசதொழில்<br>தொ.இ: B/7761 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 43<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:Diploma/ ஆசிரியர்எதிர்பார்ப்பு:<br>தொ.இ: G/7763 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 16<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:O/L/வியாபாரம்<br>தொ.இ: B/7765 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 48செவ் 2 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BSc/வங்கியாளர்<br>தொ.இ: G/7774 |

கல்யாணமாலை

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை

விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.




# ஓராயிரம் தினகரன்கள் வந்தாலும் அ.தி.மு.கவை அசைக்க முடியாது

## பொதுக்குழுவில் முதலமைச்சர் பழனிச்சாமி பேச்சு

(சென்னை)

ஓராயிரம் தினகரன்கள் வந்தாலும் அ.தி.மு.கவை அசைக்க முடியாது என பொதுக்குழுவில் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி பேசியுள்ளார்.

முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில் நேற்று பேசும்போது தெரிவித்ததாவது,

இப்பொதுக்குழு கூட்டத்தை தடுத்து நிறுத்தி விடலாம் என்று சிலர் முயற்சி செய்தார்கள். ஆனால் நீதிமன்றம் இந்த தடையை அகற்றியுள்ளது.



இதனால் நீதிமன்றம் மூலம் நமக்கு முதல் வெற்றி கிடைத்துள்ளது.

ஜெயலலிதா இல்லாத நிலையில் நாம் இந்த கூட்டத்தை கூட்டியுள்ளோம். எனவே நாம் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும்.

சிலர் நம்மை அழித்து விடலாம், விரட்டி விடலாம் என்று நினைக்கிறார்கள். யார் நினைத்தாலும் நம்மை அழிக்க முடியாது.

அரசியல் வரலாற்றில் பிரிந்த இயக்கங்கள் ஒன்று சேர்ந்ததாக வரலாறு இல்லை. ஆனால் நாம் ஒன்று சேர்ந்து இருக்கிறோம்.

ஆண்ட கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்ததாக வரலாறு இல்லை. ஆனால் அ.தி.மு.க. மட்டும்தான் மீண்டும் ஆட்சிக்கு வந்து இந்த சாதனையை படைத்துள்ளது.

ஒரு தினகரன் அல்ல ஓராயிரம் தினகரன்கள் வந்தாலும் அ.தி.மு.க.வை ஆட்டவோ. அசைக்கவோ முடியாது. கட்சியில் அடிப்படை உறுப்பினராகக்கூட இல்லாத தினகரனால் எப்படி நிர்வாகிகளை நீக்க முடியும்?

கடந்த 10 ஆண்டுகளாக தினகரன் எங்கே சென்றார். ஜெயலலிதாவால் நீக்கப்பட்டவர் தினகரன். அவர் எங்களை பார்த்து துரோகி என்கிறார். எனவே யார் நினைத்தாலும் அ.தி.மு. கவை அழிக்க முடியாது என்று அவர் தெரிவித்தார். (3-8)

## பொதுக்குழுவில் 12 தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றம்

### பொதுச் செயலாளராக சசிகலாவை நியமித்தது இரத்து



(சென்னை)

ஓ.பி.எஸ் - ஈ.பி.எஸ் அணிகள் இணைப்புக்கு பாராட்டு தெரிவித்தும், இரட்டை இலை சின்னத்தை மீட்கவும் அ.தி. மு.க பொதுக்குழு கூட்டத்தில் 12 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அ.தி.மு.க அம்மா மற்றும் புரட்சித்தலைவி அம்மா அணிகள் இணைந்த பின்னர் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் நேற்று அக்கட்சியின் பொதுக்குழு மற்றும் செயற்குழு கூட்டம் சென்னை வானகரத்தில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது.

முதலில் அவைத்தலைவர் மதுசூதனன் தலைமையில் செயற்குழு கூட்டம் தொடங்கியது.

இதனை யடுத்து, 10.35 மணிக்கு பொதுக்குழு கூட்டம் தொடங்கியது.

11.10 மணிக்கு தீர்மானங்கள் வாசிக்கப்பட்டன. மொத்தம் 12 தீர்மானங்கள் கொண்டு வந்து ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பொதுக்குழு அழைப்பிதழில், "தற்போது கழகத்தில் ஏற்பட்டுள்ள சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு விவாதித்து முடிவு எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன.

1. கட்சியையும், இரட்டை இலை சின்னத்தையும் மீட்டெடுக்க வேண்டும்.

2. ஜெயலலிதா இருந்த போது அவரவர் வகித்த பதவிகளில் நீடிக்க வேண்டும்.

3. எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவை தமிழக அரசு நடத்தி வருவதற்கு பாராட்டு.

4. ஜெயலலிதா நினைவிடம் அமைக்க ரூ.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்ததற்கு தமிழக அரசுக்கு பாராட்டு.

5. விவசாயிகளுக்கு வரட்சி நிவாரணம் அளித்த தமிழக அரசுக்கு பாராட்டு.

வர்தா புயலில் சிறப்பாக செயற்பட்டதற்காக தமிழக அரசுக்கு பாராட்டு.

6. தினகரன் அறிவித்த நியமனங்கள், அறிவிப்புகள் செல்லாது.

7. சசிகலாவின் பொதுச் செயலாளர் நியமனம் ரத்து.

8. ஜெயலலிதாவே நிரந்தர பொதுச்செயலாளர். இனி அ.தி.மு.கவில் பொதுச்செயலாளர் பதவி இல்லை. இதற்காக அ.தி.மு.கவின் சட்ட விதிகளில் பெரிய அளவில் மாற்றம் கொண்டு வரப்படுகிறது.

இனி அ.தி.மு.க. பொதுச் செயலாளராக யாரையும் தேர்வு செய்ய மாட்டோம். எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா இருந்த இடத்தில் வேறு யாரையும் வைத்து அழகு பார்க்க மாட்டோம்.

9. அ.தி.மு.கவில் வழிகாட்டும் குழு ஏற்படுத்தப்படுகிறது. அந்த குழுவை வழி நடத்த ஒருங்கிணைப்பு குழு தலைவராக ஓ.பன்னீர்செல்வம், இணைத்தலைவராக எடப்பாடி பழனிச்சாமி இருவருக்கும் அதிகாரம் வழங்க சட்ட திருத்தம் செய்ய முடிவு செய்யப்படுகிறது. கட்சியின் சட்ட விதி 19இல் இதற்காக திருத்தம் செய்யப்படுகிறது.

10. பொதுச்செயலாளருக்கு உள்ள அதிகாரம் ஒருங்கிணைப்பு குழுத்தலைவர் ஓ.பன்னீர்செல்வம், இணை தலைவர் எடப்பாடி பழனிச்சாமிக்கு வழங்கப்படுகிறது.

11. துணை ஒருங்கிணைப்பாளர்களாக கே.பி. முனுசாமி, வைத்திலிங்கம் செயற்படுவார்கள்.

12. கட்சியில் யாரையும் நீக்கவும், சேர்க்கவும் எடப்பாடி பழனிச்சாமி, ஓ.பன்னீர் செல்வம் இருவருக்கும் அதிகாரம் வழங்கப்படுகிறது.


இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நேற்றைய கூட்டத்தில் அ.தி.மு.க. பொதுக்குழு - செயற்குழு உறுப்பினர்களில் 95 சதவீதம் பேர் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.

அவர்கள் அனைத்து தீர்மானங்களையும் வரவேற்று ஆதரித்தனர். (3-8)

## 'தமிழ் தினம்' கொண்டாடப்பட வேண்டும்

# பிரதமர் மோடி யோசனை



(டில்லி)

சுவாமி விவேகானந்தர் சிகாகோ மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் மோடி பிற மாநில கல்லூரிகளில் 'தமிழ் தினம்' கொண்டாட வேண்டும் என தெரிவித்தார்.

சுவாமி விவேகானந்தர் சிகாகோ மாநாட்டில் உரையாற்றியதன் 125ஆவது ஆண்டு விழா, தீனதயாள் உபாத் யாயா நூற்றாண்டு விழா ஆகியவற்றை முன்னிட்டு டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாணவர் கள் கருத்தரங்கில் பிரதமர் மோடி கலந்து கொண்டார். அங்கு அவர் பேசியதா வது.

கல்லூரிகளில் பல்வேறு தினங்கள் கொண்டாடுகிறார்கள். ரோஜா தினம் கூட கொண்டாடப்படுகிறது. அதை நான் எதிர்க்கவில்லை.

ஆனால் ஒரு மாநிலத்தில் உள்ள கல்லூரி, பிற மாநிலத்தின் கலாசாரத்தையும் கொண்டாட வேண்டும்.

உதாரணமாக, அரியானாவில் உள்ள கல்லூரியில் 'தமிழ்தினம்' கொண்டாடலாம். பஞ்சாபில் உள்ள கல்லூரியில் 'கேரளா தினம்' கொண்டாடலாம். அப்போது அவர்களது பாடல்களை பாடி, அவர்களை போலவே உடை உடுத்தலாம்.

இது போன்ற கலாசார பரிமாற்றங்கள், அந்த தினத்தை ஆக்கப்பூர்வமானதாக்க செய்யும்.

ஒரே இந்தியா, மாபெரும் இந்தியாவை உருவாக்க உதவும் என்று அவர் தெரிவித்தார். (3-8)

# ஜப்பான் - இ...
# பயணிகள் ரயி...



(மொஸ்கோ)

ஜப்பானில் இருந்து இங்கிலாந்துக்கு ரஷ்யா வழியாக புதிய ரயில் விட திட்டமிடப்பட்டுள்ளது. 13,500 கி. மீற்றர் தூரம் பயணிக்கக்கூடிய இத்திட்டத்தை ரஷ்ய அரசு செயற்படுத்த உள்ளது.

ஜப்பானில் இருந்து மங்கோலியா வழியாக ரஷ்ய தலைநகர் மொஸ்கோவுக்கு பயணிகள் ரயில் போக்குவரத்து நடைபெற்று வருகிறது. சைபீரியன் ரயில்வே போக்குவரத்து நிர்வாகம் இதை செயற்படுத்துகிறது.

பீஜிங்கில் இருந்து மொஸ்கோ வரை குறைந்த பட்சம் 15 நாட்கள் ஆகிறது. இந்த நிலையில் ஜப்பானில் இருந்து இங்கிலாந்துக்கு ரஷ்யா வழியாக புதிய ரயில் விட திட்டமிடப்பட்டுள்ளது.

13,500 கி.மீற்றர் தூரம் பயணிக்க கூடிய இத்திட்டத்தை ரஷ்ய அரசு

# கோரத்தாண்டவ...

## மின்சாரம், உணவு...



(நியூயோர்க்)

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தை நேற்று முன்தினம் கடந்த 'இர்மா' புயல் பலத்த சேதங்களை உண்டாக்கியதால், இலட்சக்கணக்கானோர் மின்சாரம் மற்றும் உணவு இல்லாமல் தவித்து வருகின்றனர்.

வடக்கு அட்லாண்டிக் கடலில் உருவான 'இர்மா' புயல் கரீபியன் தீவுகளை கடந்து அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. புயலின் தாக்கத்திலிருந்து கரீபியன் தீவுகள் இன்னும் மீளாத நிலையில் நேற்று முன்தினம் வரை அங்கு 37 பேர் பலியாகியுள்ளனர்.

செயிண்ட் மார்டின் உள்ளிட்ட பல

# சிங்கப்...
## போட்டியில்...

(சிங்கப்பூர்)

சிங்கப்பூர் நாட்டின் ஜனாதிபதி தேர்தலுக்கான பந்தயத்தில் இருந்த இரு வேட்பாளர்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளதால் மற்றொரு பெண் வேட்பாளரான ஹலிமா யாக்கோப் போட்டியின்றி தேர்வாக உள்ளார்.


சிங்கப்பூர் நாட்டில் ஆறாண்டுகளுக்கு ஒருமுறை புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடைபெறும். அவ்வகையில் தற்

# வெளிநாடு

## – இங்கிலாந்து
## ள் ரயில் சேவை

மற்றும் போலந்து வழியாக வந்து கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழைகிறது.

ரஷ்யாவில் இருந்து கிழக்கு கடல் பகுதியை கடக்க 45 கி.மீ தூரத்துக்கு பாலம் கட்டப்பட உள்ளது.



ங்கிலாந்து
ரயில் விட
500 கி.
டிய இத்
டிபடுத்த

கோலியா
ர் மொஸ்
போக்கு
ருகிறது.
க்குவரத்து
ந்துகிறது.
கோ வரை
ஆகிறது.
இருந்து
வழியாக
டுள்ளது.
பயணிக்
ய அரசு

செயற்படுத்த உள்ளது.

லண்டனில் இருந்து புறப்படும் பயணிகள் ரயில் ரஷ்யாவின் மையப்பகுதி வழியாக ஜப்பானின் வாக்கானனையை சென்றடைய உள்ளது.

முன்னதாக இந்த ரயில் ஜேர்மனி அதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.


இது குறித்து ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஜப்பான் அதிகாரிகளுடன் தீவிர பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார். (3-8)

# திருத்தங்களுடன் நிறைவேறியது வடகொரியா மீதான தீர்மானம்

(நியூயோர்க்)

வடகொரியா மீது வலுவான தடை கோரி ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் திருத்தங்களுடன் நிறைவேறியது.

வடகொரியா மீது கடுமையான தடைகளைக் கொண்டு வந்து நெருக்கடி கொடுக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா ஒரு வரைவு தீர்மானத்தை தாக்கல் செய்தது.



அதில் எண்ணெய்பொருட்களை வடகொரியாவுக்கு கொண்டு செல்வதற்கு தடை, வடகொரியாவிலிருந்து உற்பத்தி செய்யப்படும் ஜவுளி உள்ளிட்ட பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு தடை, அந்நாட்டின் ஜனாதிபதி கிம் ஜாங் உன் இற்கு சொந்தமான வெளிநாட்டு சொத்துக்களை முடக்குவது மற்றும் அவர் பயணம் செய்வதற்கு தடை ஆகிய அம்சங்கள் இடம்பெற்றிருந்தன.

இந்த தீர்மானம் நேற்று முன்தினம் வாக்கெடுப்புக்கு எடுக்கப்பட்டது. ஆனால், வடகொரிய ஜனாதிபதியின் சொத்துக்களை முடக்குவது மற்றும் அந்நாட்டுக்கான பெற்றோலியம் உள்ளிட்ட பொருட்களின் ஏற்றுமதிக்கு தடை விதிப்பது உள்ளிட்ட நிபந்தனைகளை ரஷ்யா மற்றும் சீனா ஏற்கவில்லை என தெரிகிறது.

இதனால், சீனா மற்றும் ரஷ்யாவிடம் அனுசரித்து போகும் விதமாக இந்த தீர்மானத்தில் அமெரிக்க திருத்தங்களை மேற்கொண்டது.

மேற்கண்ட அம்சங்களை நீக்கி விட்டு வடகொரியாவின் நிலக்கரி, லெட் (கனிமப்பொருள்) மற்றும் கடல்உணவுகளை ஏற்றுமதி செய்வதற்கு தடை விதிக்கும் வகையில் திருத்தங்களுடன் கூடிய தீர்மானத்தை அமெரிக்கா தாக்கல் செய்தது.

அமெரிக்காவின் இந்த தீர்மானம் சீனா மற்றும் ரஷ்யா ஆதரவுடன் ஒருமனதாக பாதுகாப்பு கவுன்சிலில் நிறைவேறியது.

முன்னதாக, பெற்றோலியப் பொருட்களுக்கு தடை மற்றும் கிம் ஜாங் உன் சொத்துக்கள் முடக்கம் ஆகிய அம்சங்கள் இடம் பெற்ற அமெரிக்காவின் தீர்மானம் நிறைவேறினால் அதற்காக அமெரிக்கா பெரும் விலையை அளிக்க நேரிடும் என வடகொரியா பாதுகாப்பு அமைச்சகம் எச்சரிக்கை விடுத்திருந்தது. (3-8)

## ண்டவமாடியது 'இர்மா' புயல்

### உணவு இல்லாமல் மக்கள் தவிப்பு!



யாளர்கள் சேதமடைந்த மின்சார நிலையங்களை சரிசெய்து வருவதாகவும் அரசு தெரிவித்துள்ளது.(3-8)

டா மாகா
ம் கடந்த
ங்களை
ணக்கா
உணவு
லில் உரு
பன் தீவு
ன் புளோ
த தாக்
புயலின்
தீவுகள்
நேற்று
37 பேர்
ளிட்ட பல

தீவுகளில் அத்தியாவசிய பொருட்கள் இல்லாமல் பொதுமக்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். நேற்று முன்தினம் அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் மணிக்கு சுமார் 130 கி.மீ வேகத்தில் வீசியது. பலத்த காற்று காரணமாக மின்கம்பங்கள் வீதிகளில் விழுந்தன. மரங்கள் முறிந்து விழுந்ததால் வீதிப் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டது.

புளோரிடா மாகாணத்தின் பல்வேறு நகரங்களில் மின்சாரம் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் இல்லாமல் சுமார் 6 மில்லியன் மக்கள் தவித்து வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன. மீட்புப்பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும், பொறி

## நிலநடுக்கம் வரும் பின்னே குறுஞ்செய்தி வரும் முன்னே

### தமிழக சிறுவனின் சாதனை

நிலநடுக்கம் வரப்போவதை அதற்கு முன்னரே குறுஞ்செய்தி மூலம் தெரிவிக்கும் கருவியை கண்டுபிடித்து தமிழக மாணவன் அசத்தியுள்ளார்.

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த தனுஷ் என்ற ஏழாம் வகுப்பு படிக்கும் மாணவன், நிலநடுக்கம் ஏற்பட்டு அதில் பல உயிர்கள் இறந்த செய்தியை படித்துள்ளார்.

இதுகுறித்து அந்த மாணவன் தன்னுடைய ஆசிரியை யான சுஜாதாவிடம் நிலநடுக்கத்தை தடுக்க முடியாதா என்று கேட்டுள்ளார்.

அதற்கு ஆசிரியை சுஜாதா இல்லை, அது ஒரு இயற்கை பேரிடர்.ஆகவே அதை தடுக்க முடியாது. வேண்டுமானால், நிலநடுக்கம் வருவதை முன்னரே உணர்த்தும் கருவியை தான் கண்டுபிடிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.அதோடுஅந்த மாணவன், நிலநடுக்கத்தை உணர்த்தும் சீஸ்மோகிராபி கருவி குறித்து ஆசிரியரிடம் கற்றுள் ளார்.

அதனையடுத்து 6 மாத கால முயற்சிக்கு பின்னர் தனுஷ் புதிய கருவி ஒன்றை கண்டுபிடித்துள்ளார்.

அந்த கருவி நில அதிர்வுகளை ஜி.பி.ஆர்.எஸ்.சிப் மூலம் மின்காந்த அலையாக மாற்றி, தொலைபேசி கோபுரத்தில் இணைக்கப்பட்டுள்ள சிப் மூலமாக நிலநடுக்கம் வருவதை நமக்கு குறுஞ் செய்தி அனுப்பும் என்று விளக்கியுள்ளார்.தனுஷின்அப்புதிய கண்டுபிடிப்பு விஞ்ஞானிகளையே பிரள வைத்துள்ளது.

தனுஷ் வருங்காலத்தில் மிகப் பெரிய விஞ்ஞானியாகி, இயற்கை பேரிடரிலிருந்து காக்கும் கருவிகளை கண்டுபிடிக்க ஆசை என்று தெரிவித்துள்ளார். (3-8)

# அமெரிக்காவை எவராலும் அச்சுறுத்த முடியாது

## ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பெருமிதம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் இரட்டை கோபுரம் தாக்குதல் நினைவு தினத்தில் கலந்து கொண்ட ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், அமெரிக்காவை யாராலும் அச்சுறுத்த முடியாது என தெரிவித்துள்ளார்.



அமெரிக்காவின் நியூயோர்க்கில் உள்ள இரட்டை கோபுரத்தில் செயற்பட்டு வந்த உலக வர்த்தக மையத்தின் மீது செப்டெம்பர் 11ஆம் திகதி அல்-கொய்தா தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர்.

வர்த்தக மையம் மீது விமானங்களால் மோதி தகர்த்ததில் 3,000 பேர் கொல்லப்பட்டனர். 6,000இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

இந்நிலையில், இரட்டை கோபுர தாக்குதலின் நினைவு தினம் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இந் நிகழ்ச்சியில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கலந்து கொண்டார்.

அப்போது அவர் பேசுகையில், அமெரிக்காவை யாராலும் அச்சுறுத்த முடியாது. நாங்கள் ஒற்றுமையாக இருந்து வருகிறோம். உலகில் உள்ள எந்த சக்தியாலும் எங்களை ஒன்றும் செய்ய முடியாது என்றார்.

இரட்டைக் கோபுர தாக்குதலில் தீவிரவாதிகளுடன் துணிச்சலாக சண்டையிட்ட பொலிஸார் மற்றும் பாதுகாப்பு படையினரின் வீரத்தை ட்ரம்ப் நினைவுகூர்ந்தார். இதில் அமெரிக்காவின் துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றபின் டொனால்ட் ட்ரம்ப் கலந்து கொள்ளும் முதல் இரட்டை கோபுர தாக்குதலுக்கான அஞ்சலி நிகழ்ச்சி இது என்பது குறிப்பிடத்தக்கது. (3-8)

# கப்பூரின் ஜனாதிபதி
## யின்றி தெரிவாகவுள்ளார்



னாதிபதி
இருந்த
நீக்கம்
ற்றொரு
மா யாக்
க உள்

ராண்டு
னாதிப
தேர்தல்
லில் தற்

போதைய ஜனாதிபதி டோனி டான் பதவிக்காலம் விரைவில் நிறைவடை வதால் எதிர்வரும்23 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் என கடந்த மாதம் அறிவிப்பு வெளியானது.

இந்த முறை நடைபெறும் தேர்தலில் அந்நாட்டின் சிறுபான்மையினரான மலாய் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் மட்டும்தான் போட்டி யிடலாம் என்ற விதிமுறை உள்ள நிலையில் நாட்டின் எட்டாவது ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்காக நடைபெறும் இந்த தேர்தலில் போட்டியிடப் போவதாக பாராளுமன்ற முன்னாள் சபாநாயகர் ஹலிமா யாக்கோப் என்ற பெண்மணி அறிவித்திருந்தார்.

இதேபோல், இந்திய வம்சாவளியை சேர்ந்த பிரபல தொழிலதிபர் முஹம்மது சாலே மரிக்கான் மற்றும் பரித் கான் கைம்கான் ஆகியோரும் இந்த தேர்தலில் போட்டியிட மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

இந்நிலையில், இந்த தேர்தல் தொடர்பான வேட்பு மனுக்கள் நேற்று முன்தினம் பரிசீலிக்கப்பட்டன. இதனையடுத்து, முஹம்மது சாலே மரிக்கான் மற்றும் பரித் கான் கைம்கான் ஆகிய இருவரின் மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுவதாக தேர்தல் அதிகாரிகள் அறிவித்தனர்.


போட்டியாளர்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டுவிட்டதால் ஹலிமா யாக்கோப் மட்டுமே ஜனாதிபதித் தேர்தல் பந்தயத்தில் உள்ளார்.

இதன்மூலம் அவர் ஒருமனதாக ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட இருக்கிறார்.

சிங்கப்பூர் அரசியல் வரலாற்றில் முதல் பெண் ஜனாதிபதியாக ஹலிமா யாக்கோப் முடிசூடவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (3-8)

# நட்பு நாடுகளுடன் பொருளாதார உறவை பேணுவதற்கு இலங்கை விரும்புகின்றது

## புதிய தூதுவர்களிடம் ஜனாதிபதி சுட்டிக்காட்டு



(கொழும்பு)

இலங்கைக்கான மூன்று புதிய தூதுவர்கள் நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தமது நியமனக் கடிதங்களை கையளித்தனர்.

எஸ்டோனியா குடியரசு, பெரு குடியரசு மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் தூதுவர்களே தமது நியமனக் கடிதங்களை கையளித்தனர்.

ரீஹோகுரூஎஸ்டோனியா குடியரசின் தூதுவர் ஜோர்ஜ் ஜீவான் கஸ்டனிடா மெண்டிஸ் -பெரு நாட்டின் தூதுவர் திருமதி சுலாமனீ சார்ட்சுவான் - தாய்லாந்து தூதுவர் சிறந்த நட்புறவுகளை பேணி வரும் நாடுகள் தமக்கிடையே உறுதியான நீண்டகால இருதரப்பு உறவுகளை உறுதி செய்வதற்கு பொருளாதார கூட்டுறவை பலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி தூதுவர்களிடம் தெரிவித்தார்.

நட்பு நாடுகளுடன் பலமான பொருளாதார உறவுகளை பேணுவதற்கு இலங்கை விரும்புவதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலாத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு கூட்டுறவை மேலும் பலப்படுத்துவதற்கு புதிய தூதுவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவார்கள் என்றுதான் நம்புவதாகவும் தெரிவித்தார்.

அமைச்சர் திலக்மாரப்பன, ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பிரசாத் காரியவசம் ஆகியோரும் இந்நிகழ்வில் பிரசன்னமாகியிருந்தனர். (இ-3)

# நிரந்தர நியமனம் வழங்கக் கோரி சுகாதாரத் தொண்டர்கள் ஆர்ப்பாட்டம்





(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் சுகாதாரத் தொண்டர்கள் தங்களுக்கான நிரந்தர நியமனங்களை வழங்கக்கோரி நேற்று முன்தினம் காலை கண்டன போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது மட்டக்களப்பு புதிய பாலம் அருகில் இருந்து ஊர்வலமாகச் சென்ற சுகாதாரத் தொண்டர்கள் காந்திபூங்கா முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த ஆர்ப்பாட்டப் பிரதேசத்திற்கு வருகைதந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான வியாழேந்திரன், யோகேஸ்வரன் ஆகியோர் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் கலந்துரையாடியதுடன், நியாயமான கோரிக்கையினை பூர்த்தி செய்ய கிழக்கு மாகாண சபை நடவடிக்கையெடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். (இ-7)

# ஆட்கடத்தலை முறியடிக்க படிப்பறிவு மிக அவசியம்

## அவுஸ்திரேலிய அரசு அறிக்கை

(கொழும்பு)

ஆட்கடத்தலை முறியடிப்பதற்குப் படிப்பறிவு மிக முக்கியமானது என அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலிய குடிவரவு, குடியகல்வு திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கான சட்டவிரோத படகு முயற்சியைத் தடுப்பதில் அவுஸ்திரேலியாவின் வலுவான எல்லைப் பாதுகாப்புக் கொள்கைகள் மற்றும் திறமைகள் மிகவும் ஆற்றல் வாய்ந்தவையென நிரூபித்துள்ளன எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

# சொகுசு வாகனங்களைப் பயன்படுத்தி குற்றச்செயல்களில் ஈடுபட்டோர் கைது

சொகுசு வாகனங்களைப் பயன்படுத்தி கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த அறுவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சொகுசு வாகனங்களை வாடகைக்குப் பெற்றுக் கொண்டு பல்வேறு இடங்களில் ஆயுதங்களைக் காட்டி மிரட்டி, குழுவொன்று கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வருவதாக மிரிஹானை குற்றத்தடுப்புப் பிரிவினருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதனடிப்படையில் மாலபே, பலாங்கொடை மற்றும் பியகம பகுதியைச் சேர்ந்த மூவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கஹதுடுவ, பியகம, முல்லேரியாவை, பலாங்கொடை, தெஹிவளை, கிரிபத்கொடை, கட்டான பகுதிகளில் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டமை தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்களை கெஸ்பேவ நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய பின்னர், எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அதன்பின்னர் அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் மேலும் மூவரை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

இவர்கள் வசமிருந்த சொகுசு வாகனங்கள், ஆபரணங்கள், ஆயுதங்கள் என்பவற்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மிரிஹானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### கடிதம் எழுதும் போது கவனிக்க வேண்டியவை

பல பேர் அந்தந்த நேரத்து உணர்வுகளை வெளிக்காட்டுவதற்கு போயும் போயும் கடிதத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார்கள்.

நம்மை எரிச்சலூட்டும்படி ஒருவர் நம் எதிரில் அமர்ந்து கொண்டு பேசுகிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் விரிக்கும் வலையில் விழுந்து உணர்ச்சிவசப்பட்டு எதையேனும் உளறிக் கொட்டவும் தவறாகப் பேசிவிடவும் வாய்ப்பு இருக்கிறது.

சிந்திக்க அவகாசம் கிடைக்காததால் இத் தவறு நிகழ்கிறது. கடிதம் என்பது அப்படி இல்லையே.

நம்மை எரிச்சலூட்டி ஒரு கடிதம் வந்தால் கூட, ஆற அமரச் சிந்தித்து சாதக பாதகங்களை எடை போட்டுப் பார்த்து பிறகு அவர் செய்த தவறை எண்ணி வருந்தும்படி நம்மால் பதிலிட முடியும். கடிதத்தில் இந்த அனுகூலத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரியாமல் இவர்களுள் உணர்ச்சிவசப்பட்டு பதிலிட்டு உறவைக் கெடுத்துக் கொள்கிறார்கள்.

பேச்சு வாக்கில் சொன்னதைக் கூட நாம் இல்லை என்றோ அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை என்றோ வாதிட்டுச் சமாளிக்கலாம். ஆனால் எழுத்துபூர்வமான ஆதாரம் என்பது ஒரு பயங்கரமான விடயம். இது பலருக்கும் ஆதாரபூர்வமாகத் தெரிவிக்கப் பயன்படும் என்பதுடன் நீதிமன்றத்தில் கூட இது எடுபட்டு விடும்.

எனவே கடித வாசகங்களைக் கவனத்துடன் எழுத வேண்டும். அதையும் இதையும் எழுதி எக்கச்சக்கமாய் மாட்டிக் கொண்டு விழிக்கக்கூடாது.

கோபத்தைத் தூண்டும் கடிதங்களுக்கு ஆற அமரப் பதிலிட வேண்டும். இதன்மூலம் நம் மனத்திலிருந்து பக்குவமான உணர்வுகள் வெளிப்பட வாய்ப்பு ஏற்படுகிறது. எழுதிப் பார்த்துவிட்டு இது இந்தப் பொருளைத் தருமோ? அந்தத் தொனியைத் தருமோ என்று பல கண்ணோட்டங் களில் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நாம் ஒரு பொருளில் எழுத அது வேறு ஒன்றாகப் புரிந்து கொள்ளப்பட்டால் அது ஒரு தோல்விக் கடிதம், சொற்களைத் தேர்ந்தெடுப்பதில் கவனமாக இருப்பதும் சற்றே விளக்கமாக எழுதுவதும் தவறான தொனியில் எடுத்துக் கொள்ளப்படுவதைத் தவிர்க்கும்.

முடியாது; கிடையாது; இல்லை என்பன போன்ற சொற்கள் கடிதத்தைப் பொறுத்தவரை முரட்டுத்தனமான சொற்கள். இவை படிப்பவர்களின் கவனத்தைக் காயப்படுத்தும். உங்களுக்கு உதவ முடியாது என்று எழுதாமல் இம்முறை உதவ இயலாதோ என்று நான் அஞ்சுகிறேன் என்கிற பாணியில் எழுத வேண்டும்.

கடிதத்தைப் பலரும் படிக்க வாய்ப்பு உள்ளது என்பதால் தனிப்பட்ட நபரை மட்டுமே கவனத்தில் கொண்டு எழுதும் போக்குத் தவிர்க்கப்பட வேண்டும். பாராட்டுவதற்கும் புகழ்வதற்கும் கடிதத்தைவிட அற்புதமான கருவி இருக்க முடியாது. நேரில் பாராட்டினால் படுசெயற்கையாகப்படும் விடயம் கடிதத்தில் பிரமாதமாக எடுபடும்.

கடிதங்களையும் நட்பையும் நல்லுறவையும் தொழிலையும் வளர்க்க மட்டுமே பயன்படுத்த வேண்டும். இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாதவர்களுக்குக் கடிதப் போக்குவரத்து என்பது தலைவலி தரும் பிரச்சினையாகவே ஆகிவிடும்.

சேனா தமிழ்வாணன்

### சன் சீ கப்பல் விவகாரம்

# இலங்கைத் தமிழருக்கு கனடாவில் தண்டனையின் பின்னர் விடுதலை!

தமிழ் குடியேற்றவாசிகளை சட்டவிரோதமாக கனடாவுக்கு கப்பல் மூலம் அழைத்து வந்தார் என்ற குற்றச்சாட்டில், இலங்கைத் தமிழர் ஒருவருக்கு கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பிய உச்சநீதிமன்றம் 4 ஆண்டுகள் சிறைத் தண்டனையை விதித்துள்ளது.

கனடாவின் குடிவரவு மற்றும் அகதிகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் குற்றவாளியாகக் காணப்பட்ட, குணரொபின்சன் கிறிஸ்துராஜா என்பவருக்கே நேற்று முன்தினம் இந்த தண்டனை அறிவிக்கப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டு சுமார் 500 இலங்கைத் தமிழ் அகதிகளை கப்பல் ஒன்றில், ஆபத்தான பயணத்தை மேற்கொண்டு கனடாவுக்கு அழைத்து வந்தார் என்று இவர் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எனினும், இந்த வழக்கு நடந்த ஏழு ஆண்டுகளாக, குணரொபின்சன் கிறிஸ்துராஜா சிறையில் இருந்தார் என்பதால், நான்கு ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட அவரை நீதிபதி விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

கிறிஸ்துராஜாவும் தன்னை இந்தக் கப்பலில் வந்த அடைக்கலம் கோருபவராகவே வெளிப்படுத்தியுள்ளார். இவர் கப்பலின் தலைவரோ அல்லது இந்தப் பயணத்துக்கு மூளையாகச் செயற்பட்டவரோ அல்ல. இவரது குடும்பத்தினரும், ஏனையவர்களைப் போலத் தான் பயணித்துள்ளனர் என்றும் நீதிபதி கதரின் வெட்ஜ் தமது தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எம்வி சன்சீ என்ற சரக்குக் கப்பலில், 492 இலங்கை தமிழ் அகதிகள் 2010ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வன்கூவரைச் சென்றடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



(கேலிச்சித்திரம்)

# ஜனாதிபதியிடம் பொதுமன்னிப்பு கோரமாட்டேன்

## லலித் வீரதுங்க திட்டவட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் பொதுமன்னிப்பு கோரப் போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

600 மில்லியன் ரூபா பணத்தை மோசடி செய்துள்ளதாகக் குற்றம் சுமத்தி லலித் வீரதுங்க மற்றும் தொலைதொடர்பு கட்டுப்பாட்டு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட்ட ஆகியோருக்கு எதிராக தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மூன்றாண்டு கால கடூழிய சிறைத்தண்டனையும், அபராதமும் நீதிமன்றினால் விதிக்கப்பட்டுள்ளது. அப்போதைய அரசாங்கத்தின் கொள்கை அடிப்படையிலான தீர்மானத்திற்கு அமைய இவ்வாறு சில் ஆடைகளை விநியோகம் செய்ததாக லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பெல்பிட்ட ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

தமக்கு விதிக்கப்பட்ட தண்டனை குறித்து ஜனாதிபதியிடம் மன்னிப்பு கோரப் போவதில்லை என லலித் வீரதுங்க, சிறையில் அவரை பார்வையிடச் சென்ற கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்களிடம் உறுதிபடக் கூறியுள்ளார். (இ-7)

### குற்றவாளிகளான

# லலித் வீரதுங்க-அனுஷ பெல்பிட்ட ஆகியோருக்கு தண்டப் பணம் செலுத்த 1000 பிக்குகள் களத்தில்

குற்றவாளியாகத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் அரச அதிகாரி அனுஷ பெல்பிட்ட ஆகியோருக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள தண்டப் பணத்தை செலுத்துவதற்கு இந்நாட்டிலுள்ள பிக்குகள் முன்வந்துள்ளதாக பேராசிரியர் மெதகொட அபய திஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

இந்த தண்டப் பணத்தை சேகரிப்பதற்கு 1000 பிக்குகளைக் கொண்டு சமயக் கிரியைகளை முன்னெடுக்க வுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.





இதற்காக வேண்டி கொழும்பு புறக்கோட்டையில் அமைந்துள்ள சம்புத்தாலோக விகாரையில் நாளை மறுதினம் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு பிக்குகள் ஒன்றுகூடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் 16,17 ஆம் திகதிகளில் நாடு முழுவதிலும் இது போன்ற சமய நிகழ்வுகளில் பிக்குகள் ஈடுபடவுள்ளனர்.

இவற்றின் மூலம் சேகரிக்கப்படும் நிதி 18 ஆம் திகதி கொழும்பில் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

### சிவாஜிலிங்கம் தலைமையில் ஐவர்

# ஜெனிவா பயணம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 36 ஆவது கூட்டத்தொடர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமாகியுள்ள நிலையில் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விவாதிப்பதற்கு வடக்கு மாகாண சபையின் 5 பேர் கொண்ட குழுவினர் ஜெனிவா பயணமாகியுள்ளனர்.



வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், ஆ.புவனேஸ்வரன், தியாகராஜா மற்றும் முன்னாள் உறுப்பினர் மயூரன் ஆகியோரே பயணமாகியுள்ளனர்.

இலங்கையில், இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணையினை வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையிலான வடமாகாண அரசு கோரிநிற்கின்றது. இந்நிலையில் இவர்களின் இப்பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

ஜெனிவாவில் இலங்கையின் மனித உரிமைகள் விடயங்கள் தொடர்பான விவாதம் இடம்பெறும் போது இலங்கையின் நிலைமைகள் தொடர்பாக மாகாண சபை உறுப்பினர்கள் அனைவரும் விசேட உரையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-ஐ)

# மரண அறிவித்தல்

## சபாரத்தினம் சீதாலெட்சுமி

(முன்னாள் பரிசாரகர் கோப்பாய் அரசினர் வைத்தியசாலை)



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1940.06.26 | 2017.09.10 |

வேரவில் பூநகரியை பிறப்பிடமாகவும் நீர்வேலி மேற்கு நீர்வேலியைப் வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் சீதாலெட்சுமி அவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை (10.09.2017) அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை (14.09.2017) முற்பகல் 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி மேற்கு, நீர்வேலி (340) தகவல்:-குடும்பத்தினர்.



மகாகவி பாரதியாரின் 95 ஆவது ஆண்டு நினைவு நாளையொட்டி யாழ்ப்பாணம்- நல்லூர் அரசடியில் உள்ள பாரதியாரின் திருவுருவச் சிலைக்கு முன்பாக நேற்று முன்தினம் மாலை தமிழ் ஆர்வம் மிக்க இளைஞர்கள் ஒன்று கூடி நினைவுச் சுடரேற்றினர். (படங்கள்:- ஐ.சிவசாந்தன்)

# கிழக்கு மாகாண ஆட்சி நிறைவை நோக்கியது

## முதலமைச்சர் நஷீர் கூறுகிறார்



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் கூட்டுச் சேர்ந்துள்ள கிழக்கு மாகாண ஆட்சி, தனி இனத்துக்குரிய பதவிகளை நோக்கி நகர்த்தப்படாமல், அது ஒரு நிறைவான இலக்கை நோக்கி நகர்த்தப்படுகின்றது என, கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

மாகாண சபை பதவிக் காலம் நீடிக்கப்படுமாக இருந்தால், அடுத்த முதலமைச்சர் பதவி, சிறுபான்மை இனங்களில், எந்த இனத்த வருக்குக் கொடுக்கப்படும் என்ற கேள்விக்கு, அவர் நேற்று முன்தினம் பதிலளிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"சிறுபான்மை மக்களின் தனித்துவமான உரிமைகள், அரசியல் அபிலாஷைகள், பாதுகாப்பு, பொருளாதார மேம்பாடு, இன ஐக்கியம் என்பன தற்போதைய கிழக்கு மாகாண ஆட்சியின் இலக்குகளாகும்.

"மூவின மக்களும் வாழும் கிழக்கு மாகாணத்தில், தமிழ்பேசும் மக்கள் பெரும்பான்மையினராக உள்ளனர். எனவே, மூவினங்களுக்கிடையிலும் எந்தவித இன முரண்பாடுகளுமில்லாமல், ஐக்கியப்பட்ட ஆட்சியை நடத்திச் செல்வதே, எமது முழுமுதற் கடமையாகும்.

"அதேவேளை, ஒட்டு மொத்த மாகாணத்தில் மூவின மக்களுடைய பிரச்சினைகள் அடையாளங் காணப்பட்டு அவற்றுக்கான தீர்வுகளை அடைந்து கொள்வதற்குரிய யுக்திகளை வகுத்ததாக, இப்பொழுது மாகாண சபை நிர்வாகம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

"இந்த மாகாணமே சகல இனங்களும் சகல கட்சிகளும் பங்கு கொண்ட நல்லாட்சியாக, முழு இலங்கைக்கும் முன்னுதாரணமாக இருந்து கொண்டிருக்கின்றது.


"கிழக்கில், இன நல்லுறவு சிறப்பாக இல்லை என்று எப்போதாவதொருமுறை, கொழும்பிலிருந்து கிழக்குக்கு வந்து, மேலெழுந்தவாரியாகப் பேசிவிட்டுச் செல்கின்ற அரசியல்வாதிகளின் மேடைப் பேச்சுக்கு, நான் ஒரு வித அங்கீகாரமும் வழங்குவதில்லை. நேரடியாகச் சொல்வதாயின் அவர்களை நான் கணக்கெடுப்பதே இல்லை.

"வெறுமனே, வந்து விட்டோம். ஏதாவது இன உணர்வோடு கவர்ச்சியாகப் பேச வேண்டும் என்பதற்காகக் கள நிலவரங்களை அறிந்து கொள்ளாமல், உளறிவிட்டுச் செல்வோர் பற்றி ஒருவரும் கணக்கெடுப்பதில்லை. ஆதாரபூர்வமாக, ஆக்க பூர்மாக கரிசனையுடன் எதையாவது சொன்னால், அதைப் பற்றி சிந்திக்கலாம். அப்படிச் செய்வதுதான் சரியானதும் தேவையானதும் ஆகும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஆளுநருடன் மக்கள் சந்திப்பு இன்று இல்லை

வாரம்தோறும் புதன்கிழமைகளில் யாழ்.சுண்டுக்குளியில் அமைந்துள்ள ஆளுநர் அலுவலகத்தில் நடைபெறும் மக்கள் சந்திப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் இன்று நடைபெற மாட்டாது என்றும் எதிர்வரும் 20.09.2017 புதன்கிழமை வழமைபோன்று மக்கள் சந்திப்பு நடைபெறும் என ஆளுநரின் பிரத்தியேகச் செயலர் ஜே.எம்.சோமசிறி தெரிவித்துள்ளார். (இ-60)

## வீதி புனரமைப்பு எப்போது?



வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வறுத்தலை விளானிலிருந்து சாந்தை வரையான வீதி புனரமைப்பு செய்யப்படாது குண்டும் குழியுமாக இருப்பதனால் இவ் வீதியால் பயணம் செய்வோர் பெரும் அசௌகரியங்களுக்குட்படுவதாக பிரதேச மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை யெடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-23)

## சப்ரகமுவ மாகாணத்திலும் 20 இற்கு ஆதரவு

இலங்கையிலுள்ள அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தலை ஒரே நாளில் நடத்துவது, தொடர்பான 20 ஆவது திருத்தச் சட்டத்திற்கு சப்ரகமுவ மாகாணத்திலும் ஆதரவு கிட்டியுள்ளது.

இது தொடர்பான யோசனை நேற்று மாகாண சபை அமர்வுகளில் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதற்கு ஆதரவாக 29 வாக்குகளும், எதிராக 8 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய 21 மேலதிக வாக்குகளால் இந்த யோசனை சப்ரகமுவ மாகாண சபையில் நிறைவேறியுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் 20 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான யோசனை கிழக்கு மற்றும் மேல் மாகாணங்களிலும் நிறைவேற்றப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கொலையுடன் தொடர்பா? வைத்தியசாலையின் பாதுகாப்பு அதிகாரிகள் மூவர் விளக்கமறியலில்

(கொழும்பு)

நபர் ஒருவரின் மரணம் தொடர்பில் சிலாபம் பொது வைத்தியசாலையில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த மூன்று பேர் எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 9ஆம் திகதி இரவு அதிக மது போதை காரணமாக வைத்தியசாலைக்குள் செல்ல முற்பட்ட நபர் ஒருவரை, குறித்த பாதுகாப்பு அதிகாரிகள் வைத்தியசாலைக்குள் நுழைய அனுமதிக்காத நிலையில், மறுநாள் காலை அந்நபர் வைத்தியசாலைக்கு முன்னாலிருந்து சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபர் வைத்தியசாலைக்குள் நுழைய முற்பட்ட போது அந்த பாதுகாப்பு அதிகாரிகள் தள்ளி விடுவதை அருகில் உள்ள மலர்சாலை ஒன்றின் ஊழியர் ஒருவர் கண்டுள்ளார்.

இதனையடுத்து அந்த ஊழியர் பொலிஸாருக்கு தெரிவித்துள்ள நிலையில், சந்தேகநபர்களை கைது செய்து இது கொலையா என்ற கோணத்தில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயம்

(கொழும்பு)

கிரிபாவ, வராவெவ பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

வராவெவ பிரதேசத்தில் குறுக்கு வீதி ஒன்றில் மோட்டார் சைக்கிளில் வந்த குழுவொன்று துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர் தம்புத்தேகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

34 வயதுடைய வராவெவ பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்துள்ளார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 50 | 80 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 240 | 150 | 220 | 300 | 280 |
| தக்காளி | 200 | 100 | 180 | 240 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 80 | 60 | 80 |
| கோவா | 80 | 50 | 100 | 100 | 100 |
| கரட் | 100 | 100 | 160 | 160 | 140 |
| பூசணி | 40 | 25 | 50 | 60 | 40 |
| புடோல் | 80 | 50 | 100 | 80 | 60 |
| வாழைக்காய் | 100 | 60 | 100 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 240 | 220 | 300 | 350 | 280 |
| பெரிய வெங்காயம் | 130 | 250 | 180 | 160 | 120 |
| பாகற்காய் | 200 | 150 | 200 | 200 | 180 |
| வெண்டிக்காய் | 50 | 50 | 50 | 80 | 80 |
| கிருணைக் கிழங்கு | 80 | 80 | 120 | 100 | 100 |
| பயற்றங்காய் | 150 | 100 | 140 | 160 | 100 |
| லீக்ஸ் | 100 | 100 | 150 | 160 | 120 |
| பீற்றூட் | 60 | 25 | 50 | 80 | 40 |
| கறிமிளகாய் | 120 | 70 | 140 | 160 | 140 |
| முருங்கைக்காய் | 50 | 40 | 100 | 80 | 100 |
| போஞ்சி | 200 | 100 | 160 | 200 | 130 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 100 | 100 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 50 | 30 | 40 |
| தேசிக்காய் | 350 | 250 | 350 | 400 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 75 | 60-100 | 60 |
| இராசவள்ளி | 250 | 200 | 350 | 500 | 300 |
| வெங்காயப்பூ | 200 | 150 | 240 | 200 | 50 |
| முள்ளங்கி | 60 | 30 | 80 | 80 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 50 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 15 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 30 | 40 | 40 | 60 |

# கூட்டுப்பங்களிப்புடன் அபிவிருத்தி வேலைத்திட்டம்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

அரச,தனியார் துறையின் கூட்டுப் பங்களிப்புடன் நாட்டை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

CIMA நிறுவனம் கொழும்பு சினமன் ஹோட்டலில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்த தலைமைத்துவ மாநாட்டில் கலந்து கொண்டு பிரதமர் இவ்வாறு உரையாற்றினார்.

பிரதமர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

இரு பிரதான கட்சிகள் ஒன்றுபட்டு நல்லாட்சி அரசாங்கத்தை உருவாக்கியுள்ளன. இதைப் போன்று அரச, தனியார் துறையின் பங்களிப்புடன் நாட்டை சிறப்பாக அபிவிருத்தி செய்ய முடியும் என்று பிரதமர் நம்பிக்கை வெளியிட்டார்.



அரசாங்கம் நாட்டை பொறுப்பேற்றபோது பெரும்பாலான சவால்கள் இருந்தன. இரண்டு வருட காலப் பகுதியில் பல சவால்களை வெற்றிகண்டு நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்ல அரசாங்கத்தால் முடிந்துள்ளது.

வருமானத்தை அதிகரித்து நாட்டு மக்களுக்கு வெற்றிகளை ஈட்டித் தருவது அரசாங்கத்தின் நோக்கமாகும்.

இதில் தனியார் துறையினருக்கு பெரும் பங்களிப்பு உள்ளது என்று பிரதமர் சுட்டிக்காட்டினார்.

நவீன தொழில்நுட்பத்துடன் நாட்டை முன்னோக்கிச் செலுத்த புதிய கல்வி முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களின் கணனி அறிவை மேம்படுத்தி, நாடுமுழுவதும் இலவச வைபை வலயங்களை உருவாக்கப் போவதாக பிரதமர் இதன்போது குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டில் கூகுள் கிளவுட்ஸ் அமைப்பின் தலைவர் மோகீப் பான்டே உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (இ-7)

# தேவாலயம் இடிந்தது



ஹற்றன் - செனன் தோட்டத்தின் ஜீ.டி பிரிவில் அமைந்துள்ள யூதாததையூ கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று இடிந்து விழுந்துள்ளது.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

சீரற்ற காலநிலை காரணமாக இந்த அனர்த்தம் ஏற்பட்டிருக்கலாம் என பிரதேசவாசிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த தேவாலயம் இந்த தோட்டத்தில் 31.05.1987 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டு திறப்பு விழா செய்யப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஹற்றன் பகுதியில் பெய்து வந்த கடும் மழையில் பல்வேறு கட்டடங்களில் வெடிப்புகள் ஏற்பட்டும் மண்சரிவுகளும் உண்டானது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் குறித்த தேவாலயத்தின் சுவர்கள் இடிந்தும், கூரைகள் உடைந்தும் வீழ்ந்துள்ளதுடன், ஒரு பகுதியில் சுவர் சாய்ந்த வண்ணத்துடன் தேவாலயத்தில் பொருத்தப்பட்டிருந்த சொரூபத்தின் பகுதியளவு சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இவ் வருடத்தில் இதுவரை 1710 ஊழல் முறைப்பாடுகள்

(கொழும்பு)

இவ்வருடத்தின் நிறைவடைந்துள்ள காலப்பகுதிக்குள் 1,710 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறித்த முறைப்பாடுகளில் 1,020 முறைப்பாடுகள் மேலதிக விசாரணைகளுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் சட்ட மூலத்தில் தொடர்புபடாத மற்றும் போதியளவு சாட்சியங்கள் இல்லாத 404 முறைப்பாடுகள் மேலதிக விசாரணை செய்யப்படாது எனவும் ஆணைக்குழுவின் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சரத் ஜயமான்ன தெரி வித்துள்ளார்.

2015ஆம் ஆண்டில் இலஞ்சம் பெற்றமை தொடர்பிலான 3964 முறைப்பாடுகளும் 2016ஆம் ஆண்டில் 3450 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் கடந்த 8 மாத காலப்பகுதிக்குள் ஆணைக்குழு மூலம் 51 வழக்குகள் தொடரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த வழக்கு தாக்கல்களில் 24 வழக்குகள் நீதவான் நீதிமன்றத்திலும் 27 வழக்குகள் மேல் நீதிமன்றத்திலும் பதியப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1188

விதுசன்




கேசவன்




கமலாசினி




காவேரி




பூங்கோதை




நிவேதிதன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தொலைக்காட்சி உலகில் மக்களை ஈர்த்த பிக்போஸ்




## சூடுபிடிக்கும் பிக்போஸ்



குடும்பம் என்று ஒன்றாக இருந்த போட்டியாளர்கள் இடையே இப்போது போட்டி வந்துவிட்டது. 100 நாட்கள் நெருங்க போட்டியாளர்களும் குறைந்து கொண்டே வருகிறார்கள்.

6 பேரில் யார் ஜெயிப்பார்கள் என்பது தெரியவில்லை. இந்த நிலையில் இந்த வார எலிமினேட் செய்ய விரும்புபவர் யார் என்று போட்டியாளர்கள் தங்களுக்கு போட்டி என்று நினைப்பவர்களை நோமினேட் செய்கிறார்கள்.

இதன்போது உள்ளே இருந்து சுஜா பிக்போஸ் இல்லத்திற்குள் மீண்டும் அனுப்பி வைக்கப்பட்டார். எல்லோருக்கும் சற்று அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

பிக்போஸ் மீண்டும் டாஸ்க் கொடுத்துள்ளார். அதில் இறுதியாக 5 புள்ளிக்கான Gold Card ஐ கண்டுபிடிக்க சொல்லுகிறார்.

ஆனாலும், அதை வைத்துதான் யாருக்கு என்ன புள்ளி கிடைத்துள்ளது என்பது தெரிய வரும்.

## பிக்போஸில் வெற்றிபெற்றால் சிநேகனின் முடிவு



பிக்போஸ் நிகழ்ச்சி இறுதிக்கட்டத்தை நெருங்கி வருவதால் தற்போது மிகவும் பரபரப்பாக இருக்கிறது. கடைசி நிகழ்ச்சியில் ஒட்டுமொத்தமாக 4 பேர் வெளியேறிவிட்டனர்.

இந்த நிலையில் சிநேகன், வையாபுரியிடம் நிகழ்ச்சியில் ஜெயித்து விட்டால் ஒரு 100 கிராமங்களுக்கு பொதுவாக பெரிய நூலகத்தை வைத்து தலைவரை கொண்டு திறக்க வேண்டும். பிக்போஸ் நூலகம் என்று பெயர் வைக்க வேண்டும் என்று மனம் திறந்து பேசியுள்ளார்.

## பிக்போஸ் நிகழ்ச்சிக்கு வரமறுத்த பிரபலங்கள்




பொலிவுட்டில் ஹிட்டான பிக்போஸ் நிகழ்ச்சி தமிழ், தெலுங்கிலும் ஹிட். ஹிந்தியில் இன்னும் 20 நாட்களில் இந்நிகழ்ச்சியின் 11ஆவது சீசன் தொடங்க இருக்கிறது.

இதில் நிகழ்ச்சி குழுவினர் மிகவும் சர்ச்சையானவர்களை தேடி அவர்களை வீட்டிற்குள் அனுப்ப முயற்சி செய்தனர்.

அதில் சில பேர் நிகழ்ச்சிக்கு வர முடியாது என்று மறுத்துள்ளனர். தற்போது இந்த சீசனில் கலந்து கொள்ள எந்தெந்த பிரபலங்கள் மறுத்துள்ளனர் என்ற விபரம் இதோ

எவ்லின் ஷர்மா (நடிகை), பாரதி (தொகுப்பாளினி), தேஜஸ்வி (நடிகை), நஸர்கான் (ஆர்ஜே), ஷில்பா ஷிண்டே (நடிகை).

## பிக்போஸ் வீட்டுக்கு செல்கிறாரா க்ரிஷ்



ஒரு பிரபல தொலைக்காட்சியில் கமல் தொகுத்து வழங்கிவரும் பிக்போஸ் நிகழ்ச்சி பரபரப்பான கட்டத்தை எட்டியுள்ளது.

இன்னும் சில வாரங்களே எஞ்சியுள்ள நிலையில் தற்போது 6 போட்டியாளர்கள் மட்டுமே வீட்டில் உள்ளனர்.

இந்நிலையில் பாடகர், நடிகர் க்ரிஷ் பதிவிட்ட ஒரு ட்விட்டில் "நான் ஒரு நல்ல விடயத்திற்காக ட்விட்டரை விட்டு விலகுகிறேன்" என கூறியிருந்தார்.

பிக்போஸ் வீட்டுக்கு செல்கிறீர்களா?" என ரசிகர்கள் அவரை தற்போது கேள்வி கேட்டு வருகின்றனர்.

## ஒரு டுவிட்டால் ஒட்டுமொத்த ஓவியா ரசிகர்களை தன் ரசிகராக்கிய பிரபல நடிகர்



பிக்போஸ் நிகழ்ச்சியின் மூலமாக ஒட்டுமொத்த ரசிகர்களையும் கவர்ந்தவர் ஓவியா, தற்போது திரையுலகில் அதிக ரசிகர்களை கொண்ட ஒரே நடிகை என்றால் அது ஓவியா தான்.

சமீபத்தில் நெருப்புடா படம் வெளியானது. இந்த படத்தின் கதாநாயகனாக நடித்துள்ள விக்ரம் பிரபு ஓவியா இல்லாத பிக்போஸ் வீட்டிற்குள் நான் வர மாட்டேன் என ட்வீட் போட்டிருந்தார்.

இது பற்றி ஓவியா ஆர்மியினர் நீங்களும் எங்கள் கட்சியா? ஓவியாவை உங்களுக்கு பிடித்திருப்பதால் எங்களுக்கு உங்களை பிடித்திருக்கு என அவருடைய டீவீட்டுக்கு பதிலளித்து வருகின்றனர்.

## போட்டியாளர்களுக்கு வெளியே இருந்துவரும் தாக்குதல்கள்



தமிழ் தொலைக்காட்சிகளில் தற்போது மிகவும் பிரபலம் பிக்போஸ். கடந்த வாரம் மிகவும் ஜாலியாக இருந்தது, ஆனால் இந்த வாரம் ஒவ்வொரு நாளும் வித்தியாசமான Task போட்டியாளர்களுக்கு கொடுக்கப்படுகிறது.

இதனால் ஒவ்வொருக்குள்ளும் பெரிய பதட்டமே காணப்படுகிறது. இந்த வார Taskல் போட்டியாளர்களுக்கு வெளியே இருந்து தாக்குதல் வருகிறது. என்ன தாக்குதல் என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 02.09.2017-04.10.2018



சமய சந்தர்ப்பத்திற்கு ஏற்ற விதத்தில் பக்குவமாக நடந்து கொள்ளும் மீன இராசி அன்பர்களே!

உங்கள் இராசிக்கு அதிபதியாகவும், 10ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர் குரு பகவான். அவர் இதுவரை உங்கள் இராசிக்கு 7ஆம் இடத்தில் சஞ்சரித்து சப்தம பார்வையாக ஏழாமிடத்தை பார்த்தார். இப்பொழுது 8ஆம் இடத்தில் அடியெடுத்து வைக்கிறார். அதன் பார்வை பலம் உங்களுக்குப் பக்க பலமாக அமைகிறது.

முன்னதாக இராகு-கேதுக்களின் பெயர்ச்சி நடைபெற்றது. பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இராகுவும், இலாப ஸ்தானத்தில்

## எட்டாம் இடத்தில் குருபகவான்! எதிலும் கவனம் இனி தேவை!

சஞ்சரிக்கும் கேதுவும் உங்களுக்கு மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெற வழிவகுத்துக் கொடுப்பார். அதே நேரத்தில் இப்பொழுது குரு அஷ்டமத்தில் அல்லவா அடியெடுத்து வைத்திருக்கிறார்?. எனவே, சுப நிகழ்வுகளுக்கு செல்ல வேண்டிய தொகை, வீண் விரயங்களாகவும் மாறலாம்.

இதுபோன்ற காலங்களில் நீங்கள் எந்தச் செயலைச் செய்தாலும், அதை ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்வது தான் நல்லது. அதுமட்டுமல்ல குடும்பத்திலுள்ள பெரியவர்களையும், அனுபவமிக்கவர்களையும் கலந்து ஆலோசித்து செய்தால்தான் சிக்கல்களும் சிரமங்களும் ஏற்படாமலிருக்கும்.

இந்த நேரத்தில் குருவின் பார்வையை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் உங்கள் இராசிக்கு மற்ற இடங்களில் உள்ள கிரகங்களின் அமைப்புகளின் படியும், நடக்கும் தசாபுத்தி சுய ஜாதகப்படி நன்மை தரும் விதத்தில் இருக்கிறதா? என்பதை தெரிந்து கொண்டே குருப்பெயர்ச்சிப் பலன்களை நாம் கணிக்க முடியும். சுய ஜாதகத்தின் ஒத்துழைப்பும் நமக்குத் தேவை. பொதுவாக எட்டில் அடியெடுத்து வைத்த குரு பகவான் வெற்றிகளை வழங்க வியாழன்தோறும் விரதமிருந்து குரு வழிபாட்டை மேற்கொள்வதோடு பாக்கிய ஸ்தானம் பார்த்து அதற்குரிய கிரகத்திற்கேற்ற ஸ்தலங்களைத் தேர்ந்தெடுத்து யோக பலம் பெற்ற நாளில் வழிபாடு செய்தால் வாழ்வில் வசந்தம் உருவாகும். வாய்ப்புகள் வாசல் தேடி வரும்.

குதூகலம் தரும் குருப்பெயர்ச்சி

எட்டில் குரு அடியெடுத்து வைப்பதற்கு முன்பே, பஞ்சம ஸ்தானத்திற்கு இராகு வந்துவிட்டார். இன்னும் மூன்று மாதம் கழித்து 19.12.2017இல் சனி பகவானும் பத்தாமிடத்திற்கு வரப்போகிறார். கர்ம ஸ்தானமாக 10ஆம் இடம் கருதப்படுவதால் பெற்றோர்களின் ஆரோக்கியத்தில் திடீர் மருத்துவச் செலவுகளும், மனக்கலக்கங்களும் அதிகரிக்கும்.

அதே நேரத்தில் குருவும் அஷ்டமத்தில் சஞ்சரிப்பதால், இந்த ஓராண்டு காலத்தில் நீங்கள் ஒவ்வொரு நாளும் யோசித்துச் செயற்படுவது அவசியம். எதிலும், அலட்சியமும், அவசரமும் காட்டக் கூடாது. நிதானத்தோடு செயற்பட்டால் நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். நிம்மதியும் கிடைக்கும். பல வாய்ப்புகள் வந்து, கை நழுவிச் செல்லும் நிலை ஏற்படும். யாரையும் பகைத்துக் கொள்ளக் கூடாது.

பணியிடத்தில் பொறுப்புணர்வோடு நடந்து கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகும். குடும்பச் சுமையும் அதிகரிக்கும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். உதட்டில் ஒன்றும், உள்ளத்தில் ஒன்றும் வைத்துப் பேசுபவரின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். எதிர்பார்ப்புகள் நிறைவேறுவதில் எண்ணற்ற தடைகள் ஏற்படும். வருமானம் ஒருபுறம் வந்தாலும் விரயங்கள் கூடும். வீண் விரயங்கள் அதிகரிக்காமல் இருக்க சுப விரயங்களை மேற்கொள்வது நல்லது.

குடும்பத்திற்குத் தேவையான ஆடம்பரப் பொருட்களை வாங்கலாம். பெண் பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகளை முன்னிட்டு சீர்வரிசைப் பொருட்களை வாங்கலாம். தர்ம காரியங்களில் மனதைச் செலுத்தலாம். முன்னோர்கள் செய்த ஆன்மீகப் பணியைத் தொடர வழிவகுத்துக் கொடுக்கலாம். கட்டிய வீடு பழுதாகிப் போகிறதே என்று கவலைப்பட்டவர்கள் அதைப் பராமரிக்கும் பணியில் ஆர்வம் காட்டலாம். பூர்வீகச் சொத்துகளை விற்றுவிட்டு புதிய சொத்துகளை வாங்கி அதில் ஏதேனும் கடைகளைக் கட்டி வாடகைக்குவிடும் பணியில் ஈடுபடலாம்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு திடீர் ஊர் மாற்றம், இடமாற்றம் ஏற்பட்டு உற்சாகம் இழக்க நேரிடும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைப்பது அரிது. வேலைகளை நீங்கள் திருப்திகரமாக செய்தாலும் வீண் பழிகள் உங்களுக்கு வந்துசேரும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடும்போது யோசித்து கையெழுத்து போடுவது நல்லது. அயல்நாட்டு முயற்சியில் ஆர்வம் காட்டுபவர்கள் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். எனவே, எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது.

குருவின் பார்வை பலன்

குரு தனது சிறப்புப் பார்வைகளால் உங்கள் இராசிக்கு 2ஆம் இடம், 4ஆம் இடம், 12ஆம் இடம் ஆகிய இடங்களைப் பார்க்கப் போகிறார். அவரின் புனித பார்வையால் இந்த 3 ஸ்தானத்திலும் கிடைக்க வேண்டிய நற்பலன்கள் கிடைக்கும். குரு பார்க்க கோடி நன்மை என்பதால் பார்க்கும் குருவை பலப்படுத்த வியாழன்தோறும் குருவை வழிபட்டு வாருங்கள். அதற்கு முல்லைப்பூ மாலை அணிவித்தால், எல்லை இல்லாத நற்பலன்கள் கிடைக்கும். மஞ்சள் வண்ண வஸ்திரம் அணிவித்தால் நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறையவே நடைபெறும்.

இரண்டினை குருதான் பார்த்தால்
இலாபங்கள் வந்து சேரும்!
நான்கினை குருதான் பார்த்தால்
நலங்களும் சுகமும் வாய்க்கும்!
பன்னிரெண்டை குருதான் பார்த்தால்
பயணத்தால் பலன் கிடைக்கும்!
கனிவுடன் குருவைத் தொழுது
கடமையைத் தொடங்குவீரே!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது. அந்த அடிப்படையில் பார்க்கும் போது 2ஆம் இடத்தை குரு பார்ப்பதால் வரவு எதிர்பார்த்தபடியே வந்து சேரும். வாங்கிய கடனைக் கொடுத்து மகிழ்வீர்கள். உறவினர்களுக்கு உதவியாகக் கொடுத்த பணம் இப்போது வந்து சேரும். ஆடை, ஆபரணம் வாங்குவதில் ஆர்வம் கூடும். குடும்பத்தில் இருந்த சச்சரவுகள் மாறி சமாதானம் பிறக்கும். வியாபாரத்தில் புதிய கூட்டாளிகள் வந்து இணைவர். வேலை செய்யும் பணியாளர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும்.

குருவின் பார்வை 4ஆம் இடத்தில் பதிவதால் வீடு வாங்கும் யோகம் உண்டு. அங்ஙனம் வாங்கும்போது யோக திசை பார்த்து வாங்குவது நல்லது. பெரியோர்களின் ஆசி கிடைக்கும். கல்யாண வாய்ப்புகள் கைகூடும். தொழில் மாற்றச் சிந்தனை மேலோங்கும். அரசியல் பொறுப்புகளில் உள்ளோர்களுக்கு அதிக பொறுப்புகளும், அதிகாரப் பதவிகளும் கிடைக்கும். உங்கள் திறமைகளைக் கண்டு மற்றவர்கள் ஆச்சரியப்படுவர். பிறருக்குப் பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை மீண்டும் வந்து சேரும்.

தொழில் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு பழைய பங்குதாரர்களை விலக்கிக் கொண்டு புதிய பங்குதாரர்களை இணைத்துக் கொள்வீர்கள். பங்குச் சந்தைகளில் முதலீடு செய்தவர்கள் நல்ல பலன்களைக் காண்பர். அயல்நாட்டு வர்த்தகம் தடைப்படலாம். அதற்காக கவலைப்பட வேண்டாம். புதிய பாதை புலப்படும். ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவதன் மூலம் ஆரோக்கியத்தை, சீராக்கிக் கொள்ளலாம்.




குரு 12ஆம் இடத்தைப் பார்ப்பதால் பயணங்கள் அதிகரிக்கும். வெளிநாட்டில் இருப்பவர்கள் தாய்நாடு திரும்பவும், தாய்நாட்டில் இருப்பவர்கள் வெளிநாடு செல்லவும் வாய்ப்பு கைகூடி வரும். வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு வேலை கிடைக்கும். வீடு மாற்றங்களும், நாடு மாற்றங்களும் விரும்பத்தக்கதாக அமையும். திருமணம், பூப்புனித விழா போன்ற சுபகாரியங்கள் இனிதே நடைபெறும்.

குருவின் அதிசாரம்

14.2.2018 முதல் 11.4.2018 வரை குரு அதிசாரமாக விருச்சிக இராசிக்குச் செல்கிறார். இந்த கால கட்டத்தில் குரு பகவான் உங்கள் இராசியைப் பார்ப்பதால் தோஷங்கள் அகலும். கல்யாணக் கனவுகள் நனவாகும். யோகங்கள் சேரும். நினைத்ததை நினைத்த நேரத்தில் நிறைவேற்றுவீர்கள். பண வரவு திருப்திகரமாக இருக்கும். குடும்பத் தேவை பூர்த்தியாகும்.

அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!

7.3.2018 முதல் 4.7.2018 வரை குரு வக்ரமாக இயங்குகிறார். நன்மைகள் அதிகம் நடைபெறும். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் குரு என்பதால் அது வக்ரம் அமையும்போது மிகுதியான யோகத்தை வழங்கும். அன்றாட வாழ்க்கை நன்றாக அமையும். வெளிநாட்டு வாய்ப்பு கைகூடும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், சுபீட்சமும் நிலவும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர். நண்பர்கள் நல்ல தகவல் கொண்டு வந்து சேர்ப்பர. கடை திறப்பு விழா, கட்டடத் திறப்பு விழா போன்றவை நடைபெறும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

மீன இராசியில் பிறந்த பெண்களுக்கு வழிபாட்டின்மூலமே வளர்ச்சி கூடும். வாய்ப்புகள் நழுவிச் செல்லும். அருகில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டியது அவசியமாகும். விரயங்கள் கூடுதலாக இருக்கும். வீடு மாற்றம், இடமாற்றம், உத்தியோக மாற்றம், ஊர் மாற்றம், வாகன மாற்றம் என்று ஏதேனும் ஒரு மாற்றம் வந்து கொண்டே இருக்கும். விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலமே ஒற்றுமை பலப்படும். தாய்வழி ஆதரவு கிடைக்கும். சகோதர ஒத்துழைப்பு குறையும். உத்தியோகத்தில் நீண்ட தூர மாறுதல் ஏற்பட்டு கவலை அளிக்கும். குழந்தைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. குருவின் அதிசார காலத்தில் மட்டும் அனுகூலங்கள் அதிகரிக்கும். சொத்துச் சேர்க்கை ஆதாய வரவுகள், பகை நட்பாகும் சூழ்நிலை உருவாகும். வியாழன்தோறும் குரு வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். சனிக்கிழமை விநாயகப் பெருமான் மற்றும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

செல்வம் தரும் சிறப்பு வழிபாடு!

வியாழக்கிழமை தோறும் தென்முகக் கடவுளை இன்முகத்தோடு வழிபாடு செய்யுங்கள். சங்கடஹர சதுர்த்தி விரதமிருந்து விநாயகப் பெருமானை வழிபடுவதோடு புதுக்கோட்டை மாவட்டம் வேந்தன்பட்டி நெய் நந்தீஸ்வரர் வழிபாட்டை சிறப்பு வழிபாடாக மேற்கொள்ளுங்கள். செல்வ நிலை உயரும். (முற்றும்)

# புதிய தேர்தல் முறையில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

இலங்கையில் உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் குறித்து நீண்டகால தாமதம் இழுபறியின் பின்னர் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் முறைகளும் தேர்தல் சட்டங்களுக்குமான திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு சபாநாயகரின் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது. இச்சட்டத்தின் மூலம் இலங்கையில் இன்றுள்ள ஒவ்வொரு உள்ளூராட்சி சபைக்கும் 60 வீதமான அங்கத்தவர்கள் வட்டார அடிப்படையிலும் (First Past Post) கூடிய வாக்குப் பெற்றவர் என்ற நிலையிலும் மிகுதி 40 வீதத்தினர் விகிதாசார ரீதியிலும் தெரிவு செய்யப்படுவர். வட்டார ரீதியில் தெரிவு செய்யப்படுபவர்களின் தெரிவு உறுதிப்படுத்தப்பட்டாலும் சபையில் குறித்த கட்சியின் பிரதிநிதித்துவ எண்ணிக்கை அக்கட்சி இச்சபைத் தேர்தலில் பெற்ற மொத்த வாக்குகளின் விகிதாசாரத்தை பிரதிபலிக்குமாக இருக்கும். இம்முறை ஜேர்மனியின் தேர்தல் முறையை ஒத்திருப்பினும் சிலநிலைகளில் வேறுபட்டுள்ளது. ஜேர்மனியில் வட்டாரம்- கூடிய வாக்கு/ விகிதாசாரம் 50/50 என்ற நிலைக்கு பதிலாக இங்கு 60/ 40 என்றும் அங்கு அபேட்சகருக்கும் கட்சிக்கும் என்ற தனித் தனி வாக்குச் சீட்டுக்குப் பதிலாக இங்கு இரண்டையும் உள்வாங்கிய ஒரு வாக்குச்சீட்டே பயன்படுத்தப்படும்.

வட்டார மீள் ஆய்வுக்கு முன்னர் இலங்கையில் இருக்கும் 336 உள்ளூராட்சி சபைகள் 4833 வட்டாரங்களாக பிரிக்கப்பட்டு 5092 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படவிருந்தனர். மொத்த 4833 வட்டாரங்களில் 4583 தனி அங்கத்தவர் தெரிவு செய்யும் வட்டாரங்களாகவும் 241 இரண்டு அங்கத்தவர்களைத் தெரிவு செய்யும் வட்டாரங்களாகவும் 9 வட்டாரங்களில் முறையே மூன்று அங்கத்தவர்களைத் தெரிவு செய்யும் வட்டாரங்களாக இருந்தன. வட்டார மீளாய்வுக்குப் பின்னர் இரட்டை அங்கத்தவர்களின் வட்டார 241 இல் இருந்து 149 ஆகக் குறைந்தும் 3 அங்கத்தவர்கள் வட்டார எண்ணிக்கை 9 இலிருந்து 4 ஆகக் குறைந்துள்ளது. ஒற்றை அங்கத்தவர் வட்டார எண்ணிக்கை 4680 ஆக அதிகரித்துள்ளது. இலங்கையில் 60: 40 என்ற அடிப்படையில் 5092 அங்கத்தவர்கள் வட்டார அடிப்படையிலும் விகிதாசார அடிப்படையில் 3074 பேருமாக மொத்தமாக 8466 அங்கத்தவர்கள் கொண்ட உள்ளூராட்சி கூட்டமைப்பும் அமையும்.

வட்டாரங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட அங்கத்தவர்களை தெரிவுசெய்யுமிடத்து ஒவ்வொரு கட்சியும் வட்டாரத்தில் தெரிவு செய்யும் அங்கத்தவர் எண்ணிக்கைக்கு ஏற்ப அபேட்சகர்களை நிறுத்தவேண்டும். இரட்டை அங்கத்துவம் கொண்ட வட்டாரத்துக்கு இருவரையும் மூன்று அங்கத்தவர் கொண்ட வட்டாரத்துக்கு மூவரையும் நியமிக்க வேண்டும். குறித்த வட்டாரத்தில் கூடிய வாக்குகளைப் பெறும் கட்சி அல்லது சுயேட்சைக்குழு அந்த வட்டாரத்துக்குரிய இரண்டு அல்லது மூன்று அங்கத்தவர்களைப் பெறும். முன்னர் இம்முறை உள்ளூராட்சித் தேர்தல் கட்டமைப்பிலோ அல்லது பாராளுமன்றத் தேர்தல் முறையிலோ இருக்கவில்லை. பாராளுமன்றத் தேர்தலில் பல அங்கத்தவர் தொகுதியில் முதலில் வந்த கட்சிக்கு முதலிடமும் இரண்டாவதாக வந்த கட்சிக்கு அடுத்த இடமும் கொடுக்கப்பட்டது.

வட்டார அடிப்படையில் அபேட்சகர்கள் நிறுத்தப்படும் பொழுது கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்களின் அபேட்சகர் பட்டியலில் பெண்கள் எண்ணிக்கை 10 வீதத்திற்கு குறையாது இருக்க வேண்டியது இன்று முன் நிபந்தனையாகும். மேலும் இரண்டாவது விகிதாசார அபேட்சகர் பட்டியலில் 50 வீத பெண் அபேட்சகர்களாக இருக்க வேண்டும். இந் நிபந்தனைகள் நிறைவேற்றாது விட்டால் அபேசட்சகர் பட்டியல் நிராகரிக்கப்படும் நிலைமை உருவாகும். மேலும் விகிதாசார அபேட்சகர்கள் பட்டியலில் இத் தொகுதியில் தெரிவு செய்ய வேண்டிய அங்கத்தவர்கள் என் ணிக்கைக்கு மேலதிக மூவரின் பெயர் இடம்பெற்றிருக்க வேண்டும். உள்ளூராட்சித் தேர்தலில் பங்குபற்றுகிறவர்கள் குறித்த உள்ளூராட்சி சபைக்குள் பதிவு செய்யப்பட்ட வாக்காளராக இருத்தல் வேண்டும்.

தேர்தல் முடிந்த பின்னர் ஒவ்வொரு வட்டாரத்திற்குமான வாக்கு கணிப்பு குறித்த வட்டாரத்துக்குள் அமையும் வாக்களிப்பு நிலையத்தில் வைத்து அந்த வட்டாரத்திற்குரிய பெறுபேறுகள் கணிக்கப்பட்டு கூடிய வாக்குப் பெற்றவர் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படுவர்.

குறித்த உள்ளூராட்சி சபையின் எல்லா வட்டாரங்களில் கட்சிகள் /சுயேட்சைக்குழுக்கள் பெற்ற வாக்குகளைக் கூட்டி குறித்த உள்ளூராட்சிசபையில் ஒவ்வொரு கட்சி பெற்ற தகுதியான மொத்த வாக்குகளை அந்த சபைக்குரிய மொத்த ஆசனங்களின் எண்ணிக்கை யால் பிரிப்பர். இதன் மூலம் குறித்த சபையில் ஒரு அங்கத்தவருக்குரிய சராசரி வாக்கு அளவு தெரியும். இதன் பின்னர் ஒவ்வொரு கட்சியும் பெற்ற வாக்குகளை சராசரி வாக்கால் பிரித்தால் ஒவ்வொரு கட்சிக்கும்/ சுயேட்சைக்குழுவுக்கும் எவ்வளவு அங்கத்தவர் களுக்கு உரித்தானவர்கள் எனத் தெரியவரும். இதன்பின்னர் வட்டார அடிப்படையில் கட்சிகள், சுயேட்சைக்குழுக்கள் பெற்ற அங்கத்துவத்தை கழித்து மிகுதி ஆசனங்கள் கட்சிகளுக்கும் சுயேட்சைக்குழுக்களுக்கும் ஒதுக்கப்படும். இச்செய்முறை மூலம் தேர்தலில் ஒவ்வொரு கட்சியும்/ சுயேட்சைக்குழுவும் பெற்ற வாக்குகளுக்கு அவர்களுக்குரிய பிரதிநிதித்துவம் உறுதி செய்யப்படும். சில சந்தர்ப்பங்களில் தொங்கு நிலையேற்படின் இதற்கான கணிதசூத்திரம் மூலம் தீர்வு காணப்படும். இதன்போது சபையின் அங்கத்தவர் எண்ணிக்கை ஒன்று இரண்டால் குறித்த காலத்தில் அதிகமாக இருக்கும்நிலைஏற்படலாம். இதுவே ஜேர்மன் முறை. இங்கு எப்படியென்று பின்னர் தெரிய வரும்.

உள்ளூராட்சி- மாநகர சபை, நகரசபை, பிரதேச சபை ஆகிய எல்லா மட்ட சபைகளிலும் மொத்த அங்கத்தவர்களின் எண்ணிக்கையில் 25 வீதம் பெண்களாக இருக்கவேண்டும். வட்டார அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பெண்களுடன் மிகுதி விகிதாசார அடிப்படையில் மிகுதி நியமிக்கப்பட வேண்டும். வட்டார அடிப்படையில் பெண்கள் தெரிவாகும் நிலை குறைவாக இருக்கும் என்பதால் விகிதாசார முறையில் கூடிய இடம் அளிக்கப்பட்டுள்ளது.

சபைக்கு பெண் பிரதிநிதித்துவம் கட்சியின் சிபாரிசு மூலம் நியமிக்கப்படுவர். மூன்று வட்டார பிரதிநிதிகளையோ அல்லது மொத்த வாக்கில் 20 வீதம் குறைந்த வாக்குகளைப் பெற்ற கட்சிகளோ, சுயேட்சைக்குழுக்களோ பெண் பிரதிநிதிகளை நியமனம் செய்ய சட்டம் கட்டாயப்படுத்தாது என அறிய வருகிறது. சிறுகட்சிகள் சுயமாக விரும்பி பெண்களையும் தங்களுக்குக் கிடைத்த இடத்தில் கொடுக்கலாம். கூடுதலான வாக்குகளைப் பெற்ற கட்சிகள் தாங்கள் பெற்ற பிரதிநிதித்துவம் ஏற்ப பெண் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யவேண்டும். சட்டப்படியாக ஒரு உள்ளூராட்சி சபையின் மொத்த அங்கத்தவர்களில் 25 சதவீதம் பெண்களாக இருக்க வேண்டும். இடைத் தேர்தல் இல்லாதிருப்பதாலும் வெற்றிடங்கள் ஏற்படும் இடத்தை நிரப்புவதற்கு ஏற்றதாக விகிதாசாரப் பட்டியலுக்கு உரித்தான ஆசனங்களுக்கு கூடுதலாக மூவர் பெயர்ப் பட்டியலில் இடம்பெற்றிருக்க வேண்டும் என்பதும் ஒரு நிபந்தனையாகும்.

இன்றைய உள்ளூராட்சித் தேர்தல் முறைக்கு முன்னர் மூன்று வகையான முறையில் உள்ளூராட்சி சபைகளுக்கு மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இதில் வட்டார அடிப்படையில் 70 வீதமாகவும் விகிதாசார முறையில் 70 வீதத்திற்குள் 30 வீதமாகவும் தெரிவு செய்யப்படும் முறைகள் பிரேரிக்கப்பட்டு இதற்கான வட்டாரப் பிரிவும் முழுமை பெற்றிருந்தது. ஆட்சி மாற்றத் துடன் இரண்டு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. வட்டார நிர்ணயம் அரசியல் நோக்கம் கொண்டு ஒரு கட்சிக்கு சார்பாகச் செய்யப்பட்டது என்றும் மற்றது விகிதாசாரப் பிரதிநிதித்துவம் 100 வீதத்திற்கு 30 வீதமாக இல்லாமல் 70 வீதத்திற்குள் 30 வீதமாகக் கணிக்கப்பட்டது. சிறுபான்மையினரையும் சிறு கட்சிகளையும் பாதித்தது. இந்த நிலையைப் போக்க அசோக பீரிஸ் தலைமையில் ஐவர் கொண்ட குழு நியமி க்கப்பட்டு உள்ளூராட்சி சபை வட்டார நிர்ணயத்தில் உள்ள குறைபாடுகளை நீக்கப் பணிக் கப்பட்டனர்.

இக் குழுவில் அசோக பீரிஸ், பேராசிரியர். பொ .பாலசுந்தரம் பிள்ளை, .ஏ.எஸ்.எம். மிஸ்பா, உபுள் குமாரப் பெருமா, .சி.எக். எஸ். சாலியா விமலசூரிய மத்தியூ அங்கத்தவர்களாகச் செயற்பட்டனர். இக் குழு வட்டார நிர்ணயத்தை மீள் பரிசீலனை செய்தது. வட்டார எல்லைகளில் மாற்றம் செய்தல், வட்டாரங்களை பெயர் மாற்றம், பல் வட்டாரங்களை தனிவட்டாரம் ஆக்குதல், தனி வட்டாரங்களை இணைத்து பல் வட்டாரங்களாக மாற்றங்கள் செய்தல், வட்டாரங்களுக்கு இலக்கம் கொடுத்தல் போன்ற கடமைகள் முன்னெடுக்கப்ப ட்டன. இலக்கம் கொடுக்கும் முறை தற்பொழுது கணனி கட்டமைப்பினால் செய்யப்பட்ட தால் இவ் வேலையை சபை முன் னெடுக்கவில்லை. இச் சபை தங்களுக்கு கொடுத்த கடமையை மிகவும் புலமை சார்பு ரீதியில் மக்கள் தொகை, மக்கள் அடர்த்தி, இனம், சமயம், சமூகம், பொருளாதாரம், உள்ளூர் புவி யியல், மற்றும் போக்குவரத்து நிர்வாக வசதிகள் போன்ற பல காரணிகள் கவனத்தில் எடுக்கப் பட்டு வட்டார எல்லைகள் மீள் நிர்ணயம் செய்யப்பட்டன. இதற்கு தேவையான தரவுகள் மற்றும் மக்களதும் அரசியல் கட்சிகள், சிவில் சமூக நிலைப்பாடுகள் கவனத்தில் எடுக்கப்பட்டு மீள் நிர்ணய வேலைகள் நிறைவு பெற்றது.

இந் நிலையில் பிரதமர் பெண்களுக்கு உள்ளூராட்சி சபைகளுக்கு மொத்த எண்ணிக்கையில் மேலதிகமாக 25% அங்கத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு ஆதரவாக பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றப்பட்டது. மேலதிகமாக 25% அங்கத்துவம் கொடுக்கப்படுவதுடன் இது கட்சிகள் பெற்ற வாக்குகள் அடிப்படையில் இருக்க வேண்டுமென்று நிலை நிறுத்தப்பட்டது.

இந்தச் சட்டம் இயற்றப்பட்டதும் நாட்டில் உள்ளூராட்சி மன்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை 9156 க்கு மேல் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு பல நிலைகளில் ஏற்புடையதாக இருக்கவில்லை. செலவு, நிதிப் பற்றாக்குறை, நிர்வாக சிக்கல் போன்ற காரணிகளைக் கருத்திற் கொண்டு வட்டார விகிதாசார விகிதத்தை 60:40 என்ற நிலை ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் மொத்த அங்கத்துவத்தில் 25% க்குக் குறையாது பெண்கள் இருக்க வேண்டுமென்ற முடிவு எடுக்கப்பட்டது. ஜேர்மன் முறையான 50:50 என்ற முறையை ஒரு பகுதியினர் விரும்பிய பொழுதும் 60:40 என்ற விகிதங்களே இலங்கைக்குப் பொருத்தம் என கருதப்பட்டது. 50:50 என்று எடுத்து இருந்தால் மொத்த அங்கத்தவர்கள் எண்ணிக்கை 10184 ஆக அதிகரித்து இருக்கும் அல்லது மீளவும் எல்லை நிர்ணயம் செய்து வட்டாரங்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டிய நிலை ஏற்பட்டு இருக்கும். இதைத் தவிர்ப்பதற்கு 70%மாக இருந்த வட்டாரங்களின் எண்ணிக்கையை, வட்டார எண்ணிக்கை குறைக்காமல் அதை 60%மாக குறைத்தும் விகிதாசாரத்தை 40% மாகவும் மாற்றினர். ஜேர்மனியில் இருக்கும் இரு வாக்கு முறைக ளான வட்டார அங்கத்தவர் தெரிவு வாக்கும் விரும்பிய கட்சிக்கு வாக்களிக்கும் வாக்குக்குப் பதிலாக இலங்கையில் ஒரு வாக்கிலேயே கட்சிக்குப் புள்ளடியிடும் முறை மூலம் இரண்டு இலக்கையும் அடை யும் முறை புகுத்தப்பட்டுள்ளது. அபேட்சகரையும் கட்சியையும் இணைத்தே வாக்களிக்க வேண்டிய நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் வட்டார ரீதியில் கூடிய வாக்கு பெற்றவர்கள் தெரிய செய்யப்படுவர். மேலும் சபையின் எல்லா வட்டாரங்க ளிலும் கட்சிகள் பெற்ற வாக் குகளின் எண்ணிக்கை விகிதத் திற்கு ஏற்ப கட்சிகளுக்கு அங்கத் தவர்கள் கொடுக்கப்படும். உள் ளூராட்சிச் சபையில் ஒரு கட்சிக்கு வாக்கு அடிப்படையில் கிடைத்த அங்கத்தவர்கள் எண் ணிக்கையில் இக் கட்சி வட்டார அடிப்படை பெற்ற அங்கத்தவர் களை கருத்து மிகுதி எண்ணி க்கைக்கு கட்சி உரித்தாகும். விகிதாசார முறையில் நியமிக் கப்படுவர்கள் கட்சியினால் சிபார்சு செய்யப்பட்டவர்களேயா வர்.

முதலில் கட்சிகள் தங்கள் முன்னிலை அடிப்படையில் விகிதாசாரப் பட்டியலில் அங்கத்தவர்களின் பெயர் கொடுப்பதாக இருந்ததெனினும் பின்னர் கட்சிகளின் இருப்பை உறுதி செய்ய கட்சியின் செயலாளருக்கே விகிதாசார அடிப்படை யில் யார் யாரை நியமிக்க சிபாரிசு செய்ய வேண்டும் என்ற அதிகாரம் சென்றுள்ளது. மேலும் உள்ளூராட்சி தேர்தல் கட்டமைப்பில் பாராளுமன்றத் தேர்தலில் உள்ளது போன்ற வெட்டுப்புள்ளி உள் வாங்கப்படவில்லை. வாக்கா ளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவும் தேர்தலில் மக்களின் பங்குபற்றுதலுக்கேற்பவும் தகுதியான வாக்குகளின் எண்ணிக்கைக் கேற்பவும் அங்கத்த வர்களின் எண்ணிக்கைக்கேற் பவும் ஒரு அங்கத்தவரின் பெறு மான வாக்கு அமையும். கட்சி கள் எத்தனை வீதத்திற்கு மேல் பெற்றிருத்தல்வேண்டும் என்ற நிலைப்பாடு இங்கில்லை. (தொடரும்)

(தொடரும்)

நீங்கள் நன்மை செய்யாவிட்டாலும் பரவாயில்லை. தீமை செய்வதை நிறுத்துங்கள்.
– டால்ஸ்டாய்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## புலிகளை வஞ்சிப்பதாக கருதி தமிழ் மக்களை வஞ்சியாதீர்

விடுதலைப் புலிகள் மீது காழ்ப்புணர்வு கொண்டவர்கள் இல்லாமல் இல்லை. விடுதலைப் புலிகளால் பாதிக்கப்பட்டவர்கள் என்ற ஒரு சாராரும் இருப்பர் என்பதை மறுக்க முடியாது.

இருந்தும் விடுதலைப் புலிகள் மீதான தமிழ் மக்களின் ஆதரவு என்பது பேரினவாத ஆட்சியாளர்கள் தமிழினத்துக்குச் செய்த கொடுமை காரணமாக ஏற்பட்டதுதான்.

இலங்கையின் ஆட்சியாளர்களும் பௌத்த பீடங்களும் தமிழ் மக்களை தமக்குச் சமமாகக் கருதியிருந்தால், விடுதலைப் புலிகள் உள்ளிட்ட எந்த ஆயுத அமைப்புக்களும் தமிழர் தாயகத்தில் எழுகை பெற்றிருக்காது. அதற்கு அவசியமும் ஏற்பட்டிருக்காது.

இதுஒருபுறம் இருக்க, விடுதலைப் புலிகள் முன்னெடுத்த மண் மீட்புப் போராட்டம் ஈற்றில் தோல்வியில் முடிந்து போனாலும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மீது தமிழ் மக்கள் கொண்ட பற்றும் பாசமும் குறைந்ததாக இல்லை.

இதற்குக் காரணம் பாலகன் பாலச்சந்திரனைக்கூட இறுதி யுத்தத்தில் இழந்த ஒரு தலைவன் என்பதாலேயே பிரபாகரன் மீதான மதிப்பு இன்றுவரை தமிழ் மக்களிடம் நிலைத்துள்ளது.

இருந்தும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மீது, அவருடன் கூட இருந்த சிலர் இப்போது விமர்சனம் செய்கின்றனர். இந்த விமர்சனங்கள் குறித்து நாம் எதுவும் கூறத் தேவையில்லை.

ஆனால் விடுதலைப் புலிகளின் போராட்டத்தை, போராளிகளை, தமிழ் மக்களின் வரலாறுகளை கொச்சைப்படுத்தும் வகையில் யார் ஆக்கங்களை வெளியிட்டாலும் அது மன்னிக்க முடியாத ஒரு செயல் என்றே கூற வேண்டும்.

தமிழ் மக்கள் இன்றிருக்கக்கூடிய நிலைமையில் தமிழ் மக்களுக்கு எதிராகவோ அன்றி விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தியோ எழுதுவதென்பது அநாவசியமானது.

சிலவேளைகளில் விடுதலைப் புலிகளால் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கலாம். இத்தகையவர்கள் விடுதலைப் புலிகளை வஞ்சிக்க வேண்டும் என்ற நோக்கில் கூட எழுதலாம்.

ஆனால் விடுதலைப் புலிகள் இல்லாத நேரத்தில் அவர்கள் பற்றி எழுதுவது தமிழ் மக்களைப் பாதிக்குமேயன்றி அதனால் வேறு எதுவும் ஏற்படமாட்டாது.

எனவே ஆக்கப்படைப்பாளிகள் தமிழினத்துக்கு நன்மை செய்ய வேண்டும் என நினைத்தால், தமிழினத்தின் வரலாற்றை எழுதுங்கள், வன்னிப் போரின் கொடூரத்தைப் பதிவு செய்யுங்கள். எம் இனம் அழிக்கப்பட்ட போது சர்வதேச சமூகம் பார்த்திருந்ததை கண்டித்துக் கூறுங்கள்.

இதைவிடுத்து எங்கள் இனத்தை தாழ்த்தி, எங்கள் போராட்டத்தை வஞ்சித்து எழுதுவது எம் தலையில் நாமே மண்ணைக் கொட்டுவதாக அமையும்.

இதைவிட எங்கள் சமயம், எங்கள் பண்பாடு இவற்றை விமர்சிக்கத் தலைப்படுவதும் அவ்வளவு நன்மை தரமாட்டாது என்பதால் ஆக்கப்படைப்பாளிகள் தங்கள் படைப்புக்களை தமிழினம் வாழ, தமிழினம் எழுகை பெற அவியல் செய்ய வேண்டும்.

# இந்த ஆட்சியை மாற்றியமைக்க மக்களுடன் இணைந்து செயற்படுவேன்

## பதவி பறிக்கப்பட்ட பிரதியமைச்சர் அருந்திக தெரிவிப்பு

(கொழும்பு)

மக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலேயே பிரதியமைச்சராக இந்த அரசில்தான் கடமையாற்றியதாகவும் நடைமுறையிலுள்ள ஆட்சியை மாற்றியமைக்க மக்களுடன் இணைந்து செயற்படவுள்ளதாகவும் சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ விவகாரங்களுக்கான முன்னாள் பிரதியமைச்சர் அருந்திக பெர்னாண்டோ எம்.பி. தெரிவித்துள்ளார்.

அருந்திக பெர்னாண்டோ, பிரதியமைச்சர் பதவியிலிருந்து உடன் அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நேற்று பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"என்னை, மக்களே தெரிவு செய்தனர். நான் அமைச்சுப் பதவியை வகிப்பதில் மக்களின் எதிர்ப்பு காணப்பட்டது.

இந்த அரசாங்கம் உரிய முறையில் செயற்படுவதில்லை என்ற குற்றச்சாட்டே அதற்குக் காரணமாகும். இப்போது பதவியில் இல்லை. நான் மக்களுடன் இணைந்து அரசாங்கத்தை மாற்றுவதற்குரிய வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவுளேன்.

இந்த ஆட்சியின் தவறான பயணத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்குமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஏனைய உறுப்பினர்களிடமும் நான் கேட்டுக்கொள்கிறேன்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

*2020ஆம் ஆண்டில்*

## புகையிலை முற்றாக தடை

2020ஆம் ஆண்டளவில் புகையிலை உற்பத்தியானது முற்றாக தடை செய்யப்படும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

மேலும், புகையிலை உற்பத்தியின் மீதான வரி 90 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக இலங்கையில் புகைப்பிடிப்போரின் எண்ணிக்கை 48 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (செ-11)

## துறைமுகங்களை குத்தகைக்குவிட அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள 10 மீன்பிடித் துறைமுகங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு குத்தகைக்கு விடுவதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக, மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

கட்சித் தலைமை காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது, அதன் பிரசாரச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் இதனைத் தெரிவித்தார்.

169 கோடி ரூபாய்க்கு இந்தத் துறைமுகங்கள் குத்தகைக்கு விடப்படுகின்றன.

இவ்வாறு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு குத்தகைக்கு விடப்படுமாக இருந்தால் மீனவர்கள் பாதிக்கப்படுவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கியதில் 3 வயதுச்சிறுமியும் யுவதியும் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வேகக் கட்டுப்பாட்டையிழந்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் 3 வயதுச் சிறுமி மற்றும் யுவதி படுகாயமடைந்த நிலையில் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்றுக்காலை 9 மணியளவில் கோப்பாய் கிருஷ்ணர் கோவில் சந்தியில் வேகக்கட்டுப்பாட்டையிழந்த மோட்டார் சைக்கிள் தடம்புரண்டதில் மோட்டார் சைக்கிளில் சென்ற கோண்டாவிலைச் சேர்ந்த கு.பிரணகா (வயது 3) என்ற சிறுமியும் பிரியா (வயது-18) என்ற யுவதியுமே படுகாயமடைந்தவர்களாவர்.

இச்சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-10-30)




### திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

அந்த அரவம் கேட்டு அரவங்கள் பதைத்தன. துஷ்ட மிருகங்கள் அனைத்தும் தாம் அடைந்திருந்த இருட்டுப் பொந்துகளில் இருந்து இடம்பெயர்ந்து தலைதெறிக்க ஓடின. காடெங்கும் விலங்குகளின் காலடி ஓசைகள் பறவைகளின் இறக்கை படபடப்புகள்.

அந்தக் காட்சியைக் கண்டு ஆனந்தம் அடைந்தான் ஸ்ரீநிவாசன். வேட்டையாடுவதற்கு ஏற்ற தருணம் இதுவே என வில்லை உயர்த்தினான்.

அப்போது ஒரு யானையின் ஆவேச பிளிறல் ஒலி கேட்டது. அந்தச் சத்தம் வந்த திசை நோக்கிச் சென்றான் அவன். (தொடரும்)

## திருமலையில் நில அதிர்வு

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தின் தோப்பூர், மூதூர், கந்தளாய் ஆகிய பகுதிகளில், நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 8.45 அளவில் சத்தத்துடன் சிறியளவில் நில அதிர்வு உணரப்பட்டுள்ளது. இந்த அதிர்வு 3 விநாடிகள் அளவில் உணரப்பட்டது.

இந்நில அதிர்வின் மூலம சில வீடுகளில் மேசைகளில் வைக்கப்பட்டிருந்த கண்ணாடிப் பொருட்கள் கீழே விழுந்து உடைந்துள்ளன. எனினும், பெரியளவில் சேதங்கள் ஏற்படவில்லை. (இ-7)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**நவகோள் வழிபாடு**

முழு பச்சைப் பாக்குகள் ஒன்பதை எடுத்து அதற்கு மஞ்சள் குங்குமம் வைத்து பஞ்சாங்கத்தில் உள்ளபடி கிரகங்களை வரிசைக் கிரமமாக நிறுத்தி தமிழ் நவக்கிரக மந்திரத்தை சொல்லி நவக்கிரக பூஜையை முடித்தல் வேண்டும். (தொடரும்)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### விவேகத்துடன் செயற்படு



✦ கடவுள் ஒருவரே உலகில் சத்தியப் பொருள். மற்ற அனைத்தும் பொருளற்ற பொய்ப் பொருளே. இதை உணர்ந்தவனே விவேகியாவான்.

✦ கடவுளின் திருநாமத்திற்கு சக்திஅதிகம். அதை ஜெபிப்பதற்குரிய தகுதி தூய பக்திக்கு மட்டுமே உண்டு.

✦ பக்தியுள்ளவனாக மாறி விடு. அதே சமயத்தில் மனதில் மூடத்தனத்திற்கு சிறிதும் இடம் அளிக்காதே.

✦ அன்புக்கும், அறிவுக்கும் சமபங்கு அளிக்கும் மனிதனே பாக்கியவான். அவனது மனம் சமநிலை இழப்பதில்லை.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்புவேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை கிளிநொச்சி பிரதேசத்தில நாவற்காடு (முள்ளியவளை), பூதன் வயல், முறிப்பு, தண்ணிமுறிப்பு, குமுழமுனை, குமுழமுனை பலநோக்கு கூட்டுறவுச் சங்க அரிசி ஆலை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் அட்டம்பஸ்கட கிராமம், தவசிக்குளம் கிராமம், வேளாங்குளம், மடுக்குளம், வேளாங்குளம் விமானப்படை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# பிரிவு I கால்பந்தாட்ட தொடர்

## ஓல்ட் மெசனோடியன்ஸ்சை வென்றது யாழ்.சென்மேரிஸ் வி.கழகம்



இந்த பருவகாலத்திற்கான டிவிஷன் 1 (பிரிவு 1) கால்பந்து சுற்றுத் தொடரின் யாழ்ப்பாணம், அரியாலை உதைப்ந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் இடம் பெற்றிருந்த ஓல்ட் மெசனோடியன்ஸ் கால்பந்துக் கழகத்திற்கு எதிரான போட்டியில் முதல் பாதி கோல்களுடன் யாழ்.சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

போட்டியின் ஆரம்ப நிமிடங்கள் முதலே சென். மேரிஸ் போட்டியில் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தனர். போட்டியின் 14ஆவது நிமிடத்தின் ஓல்ட் மெசனோடியன்ஸ்அணியின் அமல் மென்டிசின் முறையற்ற ஆட்டம் காரணமாக மஞ்சள் அட்டை மூலம் எச்சரிக்கப்பட்டார்.

போட்டியின் 19ஆவது நிமிடத்தில் மதிவதனன் தனித்து காவிச்சென்ற பந்தினை தடுப்பதற்கு மெசனோடியன்ஸ் அணியின் நிஷான் மதுசங்க முன்னேறி வருகையில், மதிவதனன் பந்தினை தலைக்கு மேலால் உதைந்து கோலாக்கினார்.

தொடர்ந்தும் ஆட்டத்தினைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த சென் மேரிஸ் அணியினருக்கு 36ஆவது நிமிடத்தில் அணித் தலைவரும், 23 வயதின் கீழ் தேசிய அணியின் முன்னாள் வீரருமான நிதர்சன் லாவகமான முறையில் அணிக்கான இரண்டாவது கோலினையும் பெற்றுக் கொடுத்தார்.

தொடர்ந்து இரு அணியினரும் முதல் பாதியில் எஞ்சியிருந்த நேரங்களில் கோலுக்காக மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் நிறைவுற, இரண்டு கோல்களால் சென்மேரிஸ் வீரர்கள் முன்னிலை பெற்றனர்.

முதல் பாதி: சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் 2-0 ஓல்ட் மெசனோடியன்ஸ்விளையாட்டுக் கழகம், இரண்டாம் பாதியில் ஆரம்பம் முதலே வேகமாக ஆடுவதற்கு ஆரம்பித்தனர் ஓல்ட் மெசனோடியன்ஸ். சற்று நேரத்தில் நிதர்சனால் அனுப்பப்பட்ட பந்தினை மதிவதனன்கோலாக்கத் தவறினார்.

மறுமுனையில் ஓல்ட் மெசனோடியன்ஸின் தரங்க பண்டார, தர்மபிரிய க்கிரேரோ ஆகியோர் தமது முதல் கோலினை பதிவு செய்வதற்காகப் போராடிக்கொண்டிருந்தனர். நீண்டகால உபாதையின் பின்னர் அணிக்கு திரும்பியிருக்கும் அருள்ராசா யூட் மற்றும் மதிவதனன் ஆகியோரது தொடர்ச்சியான முயற்சிகள் துஷ்மந்தக்குரேற, சவிந்த பெர்னாண்டோ ஆகியோரால் தடுக்கப்பட்டன.

தரங்க பண்டார தனக்கு கிடைத்த கோல் வாய்ப்பினை நேரடியாக கோல் காப்பாளரின் கைகளுக்குள் உதைந்து வீணாக்கினார். அருள்ராசா யூட் மறுமுனையில் காத்திருக்க பந்தினை கோல் காப்பாளரை நோக்கி உதைந்துவாய்ப்பினை வீணாக்கினார் மதிவதனன்.

தொடர்ந்தும் இறுதி முயற்சியாக, மதிவதனன் உள்ளனுப்பிய பந்தினை கோல் காப்பாளர் தடுக்க, கோலேதுமின்றி நிறைவுற்றது இரண்டாம் பாதி. இறுதியில் சென் மேரிஸ் விளையாட்டுக் கழகம் 2-0 ஓல்ட் மெசனோடியன்ஸ்விளையாட்டுக்கழகத்தை வெற்றி கொண்டது. (க)

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

தாவடி வேதவிநாயகர் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் மாபெரும் மென்பந்து சுற்றுப்போட்டி எதிர்வரும் 16.09.2017 திகதி ஆரம்பமாகி 24.09.2017 திகதி வரை நடைபெறவுள்ளது.

இதில் பங்குபெற விரும்புகின்ற விளை யாட்டுக்கழகங்கள் 13.09.2017ஆம் திகதிக்கு முன்னர் தாங்கள் பதிவுகளை 077 833 3093, 077 563 2775 என்ற தொலைபேசி இலக்கங்களோடு தொடர்பு கொண்டு உறுதிப்படுத்தவும். (க)

## ரதன் சிறப்பாட்டம்

# கம்பர்மலை யங்கம்பன்ஸ் காலிறுதிச் சுற்றுக்கு முன்னேற்றம்



ரதனின் சிறப்பாட்டம் மூலம் சென்.செபஸ்ரியன் விளையாட்டுக் கழகம் மற்றும்அண்ணாசிலையடி இளைஞர் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி காலிறுதிச் சுற்றுக்குள் கம்பர்மலை யங்கம்பன்ஸ் வி.கழகம் தெரிவாகியது.

உதயசூரியன் விளையாட்டுக் கழகம், வத்திராயன் நடத்தும் உதைபந்தாட்டத்தின் (10/09/2017) அன்று இடம் பெற்ற போட்டியில் யங்கம்பன்ஸ் வி.கழகத்தை எதிர்த்து சென்.செபஸ்ரியன் வி.கழகம் மோதியது. இறுதியாட்ட நேர முடிவில் 03:00 என்ற கோல் கணக்கில் யங்கம்பன்ஸ் வி.கழகம் வெற்றியீட்டியது.

இப் போட்டியில் சிறப்பான வெற்றியை பெறுவதற்கு இரண்டு கோல்களை போட்ட ரதன் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

யங்கம்பன்ஸ் அணிக்காக அஜய்குமார் ஒரு கோலினைப் பெற்றுக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்த இரண்டாவது போட்டியில் அண்ணாசிலையடி வி.கழகத்தை சமநிலை தவிர்ப்பு உதை முடிவில் வீழ்த்தி காலிறுதிச் சுற்றுக்குள் யங்கம்பன்ஸ் அணி முன்னேறியது.

இறுதி நேர முடிவில் இரு அணிகளும் எவ்வித கோல்களையும் பெறாத நிலையில் ஆட்டம் சமநிலையானது. வெற்றியை தீர்மானிப்பதற்காக வழங்குப்பட்ட சமநிலை தவிர்ப்பின் முடிவில்4:3 என்ற ரீதியில் யங்கம்பன்ஸ் வி.கழகம் வெற்றியீட்டியது. ஆட்ட நாயகனாக அண்ணா சிலையடி வி.கழக வீரர் தெரிவு செய்யப்பட்டார். (க)

# அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது றேஞ்சஸ்



வத்திராயன் உதயசூரியன் வி. க. நடத்தும் அணிக்கு 11 நபர் கொண்ட மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் காலிறுதிப் போட்டியில் உடுத்துறை பாரதி வி.கழகத்தை எதிர்த்து றேஞ்சஸ் அணி மோதியது.

ஆரம்பம் முதல் இரு அணிகளும் சிறப்பாக ஆடியது. ஆனால் முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் எவ்வித கோல்களும் பெறாது ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் சிறப்பாக ஆடிய அணிக்கு சிவறோயன் முதலாவது கோலினை போட முன்னிலை வகித்தது றேஞ்சஸ். பின்னர் மதுசாந் தொடர்ச்சியாக இரு கோல்களையும் ஆர்த்திகன் 1 கோலினையும் போட இறுதியில் 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

றேஞ்சஸ் அணி அவ் அணி சார்பாக மீதுசாந்- 2 கோலினையும் சிவறோயன், ஆர்த்திகன்-தலா 01 கோலினை போட்டனர். போட்டியின் ஆட்ட நாயகனாக மதுசாந் தெரிவு செய்யப்பட்டார். (க)

# யாழின் கில்லாடி யார் உதைபந்து

## கொற்றாவத்தை றேஞ்சஸ் வெற்றி



சரஸ்வதியின் யாழின் கில்லாடி யார் உதைபந்தாட்ட தொடர் (10.09.2017) அன்று அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் ஆரம்பமாகியது.

ஆரம்ப போட்டியில் மெலிஞ்சிமுனை இருதயராஜா வி. கழகத்தினை 3: 1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி.

இப் போட்டியில் ஆரம்பம் முதல் சிறப்பாக ஆடியது கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி. வீரர்களான சிவதாரன், கைலாஸ் ஆகியோர் நீண்ட தூரத்தில் இருந்து உதைத்த பந்துகள் கோலாக மாற இறுதியில் 3 : 1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி. அவ் அணி சார்பாக சிவதாரன் - 2 , கோலினையும் கைலாஸ்- 1 கோலினையும் பெற்றனர். போட்டியின் ஆட்ட நாயகனாக கைலாஷ் தெரிவு செய்யப்பட்டார். (க)

# வி.ரி.மகாலிங்கம் பிறிமியர்

## யாழ்.சென்றல் 2வது வெற்றி



வி.ரி.மகாலிங்கம் பிறிமியர் லீக் கிரிக்கெட் தொடரில் C பிரிவில்யாழ்.சென்றல் அணி, திருநெல்வேலி YMHA அணியை 15 ஓட்டங்களால் வெற்றி பெற்று தனது 2வது வெற்றியை பதிவு செய்துள்ளது. அண்மையில் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல்அணி 18.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 129 ஓட்டங்களை பெற்றது. பாலேந்திரா-26, ராஜீவ்குமார்-11, சுதர்சன்-21, சலிஸ்ரன்- 13, கவிதன்-14, கிரிசாந்தன்-19 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் திருநெல்வேலி YMHA அணியை சேர்ந்த பிருதீசன்-3, சுதாகரன்-2, சஞ்சீவன், சுபாஸ்கரன், டிசாந்தன் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய திரு நெல்வேலி YMHA அணி 18.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 114 ஓட்டங்களை பெற்றது. தேசிகன்-10,சஞ்சீவன்-21, டிசாந்தன்-13, அருண் ராஜ்-16, சுபாஸ்கரன்-18 ஓட்டங்களைபெற்றனர். களத்தடுப்பில் யாழ். சென்றல் அணியை சார்ந்த சலிஸ்ரன்-03, சுதர்சன்-02, கிரிசாந்தன், திருக்குமார், கானொட்ரி, ராஜீவ்குமார் தலா-01 இலக்கினை கைப்பற்றினர். இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 8ஆவது ஆண்டாக நடத்தும் தரவரிசை (RATING) பட்டியலுக்கு யாழ் சென்றல்விளையாட்டுக்கழகம் 4.4.4 புள்ளிகளையும்திருநெல்வேலிYMHA அணி 2.14 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டனர். (த)

# 43 ஆவது தேசிய விளையாட்டு

## ஆண்களுக்கான கராத்தே போட்டி

## முல்லை. இளைஞன் வெண்கலப்பதக்கம்

(குருமன்காடு)

43 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டியில் ஆண்களுக்கான கராத்தே போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட இளைஞன் வெண்கலப் பதக்கத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

விளை யாட்டுத் துறை அமைச்சினால் நடத்தப்படும் 43 ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஆண்களுக்கான கராத்தே போட்டி நிகழ்வு கண்டி மாவட்டத்தில் திகன பிரதேசத்தில் இம் மாதம் 6, 7ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இப் போட்டி நிகழ்வில் வடமாகாண முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த எம். குமார் வெண்கலப் பதக்கத்தை பெற்றுக்கொண்டார். இவர் 34-75 நிறை பிரிவில் வடமேல் மாகாண வீரருடன் காலிறுதிப் போட்டியில் மோதி 7:4 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்று தேசிய ரீதியிலான வெண்கலப் பதக்கத்தை பெற்றுக் கொண்டார். (க-250)



## வித்தியா வழக்கில்...

யூன் மாதம் 28ஆம் திகதி யாழ்.மேல் நீதிமன்றில் ஆரம்பமாகியது.

அன்றில் இருந்து குறிக்கப்பட்ட நாட்கள் வழக்கு தொடுநர் தரப்பு சாட்சியங்கள் எதிர் தரப்பு சாட்சியங்கள் என்பன தொடர்ச்சியாக நடைபெற்று முடிந்துள்ள நிலையில் நேற்றைய தினம் வழக்கு தொடுநர் தரப்பு தொகுப்புரை இடம்பெற்றது.

அந்த வகையில் வழக்கு தொடுநர் தரப்பில் இருந்து வழக்கை அரச சட்டவாதிகள் குழுவுடன் இணைந்து நெறிப்படுத்திய பிரதி மன்றாதிபதி பி.குமாரரட்ணம் தனது தொகுப்புரையை மன்றில் சமர்ப்பித்திருந்தார்.

அவர் தனது தொகுப்புரையில் மேலும் தெரிவிக்கையில்,

இது யாழ்ப்பாணம் புங்குடுதீவு பிரதேசததில் மாணவி வித்தியா என்பவரை கொலை செய்த சம்பவத்தின் வழக்கு விசாரணை. இந்த சம்பவத்தின் விசாரணைகளின் மூலம் முதலாம் எதிரியான பூ.இந்திரகுமார், 2 ஆம் எதிரியான பூ.ஜெயக்குமார், 3ஆம் எதிரியான பூ.தவக்குமார், 4ஆம் எதிரியான ம.சசிதரன், 5ஆம் எதிரியான நி.சந்திரகாந்தன், 6ஆம் எதிரியான சி.துசாந்தன், 7 ஆம் எதிரியான ப.குகநாதன், 8ஆம் எதிரியான ஜெ.கோகிலன், 9ஆம் எதிரியான ம.சசிகுமார் ஆகியோர் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் விசாரணைகள் இடம்பெற்று நிறைவுற்றன.

அதனடிப்படையில் சட்டமா அதிபரால் மேல் நீதிமன்ற பதிவாளருக்கு குறித்த வழக்கு தொடர்பில் வழக்கு தொடர்பான தகவல்கள் அடங்கிய அத்தாட்சிப்பத்திரம், குற்றச்சாட்டு பத்திரம், வழக்குடன் தொடர்புடைய சான்றுப்பொருட்கள், விசாரணை அறிக்கைகள் அனுப்பி வைக்கப்பட்டு பிரதம நீதியரசரால், இந்த வழக்கை நீதாய விளக்க முறையில் நடத்துவதற்கென 3 பிரதான நீதிபதிகள் நியமிக்கப்பட்டனர். அதன் படி வழக்கு யாழ் மேல் நீதிமன்றில் ஆரம்பிக்கப்பட்டது.

அந்த வகையில் 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி புங்குடுதீவு பகுதியில் சிவலோகநாதன் வித்தியா என்ற பெண்ணை வன்புணர்வு செய்யும் நோக்கத்துக்காக கடத்துவதற்கு சதித்திட்டம் தீட்டியமை, வன்புணர்வு நோக்கத்துக்காக கடத்தியமை, கூட்டாக சேர்ந்து வன்புணர்வு செய்தமை, கூட்டாக சேர்ந்து வன்புணர்வு செய்து கொலை செய்தமை போன்ற பிரதான குற்றங்களும் மேற்குறித்த குற்றங்களுக்கு உடந்தையாக இருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் உள்ளிட்ட 41 குற்றச்சாட்டுக்கள் எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்டது.

இதில் 9ஆம், 4ஆம் எதிரிகளுக்கு எதிராக பிரதான குற்றச்சாட்டாக, வித்தியாவை வன்புணர்வு நோக்கத்துக்காக கடத்துவதற்கு சதித்திட்டம் தீட்டியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. 2ஆம், 3ஆம், 5ஆம், 6ஆம் எதிரிகளுக்கு எதிராக மேற்குறித்த நான்கு பிரதான குற்றச்சாட்டுக்களும் சாட்டப்பட்டுள்ளன, 7 ஆம், 8ஆம் எதிரிகளுக்கு எதிராக மேற்குறித்த குற்றச்சாட்டுக்களுக்கு உடந்தையாக இருந்துள்ளதாக பிரதான குற்றச்சாட்டுக்களாக முன்வைக்கப்பட்டிருந்தது.

மேற்குறித்த குற்றச்சாட்டுக்களுக்கு தாம் சுற்றவாளிகள் என 9 எதிரிகளும் மன்றுரை செய்ததனையடுத்து தொடர் விளக்கம் கடந்த 28ஆம் திகதியில் இருந்து குறிக்கப்பட்ட நாட்கள் நடைபெற்றது.

இதில் முதலாம் சாட்சியாக வித்தியாவின் தாயார் அழைக்கப்பட்டிருந்தார். அவருடைய சாட்சியத்தின் அடிப்படையில் வித்தியா அன்றைய தினம் எங்கு எப்போது பாடசாலை சென்றிருந்தார் என்று தெரியப்படுத்தியதுடன் அவருடைய உடல் இறந்த இடத்தில் பெற்றுக் கொண்ட சான்றுப்பொருட்களை தனது மகளுடையது என அடையாளம் காட்டியிருந்தார்.

முதலாம் மற்றும் ஏழாம் எதிரிகளுக்கு எதிராக சாட்சிகள் எவையும் எம்பால் முன் வைக்கப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

2,3,5,6 ஆம் எதிரிகளுக்கு எதிராகசாட்டப்பட்ட குற்றங்கள், அரச தரப்பு சாட்சியாக மாறிய உ.சுரேஸ்கரன் மற்றும் ந.குகனேசன (மாப்பிள்ளை) என்பவர்களுடைய கண்கண்ட சாட்சியங்கள் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சம்பவ இடத்துக்கு அருகில் மேற்குறித்த நபர்களை கண்டதாக 3 சாட்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

மேலும் 4,8,9ஆம் எதிரிகள் புதிதாக விளக்கங்களை தெரிவித்திருந்தனர். தமக்கு பொலிஸார் சித்திரவதை செய்தார்கள் என்பதையே தொடர்ச்சியாக கூறியிருந்தனர். எமது ஆலோசனைகளை நிராகரித்திருந்தனர். அதிலும் குறிப்பாக 9ஆம் எதிரியான சுவிஸ் குமார், தனது திட்டம் நிறைவேறாத காரணத்தினால் சுவிஸ் செல்லாது இங்கு இருந்துள்ளார். அத்துடன் அவரது வருமானம் தொடர்பில் முரணான கருத்துக்கள் தெரிவித்துள்ளார். மேலும் இந்த கொலை தொடர்பான கருத்துக்களை அவர் சிறையில் இருக்கும் போது கைதி ஒருவருடன் பகிர்ந்து கொண்டுள்ளார். அந்த விடயங்கள் தொடர்பாக அந்த கைதியின் சாட்சியத்தின் மூலம் நிரூபணமாகியுள்ளது.

அத்துடன் இந்த 2,3,4,5,6,8,9ஆம் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் கண்கண்ட சாட்சிகள், சட்டவைத்திய அதிகாரி, குற்றப்புலனாய்வு விசாரணை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகளின் சாட்சியங்கள் அடிப்படையில் சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளது என தெரிவித்ததுடன் மேலும் இந்த வழக்கு விசாரணைகள் துரிதமாக இடம்பெற உதவிய அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இன்றைய தினம் எதிர் தரப்பு தொகுப்புரை இடம்பெறவுள்ளதுடன் மேற்குறித்த எதிரிகள் 9 பேரையும் இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர். (செ-9)

## பெற்றோல் குண்டு...

தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 12.40 மணிக்கு மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலில் வீட்டின் படுக்கை அறைக்கு அருகில் மூன்று குண்டுகள் விழுந்து வெடித்துள்ளது.

எனினும் தெய்வாதீனமாக எவருக்கும் உயிரிழப்புகளோ காயங்களோ ஏற்படவில்லை.

இந்நிலையில் இச் சம்பவம் தொடர்பாக சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் இனங்காணப்பட்டுள்ளார்.

அடையாளம் காணப்பட்ட சந்தேக நபர் அண்மைக் காலமாக யாழில் இடம்பெற்று வரும் வாள் வெட்டுக் குழுக்களுடன் தொடர்புடையவர் என்றும் இவருடைய மோட்டார் சைக்கிள் கோப்பாய் பொலிஸாரால் பறிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் மேற்படி சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (செ-85)

## தமிழரசுக் கட்சி...

ள்ளது. மேலும் தமிழரசு கட்சியின் இத்தகைய தீர்மானம் தமிழ் மக்களை நிச்சயமாக படுகுழிக்குள் தள்ளுவதாகவே அமையுமெனவும் இதற்கு எதிரான நிலைப்பாட்டை தமது கட்சி எடுக்குமெனவும், ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் சுரேஸ் பிரேமச்சந்திரனின் இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார். சந்திப்பில் மேலும் அவர் கூறுகையில், நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் 20ஆவது திருத்தச்சட்டத்தை நாம் ஆதரிக்கப்போவதாக கூறியிருக்கின்றார். அதற்கு அவர் கூறியிருந்த முக்கியமான காரணம் 20-வது திருத்தச்சட்டத்தில் தாங்கள் கூறியிருந்த சில திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதேயாகும்.

அதாவது 20-வது திருத்தச்சட்டத்திற்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டிருக்கும் நிலையில் மேற்படி 20-வது திருத்தச்சட்டத்தில் அரசாங்கம் செய்யவுள்ளதாக கூறப்படும் சில திருத்தங்களை சட்டமா அதிபர் நீதிமன்றில் கூறியுள்ளார். அந்த திருத்தங்களின் அடிப்படையிலேயே தங்கள் ஆதரவை வழங்கப்போவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறியதாக ஊடகங்கள் வாயிலாக அறிய கிடைக்கின்றது.

இதன்படி இலங்கையில் எதாவது ஒரு மாகாண சபை உரிய காலத்திற்கு முன்னர் கலைக்கப்பட்டால் மிகுதி காலம் 18 மாதங்களுக்கு அதிகமாக இருந்தால் இடைத்தேர்தலை நடத்துவதென்பது ஒரு திருத்தமாம். நாங்கள் கேட்கிறோம் மிகுதி சொற்ப காலத்திற்கு தேர்தலில் போட்டியிடுவதற்கு யார் வருவார்கள்? எவரும் வரமாட்டார்கள் காரணம் பெருமளவு பணம் தேவைப்படும். இது ஒரு புறமிருக்க 18 மாதங்களுக்கு குறைவாக மாகாண சபையின் மிகுதி காலம் இருந்தால் அந்த காலப்பகுதிக்கான ஆட்சி ஆளுநரிடம் கையளிக்கப்படும் என்பதை நாங்கள் கேட்கிறோம். இந்த 18 மாதங்களின் ஆட்சியை ஆளுநரிடம் வழங்கினால் குறிப்பாக வடகிழக்கு மாகாணங்களில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் கொண்டுவரப்படும், பௌத்தமயமாக்கல் சுதந்திரமாக நடக்கும், அரச திணைக்களங்களில் அரசாங்கத்திற்கு சார்பானவர்கள் களமிறக்கப்படுவார்கள்.

இவ்வாறு தமிழ் மக்களுக்கு பாதகமான பல செயற்பாடுகளை அரசாங்கம் செய்யும். எனவே இவ்வாறான நிலையில் 20வது திருத்தச்சட்டத்தை ஆதரிப்பதை ஈ.பி.ஆர்.எல்.எவ் வன்மையாக கண்டிக்கின்றது.

மேலும் 18 மாதங்களுக்கு அதிகமான காலம் உள்ள நிலையில் மாகாண சபை கலைக்கப்பட்டால் இடைத்தேர்தல் நடத்துவதென்ற தீர்மானம். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, ஐக்கிய தேசிய கட்சி, தமிழரசு கட்சி போன்ற பெரிய கட்சிகளுக்கு மட்டுமே பொருத்தமானதாக அமையும்.

அவ்வாறான நிலையில் பெரிய கட்சிகளின் இருப்பை நிலை நிறுத்தவே இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே 20-வது திருத்தச்சட்டத்தை ஆதரிக்கிறோம் என கூறும் சம்பந்தன், சுமந்திரன் போன்றவர்கள் இந்த விடயத்தை கவனத்தில் கொண்டிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் கவனத்தில் கொண்டிருப்பதாக தெரியவில்லை.

அவ்வாறு கவனத்தில் கொள்ளாமல் தீர்மானம் எடுத்திருப்பது ஜனநாயகம் மற்றும் அதிகார பகிர்வு பற்றி பேசக் கூடியவர்களுக்கு அழகானது அல்ல. இதே போல் கிழக்கு மாகாணத்தில் தமிழரசு கட்சி நன்கு திட்டமிட்டு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதாக கூறிக்கொண்டு 20-வது திருத்தச்சட்டத்தை அங்கீகரிக்க வைத்திருக்கின்றது.

இது அநாகரிகமான விடயமாகும். திருத்தங்கள் செய்யப்படும் என உயர் நீதிமன்றில் மட்டுமே கூறப்பட்டுள்ளது. நாடாளுமன்றில் கூறப்படவில்லை. நாடாளுமன்றில் கூறப்பட்ட பின்னர் என்ன பிரச்சினைகள் வரும் என எவருக்கும் தெரியாது. இவ்வாறான நிலையில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது ஆதரிக்கிறோம் என கூறுவது மிக வன்மையாக கண்டிக்கவேண்டிய ஒரு விடயமாக உள்ளது. எனவே திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டாலும், படாவிட்டாலும் 20-வது திருத்தச்சட்டத்தை தமிழ் மக்கள் எதிர்க்கவேண்டும், நிராகரிக்கவேண்டும்.

மேலும் 20ஆவது திருத்தம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் இதுவரையில் கலந்துரையாடப்படவில்லை. அப்படி இருக்கையில் தமிழ் மக்களுக்கு விரோதமான தொரு மேற்படி முடிவு தான் தோன்றித்தனமாக தன்னிச்சையாக எவ்வாறு எடுக்கப்பட்டது எனவே அந்த முடிவை மீள்பரிசீலனை செய்வதுடன் பாராளுமன்றத்தில் 20ஆவது திருத்தம் வருகின்ற போது அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவை வழங்கக் கூடாது. இருந்தும் கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சி ஆதரவை வெளியிடுத்தினாலும் ஈபி.ஆர்.எல்.எவ் அதனை எதிர்த்தே வாக்களிக்கும் என்றும் குறிப்பிட்டார்.

புதிய அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கை முன்னர் வெளிவர இருந்ததாகவும் சில பல காரணங்களால் அது இந்த மாதத்திற்குள் வெளிவர இருப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறியிருக்கின்றார். அவர் அரசாங்கம் சார்பாக பேசுகிறாரா, தமிழரசுக் கட்சி சார்பாக பேசுகிறாரா, அவர் யாருடைய பிரதிநிதியாக யாருடைய பேச்சாளராகப் பேசுகிறார் என்பது எனக்குத் தெரியாது.

இந்த அறிக்கை தொடர்பாக பிரதான இரு கட்சிகள் உட்பட பல கட்சிகளும் விவாதம் நடத்தியிருக்கின்றது. ஆனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அப்படியொரு விவாதத்தை நடத்தவில்லை. இந்த இடைக்கால அறிக்கை தயாரிக்கின்ற போது அரசுடனோ அல்லது வழிநடத்தல் குழுவிலோ சமஷ்டி, வடகிழக்கு இணைப்பு உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பில் பேசப்படவில்லை. இதனை அரசாங்கத்தினரே வெளிப்படையாகவும் கூறியிருக்கின்றனர்.

இவ்வாறானதொரு நிலையில் இடைக்கால அறிக்கைக்கு ஒரு பின் இணைப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று குறிப்பிட்டு தமிழரசுக் கட்சியில் அங்கம் வகிக்கக் கூடிய சம்பந்தன், சுமந்திரன் இணைந்து ஒரு பின்இணைப்பை கொடுத்திருக்கின்றனர். அதில் சமஷ்டி, வடகிழக்கு இணைப்பு, மதச் சார்பற்ற நாடு வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இது யாரை ஏமாற்றுவதற்காக கொடுக்கப்பட்டுள்ளது. இதனைக் கோருவதாக இருந்தால் வழிநடத்தல் குழுவில் ஏன் அதனை வெளிப்படுத்தவில்லை. அரசுடன் ஏன் இது குறித்து பேசப்படவில்லை. இதற்கான முடிவு எட்டப்படவில்லை. இவ்வாறான நிலைமைகள் இருக்க இப்போது இந்த விடயங்களை உள்ளடக்கி பின்இணைப்பைக் கொடுக்க வேண்டியதற்கான காரணம் என்ன? அதாவது மேற்படி எல்லா விடயங்களையும் நாங்கள் கொடுத்தோம் அரசாங்கம் ஏற்கவில்லை என்று சொல்வதற்காகவா? எனினும் இந்த பினனிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அரசாங்கத்துடனோ வழிகாட்டல் குழுவிலோ பேசப்படவில்லை என்பது தான் உண்மையாகும்.

இவ்வாறானதொரு நிலைமையில் சம்பந்தனைப் பொறுத்தவரையில் ஐ.நா சபைக்கு கடிதம் எழுதுகின்றதொரு நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அதாவது இந்த அரசாங்கம் அரசியலமைப்பு உருவாக்கத்தில் காலம் கடத்துகிறது. ஆகவே அதனை கொண்டு வருவதற்கு நீங்கள் ஒத்தாசையாக இருக்க வேண்டும் வருகிறவர்கள் போகிறவர்களுடன் பேசத் தொடங்கியிருக்கிறார் என சுரேஸ்பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்தார். (செ-4)

## வாக்குமூலம் அளிக்க யோசித வரவில்லை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகனான யோசித ராஜபக்ஷ நேற்று நிதி குற்ற விசாரணைப் பிரிவில் ஆஜராகவில்லை என தெரியவந்துள்ளது.

வாக்குமூலம் ஒன்றை அளிக்க யோசிதவுக்கு நேற்று நிதி குற்ற விசாரணைப் பிரிவில் ஆஜராகுமாறு முன்னதாக, தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

எனினும் தனிப்பட்ட காரணங்களுக்காக யோசித நேற்று அங்கு செல்லவில்லை என அவரது சட்டத்தரணி பிரேமலால் சி.தொலவத்தை குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இது தொடர்பில் நிதி குற்ற விசாரணைப் பிரிவினருக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (செ-11)

## உணவுப்பொதியில்...

யொருளை மறைத்து அதை சிறையிலுள்ள கைதி ஒருவருக்கு சந்தேக நபர் வழங்க முற்பட்டுள்ளார். இதன்போது சந்தேக மடைந்த சிறைச்சாலை பாதுகாவலர்கள் உணவுப் பொதியினை சோதனையிட்டு அதனுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த போதைப் பொருளை கண்டு பிடித்துடன் யாழ்.பொலிஸாருக்கும் தகவல் வழங்கியுள்ளனர்.

இதன்போது குறித்த சந்தேக நபரை கைது செய்துள்ள யாழ்ப்பாண பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-9)

## 2 கிலோ கஞ்சா...

யினைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர். இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 09 மணியளவில் நடை பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலிற்கமைய திடீர் பரிசோதனை நடவடிக்கையின்போது யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி கொண்டு வரப்பட்ட 2 கிலோ 240கிராம் நிறையுடைய கேரளக் கஞ்சா பொதி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதன்போது கஞ்சா பொதியினை தனது உடமையில் வைத்திருந்த யாழ்ப்பாணம் கரவெட்டி பகுதியை சேர்ந்த 23 வயதுடைய இளைஞரை சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்துள்ளனர்.

கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன். கைதான சந்தேக நபரிடம் விசாரணைகள் முடிந்ததும் வவுனியா மாவட்ட நீதிமன்றில் அவரை முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த மாதத்திற்குள் மட்டும் ஒன்பதுக்கும் மேற்பட்ட சந்தேக நபர்களை கேரளக் கஞ்சாவுடன் வவுனியா அரச பேருந்து நிலையத்தில் வைத்து கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத் தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(செ-15-250)


PSP Rent a Car
Thirunelvely
(யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் முன்பாக)
கார்கள் நாள், கிழமை, மாதம் அடிப்படையில் வாடகைக்கு
+Prius hybrid - CAT
+Premio - CAB
+Premio - KF
+Axio - KM
+Axio - KL
+Axio - KI
+Nissan 16 - KD
+Nissan 15 - KD
+Alto - KI
+Indica - KI
+Dawoo - 18
தொடர்பு: 0773777502, 0716748492





தேவை
அளவெட்டியில் இயங்கும் பாமசிக்கு பெண் உதவியாளர் தேவை. ஆங்கில அறிவுடையவர் விரும்பத்தக்கது. தொடர்பு: 077 724 3091



புதிய பிரிவுகள் ஆரம்பம்
வங்கியியல் கற்கை நெறிகள்
Banking courses
IABF & DABF
(tamil & English medium)
Qualification:- G.C.E.O/L 6 passes with 5 Credits including maths
ஆரம்பம் :- 23/9/2017
கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Executive Level & Business level
(tamil & English medium)
Qualification :- G.C.E A/L 3 Passes
Note:- 2017 பரீட்சை எடுத்த மாணவர்களும் பதிவு செய்யலாம்
ஆரம்பம் :- 23/9/2017 (C-9534)
Students Awaiting (A/L) Results
Enrich Your Proficiency in English
Certificate Course in English
15 Batches have Successfully Completed the Course Register your names before 23/9/2017
Further Details : Jaffna college
Undergraduate dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382/0212229149


## சிறுமி மீது வன்புணர்.

தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த 09.09.2012 புதுக்குடியிருப்பு 02ம் வட்டாரம் கோம்பாவில் பகுதியில் தனது மனைவியின் சகோதரியின் மகளின் மகளான 12 வயதுடைய சிறுமி ஒருவரை 53 வயதுடைய உறவுமுறையானவர் பாலியல் வன்புணர்வுக் குற்றம் புரிந்துள்ளார்.

இதனையடுத்து சிறுமியின் தாயார் மேற்கொண்ட முறைப்பாட்டினை அடுத்து குறித்த நபரை கைது செய்த புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியிருந்தனர்.

வழக்கு விசாரணைகள் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்ததுடன் சந்தேக நபர் ஆறு மாதங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கடந்த 29.05.2017 அன்று சட்டமா அதிபர் திணைக்களத்தினால் குற்றப்பகர்வு பத்திரம் வவுனியா மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்தது.

சாட்சியங்களின் சாட்சியங்கள் நெறிப்படுத்தப்பட்டு நேற்று முன்தினம் தீர்ப்பிற்கு திகதியிடப்பட்டிருந்தது. இதனடிப்படையில் வழக்கு விசாரணைகளை மேற்கொண்ட வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன், எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டிற்கு 15 வருட கடூழிய சிறைத்தண்டனையும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரூபாய் இரண்டு இலட்சம் நஷ்டஈடு செலுத்துமாறும் அதைச் செலுத்தத் தவறின் இரண்டு வருட கடூழிய சிறை அனுபவிக்க வேண்டும் எனவும் தண்டப்பணமாக ரூபாய் பத்தாயிரத்தையும் செலுத்துமாறும் அதைச் செலுத்தத் தவறின் ஒரு மாதம் சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும் எனத் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

இவ்வழக்கில் அரச தரப்பில் அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் வழக்கினை நெறிப்படுத்தியிருந்தார். (செ-250)

## 12 இந். மீனவர்கள்...

காங்கேசன்துறை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் அவர்களை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் எம். எம்.ரியால் உத்தரவிட்டுள்ளார்.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவர்களின் இரண்டு படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

வடக்கின் நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டு. கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்ட நிலையில் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இலங்கை கடற்படையினரால் மேற்கொள்ளப்படும் தொடர் கைதுகளுக்கு தமிழக மீனவர்கள் தமது கடும் எதிர்ப்பை வெளியிட்டுவருவதுடன், அது தொடர்பில் மத்திய மற்றும் மாநில அரசாங்கங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்திவருகின்றனர்.

கடந்த 31 ஆம் திகதி இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த போது 70ற்கும் அதிகமான இந்திய மீனவர்கள் நல்லெண்ண அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

அதேகாலப் பகுதியில் இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் எட்டு தமிழக மீனவர்களை கடற்படையினர் கைது செய்திருந்தனர்.

கடந்த மூன்று ஆண்டுகளில் மாத்திரம் தமிழகம் மற்றும் புதுச்சேரியை சேர்ந்த 178க்கும் அதிகமான படகுகளை இலங்கை கடற்படையினர் சிறைபிடித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளது.

சிறைபிடிக்கப்பட்ட படகுகளையும் விடுவிக்க வேண்டும் என தமிழக மீனவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருவதுடன், அவ்வப்போது ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


உடனடி வேலை வாய்ப்பு
V2 TRAVELS
UK-550/-Kg
விமானப் பயணச் சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
நீண்ட காலமாக வேலை தேடுபவரா?
தகுதி:- 30 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)
0768226241



விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
UK - 550/= (C-9578)
CANADA - 400/= மட்டுமே
V2 TRAVELS- 0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை



CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
CNR World Wide Express
இல 401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us cnrworldwideexpress
(சி-9605)




## பந்துலவிடம் வாக்கு..

பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதிர்ஷ்ட இலாபச் சீட்டு அச்சிடுதல் தொடர்பாக, நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன வெளியிட்ட கருத்து சம்பந்தமாக வாக்குமூலம் பெறுவதற்காகவே, அவரது வீட்டுக்கு சென்றுள்ளதாக, பொலிஸார் தகவல் தெரிவித்துள்ளனர். (செ-11)

## 2018 ஜனவரியில்...

பிரிய தெரிவித்தார்.

இதற்கமைய, ஜனவரி 06, 20 மற்றும் 21ஆம் திகதிகளில் தேர்தலை நடத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், எம்மால் முடிந்த அளவுக்கு தேர்தலை வெகுவிரைவில் நடத்த முயற்சித்து வருகின்றோம். இருப்பினும், பிரதான கட்சிகளில் வேட்பாளர்களை தெரிவு செய்ய சந்தர்ப்பம் வழங்க வேண்டியுள்ளது. அதில் பெண்கள் பிரதிநிதித்துவத்தை 25 சதவீதமாக நிச்சயம் அதிகரிக்கப்படும். அவ்வாறு பெண்களின் பிரதிநிதித்துவத்துக்கு வாய்ப்பளிக்காத கட்சிகளின் வேட்பாளர்களின் பெயர்கள் நிராகரிக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார். (செ-11)


உடனடி வேலைவாய்ப்பு
உலகளாவிய ரீதியில் விஸ்தரிக்கப்பட்டுள்ள எமது TELESEEN நிறுவனமானது இலங்கையின் வட பகுதியில் புதிய கிளைகளை ஆரம்பிக்கவுள்ளது. அக்கிளைகளுக்கு அலுவலக ரீதியான வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.
➤இவ்வருட A/L பரீட்சைக்கு தோற்றியவர்களுக்கும் அனுமதி உண்டு. (C-9621)
தொடர்பு:- 077 298 6763, 077 062 1631, 077 039 3160


## மக்களின் காணிகள்..

தேச செயலாளர் எஸ்.கிருஸ்ணேந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த காலயுத்தம் காரணமாக கடந்த 1992ம் ஆண்டு தமது பூர்வீக மண்ணை விட்டு வெளியேறிய மக்கள் அப்பகுதிக்கு சென்று தங்கி வாழ்வதற்கும் தொழில் செய்வதற்குமான அனுமதியைக்கோரி கடந்த 2010-ம் ஆண்டுமுதல் கோரிக்கைவிடுத்து வந்த போதும் இதுவரை அவர்கள் அனுமதிக்கப்படாத நிலையில் கடந்த மே மாதம் முதலாம் திகதி முதல் தொடர்ச்சியாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இரணைதீவில் சென்று தங்கி மீன்பிடியில் ஈடுபடுவதற்கு கடற்படையினர் அனுமதி மறுத்து வருகின்றனர். இந்நிலையில் குறித்த பகுதியில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு அதிகளவான எரிபொருள் செலவு காணப்படுவதாகவும், பிரித்தானியர் காலத்தில் வழங்கப்பட்ட தமது உறுதிக்காணிகளில் மீள்குடியேற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பல்வேறு போராட்டங்களில் குறித்த பகுதி மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்

இரணைதீவு மக்கள் தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்து வந்த நிலையில் கடந்த 31ம் திகதி பூநகரி கடற்படை முகாமில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில், மக்கள் வசித்த காணிகளை விடுவிப்பதற்காக நில அளவீடு செய்வதற்கு கடற்படையினர் இணக்கம் தெரிவித்திருந்தனர். குறித்த கலந்துரையாடலில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் ஆலயப்பங்குத்தந்தை, கடற்படையினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்படி நேற்று இரணைதீவில் மக்கள் குடியிருந்த பகுதியை அடையாளம் கண்டு நில அளவீடு செய்வதற்கான குழு கடற்படையினருடன் இரணைதீவுக்கு சென்று திரும்பியுள்ளது. கடந்த 31-ம் திகதி பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தலைமையில் நியமிக்கப்பட்ட பூநகரிப்பிரதேசசெயலாளர், இரணைதீவைச்சேர்ந்த மக்கள் பிரதிநிதிகள், பங்குத்தந்தை, நில அளவைத்திணைக்கள அதிகாரிகள் அடங்கிய குழுவினரே இவ்வாறு இரணைதீவிற்குச்சென்று காணிகளை அடையாளம் காணும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இவ்விடயம் தொடர்பில் பூநகரிப் பிரதேச செயலாளர் எஸ்.கிருஸ்ணேந்திரனிடம் தொடர்புகொண்டுகேட்டபோது, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திற்கு அமைவாக இன்றைய தினம் (நேற்று) கடற்படையினருடன் இரணைதீவிற்குச் சென்று பொதுமக்கள் வாழ்ந்த காணிகள் முன்னர் அளவீடு செய்யப்பட்ட நடுகை செய்யப்பட்ட எல்லைக்கற்கள் என்பன அடையாளம் காணப்பட்டிருக்கின்றன.

பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகள் 186 ஏக்கர் மற்றும் அடையாளப்படுத்தப்பட்ட எல்லைக் கற்கள் என்பன இனங்காணப்பட்டிருக்கின்றன.

அடுத்த கட்டமாக நிலஅளவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் இரணைதீவில் தங்கி நின்று நிலஅளவை செய்கின்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்(செ-15-315)


வேலைவாய்ப்பு
சர்வதேச வலையமைப்பைக் கொண்ட DMI நிறுவனமானது இலங்கையில் ஆரம்பிக்கவுள்ள புதிய கிளைகளுக்கான பல்வேறு பதவிகளுக்கு நாட்டின் அனைத்து பகுதிகளிலிருந்தும் விண்ணப்பதாரர்களை எதிர்பார்க்கின்றது. கல்வித் தகைமை O/L, A/L வயது (18-30) Office Staff 14, Customer Services 12, Sales Officer 5, Training Manager 15, Helpers 13. மாத வருமானம் (18,000/= - 21,000/=) பதவிக்கு ஏற்ப பயிற்சி, உணவு, தங்குமிடம் என்பன இலவசம். பயிற்சியின் பின் (45,000/= - 68,000/=) வரை. (3-43)
0777009820, 0775127011


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.